கலைமகள்

4/2



OFFICE OF THE REGISTRAR OF
26 JUL 1941
MADRAS

விஷு வரு

1941

6 As அணா

வைகாசி மீ

MAY

உங்கள் அன்பிற்குகந்த மூவரின்




செம்மங்குடி
சீனிவாச ஐயர்

ராஜமாணிக்கம்
பிள்ளை



பாலக்காடு
மணி ஐயர்



நடியன்

புதிய ரிகார்டில்

சாலாகல்லு (ஆரபி)

பாகம் 1 & 2

கேளுங்கள்



G.H.RAO.

SARASWATHI STORES, MADRAS.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
ரிகார்டுகளில்

ஸ்ரீமதி விச்வேச்வரம்மாவும்
மாஸ்டர் கருடும் பாடிய
புதிய
துவைத கீதங்களை *
"எச்.எம்.வி." கிராமபோனிலே
சகஜமாதுர்யத்துடன் பாடு
வித்துக் கேட்டானந்தி
யுங்கள்!



* புதிய வெளியீடு
N. 18122
{ அன்பில் இன்பம்
{ தெய்வ முக்திக்தும்

மே மாத
வெளியீட்டில்
இதர ரிகார்டுகள்

N. 18121
டாக்டர் ஆர். ருக்மினி
{ சொல்லுவோம் வைஷ்ணவ
(சங்கு சுப்ரமண்யம்)
{ மணம் நிறை மலரே

● இங்கே காணும் "எச் எம். வி." போர்ட்டபிள் கிராமபோன் மாடல் நெ. 102 (கறுப்புநிறம்)ன் விலை ரூ. 105/- மட்டுமே.

எல்லா 'எச். எம். வி.' கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

இன்ஷ்யூர்

செய்யுங்கள்

ஜூபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களைக் கவனிக்கும்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்கார், பஸ்கள்,
டாக்ஸிகள், தொழிலாளர் நஷ்ட ஈடு

சமுத்திரம்

சாதனம் ரெயில்வே சாதனம்

தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
வாக்களிக்கப்பட்ட மூலதனம்

ஒன்றரைக் கோடி ரூபாய்

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்: 99, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.

பிராஞ்சு மானேஜர்: N. வேங்கடராம அய்யர்.

SRIMAD

Valmiki Ramayanam

COMPLETE WITH INDEX

Special Features of our edition:

(1) Ours is an Authoritative Text of the Great Epic;

(2) Printed in fine Devanagari Types on special costly paper;

(3) Has Seventeen (17) Tri-Colour Half-tone Illustrations;

(4) Its very neat and attractive binding;

(5) Complete index of verses and proper names.

Indispensable for Daily Parayanam. Order your Copy immediately

THICK PAPER EDITION .. Rs. 4 0 0

SPECIAL THIN PAPER EDITION ... Rs. 5 0 0

(Postage or Rail Charges extra. Free Packing)

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

"சகுந்தலை"

படத்தில் பாடியுள்ள

உங்கப்பன் மகனே சிங்கம்டா

செம்படவர்கள்—கடவுளே

காமிக் பிளேட்டைக் கேட்கவும்

— மாடர்ன் மியூஸிகல் மார்ட் —

289, சைனுபஜார் ரோட், மதரஸ்.

ஆரம்ப பாடசாலைக்குரிய

எமது புதிய தமிழ்ப் பிரசுரங்கள்

இவைகள் புதிய பாடதிட்டத்தை

அனுசரித்து எழுதப்பட்டவை.

நமது

தாய்மொழி வாசகம்

ஆசிரியர்

N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

முதற் புத்தகம்	...	0	2	6
இரண்டாம் புத்தகம்	...	0	3	6
மூன்றும் புத்தகம்	...	0	4	6
நான்காம் புத்தகம்	...	0	5	0
ஐந்தாம் புத்தகம்	...	0	6	0

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

4, பிரான்ஸிவ்ஸ் ஜோசப்புத் தெரு,

சென்னை.

கல்கி

தொகுதி ககூ] விஷு ஹேவிளம்பி மீன [பகுதி ககஊ
மே, 1941


பொருளடக்கம்

1. வித்துவான் தியாகராச செட்டியார் — மகாமகோபாத்திய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 513
2. இரண்டு உபநிஷத்துக்கள்—சி. சுப்பிரமணிய பாரதியார் ... 521
3. மாங்குடி சிதம்பர பாகவதர் (படத்துடன்)—ராவ் பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். ... 525
4. சரித்திர ஆதாரங்களும் சாஸனங்களும்—தி. நா. சுப்பிரமணியன் ... 529
5. சாந்தி—து. ராமமூர்த்தி ... 537
6. நீர்க்குமிழி—எப். டபிள்யு. பெயின் (கி. சாவித்திரி அம்மாள் மொழிபெயர்ப்பு) ... 544
7. "பங்காளி"—எஸ். ராமன் ... 554
8. ஐவர்மலை (படங்களுடன்)—ஜே. எம். சோம சுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல். ... 559
9. ஸ்வர்க்கம் தந்த வரம்—கவி பச்சன் (கா. ஸ்ரீ. ஸ்ரீனிவாஸாசாரியார் மொழிபெயர்ப்பு) ... 562
10. வித்தியானந்தன் (படத்துடன்)—ஸரோஜா ... 566
11. ரேலடிவிடி அல்லது சார்புநிலைக் கொள்கை (படத்துடன்)—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். ... 572
12. என் புத்தகங்கள்—"குமுதினி" ... 578
13. ராமதீர்த்தரின் உபதேசக் கதைகள்—ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ. ... 582
14. களவியல்—'வாவிஷ்டன்' ... 586
15. நாடோடிப் பாட்டுக்கள்—பி. கோதண்டராமன், எம்.ஏ., பி.எல். ... 589
16. ஸௌந்தர்ய நர்த்தனம்—டாக்டர் வே. ராகவன், எம்.ஏ., பிஎச்.டி. ... 598
17. எதிர்பாராதது—கௌரி ... 606
18. குரங்கு சொன்ன யுக்தி (படங்களுடன்)—'ஸோனு' ... 613

முகப்புப் படம்

தண்டலம் கோபால ராவ்

விஸ்வா & கோ
ஆர்டிஸ்ட்ஸ், பிளாக் அண்ட் ரப்பர்
ஸ்டாம்பு மேக்கர்ஸ்
50, வாலாஜா ரோட்,
மவுண்ட் ரோட், மதராஸ்



தண்டலம் கோபால ராவ்



வித்துவான் தியாகராச செட்டியார்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

7

"தண்ணீருங் காவிரியே"

தமிழ் நாட்டில் தம் பெயரை நிலை நிறுத்தியவர்களில் இராமநாதபுரம் ஸம்ஸ்தான மானேஜராக இருந்த ஸ்ரீ பொன்னு சாமித் தேவர் ஒருவர். அந்த ஸம்ஸ்தானத்தின் நிர்வாகத்தை மிகச் சிறப்பாகவும் ஒழுங்காகவும் அவர் நடத்தி வந்தார். சிறந்த மதியூகியாகிய அவர் ஸம்ஸ்தானத்தை நிர்வாகம் செய்து வந்த காலத்தில் அவரது அதிகாரத்தின் கீழே குடிகளும் வித்துவான் களும் நன்மை பெற்றனர். ஸம்ஸ்தானத்தின் செல்வநிலையும் பெருமையும் உயர்ந்தன. மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவிநடத்தி வந்த ஸ்ரீ பாண்டித்துரைத் தேவருடைய தந்தையார் அவர்.

அவர் அருங்கலை விநோதர். மிகவும் அழ்காகப் பிர சங்கம் செய்வார்; கேட்போர் மனத்தைக் கவரும்வண்ணம் செய்யுட்களுக்கு விரிவாக உரை கூறுவார்; சிலேடை நயம் அமை யவும் சமயோசித சாதுரியம் புலப்படவும் பேசுவார்; ஏதேனும் ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டு காரணகாரியங்களுடன் வாதம் செய்வார்; செய்யுள் இயற்றுவார்.

நன்றாகப் படித்தவராகையினால் தரம் அறிந்து பாராட்டும் திறமை அவரிடம் அமைந்திருந்தது. தம்மிடம் வரும் வித்து வான்கள் இன்ன இன்ன துறையில் வல்லவர் என்பதை அறிந்து அவரவர்களுக்கேற்ற கேள்விகளைக் கேட்டு அவர்களது கல்வியாழத்தைப் பார்ப்பார். திறமை மிக்க வித்துவான்கள்

அவரால் பரீட்சிக்கப் பெறுதலை ஒரு கௌரவமாகவே கருதினர். அவர்பால் வரும் வித்துவான்கள் வைரமணிகளைப் போல் இருந்தனர். அவர் சாணைக்கல்லாக இருந்தார். அவ்வித்துவான் கள் அதன் பிறகு அதிகப் பிரகாசத்தை அடைந்தார்கள்.

பொன்னுசாமித் தேவர் ஸம்ஸ்தான காரியமாக ஒரு முறை சென்னைக்குப் பரிவாரங்களுடன் பிரயாணமானர். அக்காலத் தில் அந்நகரத்திற்கு இருப்புப்பாதை ஏற்படாமையால் இடை யிடையே தங்கித் தங்கிச் செல்ல வேண்டியிருந்தது. இராமநாத புரத்திலிருந்து புறப்பட்டவர் இடையே திருச்சிராப்பள்ளியில் தங்கினர். அப்பொழுது அவர் தியாகராச செட்டியாரைப் பார்க்க விரும்பினர். செட்டியாரோ, பிள்ளையவர்களோ அந்தப் பிரபுவை அதற்கு முன்பு பார்த்ததில்லை. வலிந்து சென்று பார்க்கும் வழக்கம் பெரும்பாலும் அவ்விருவர்களிடமும் இல்லை.

பொன்னுசாமித் தேவர் குறிப்பை அறிந்த ஒருவர் ஸ்ரீரங் கத்துக்கு வந்து தியாகராச செட்டியாரைப் பார்த்துப் பொன்னுசாமித் தேவர் திருச்சிராப்பள்ளிக்கு வந்திருப்பதையும் செட்டியாரைப் பார்க்கும் விருப்பம் அவருக்கு இருப்பதையும் சொன்னர். செட்டியார் உடனே பெருமகிழ்ச்சியுடன் சென்று தேவரைக் கண்டு பேசி இன்புற்றார். இருவரும் ஒருவருக் கொருவர் தம் தம் அறிவுத்திறத்தைப் புலப்படுத்தும்வண்ணம் சம்பாஷணை செய்தனர்.

அவ்வாறு பேசிக்கொண்டே இருக்கையில் பொன்னுசாமித் தேவர் மெல்லத் தியாகராச செட்டியாரை ஒரு வாதத்தில் ஈடு படும்படி செய்தார். பாண்டியநாடு சோழ நாடு என்னும் இரண் டில் எது சிறந்ததென்ற விஷயமாக இருவரும் வாதம் செய்ய லாயினர். அருகில் பலர் இருந்து அவ்வாதத்தைக் கவனித்து வந்தனர்.

பொன்னுசாமித் தேவர் பாண்டிநாடே சிறந்ததென்பதற் குரிய நியாயங்களை எடுத்துரைக்கலானர்: "சிவபெருமான், உமா தேவியார், முருகக் கடவுளென்னும் மூவரும் ஆட்சி புரிந்தது பாண்டிய நாடு. அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் சோம சுந்தரக் கடவுள் இயற்றுவதற்கு இடமானது இந்த நாடு. ஞான சம்பந்தர் சைவத்தை இந்நாட்டில்தான் நிலைநிறுத்தினர். தமிழை வளர்த்த சங்கம் பாண்டி நாட்டில்தான் இருந்தது. தமிழ் நாடென்ற பெயரே பாண்டி நாட்டுக்கு உரியது. தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியர் எழுந்தருளிய பொதியமலை

பாண்டி நாட்டைச் சார்ந்தது. வையை, தாமிரபர்ணி என்ற இரண்டு நதிகளும் பல மலைகளும் முத்தெடுக்கும் கொற்கைத் துறையும் உடையது இந்நாடு. திருமால் மச்சாவதார மெடுத்தது வையை நதி நீரிலென்று பாகவதத்தில் கூறியிருக்கிறது'' என்பன போன்ற பல காரணங்களை அவர் சொன்னார்.

தியாகராச செட்டியார் சோழ நாட்டின் சிறப்புக்களை எடுத்துச் சொல்லலானார்: "சிவபெருமான் திருவாரூரில் அரசு புரிந்தார். மூந்நூற்றறுபது லீலைகள் செய்தார். சைவர்களாலும் வைஷ்ணவர்களாலும் கோயிலென்று பாராட்டப். பெறுவன வாகிய சிதம்பரமும் ஸ்ரீரங்கமும் இந்நாட்டிலே உள்ளன. சோழர்கள் பல சிறந்த திருக்கோயில்களைக் கட்டி இந்நாட்டை அழகுபடுத்தி இருக்கின்றனர். சைவத்தை நிலை நிறுத்திய ஞானசம்பந்தர் திருவவதாரம் செய்தது இந்நாட்டிலேயே. கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இந்நாட்டுக்கு உரியவரே. எல்லாவற்றிற்கும் மேலாகப் பொய்யாத காவிரியைத் தனக்கு அணிகலமாக உடையது சோழ நாடே'' என்றும் பிறவாறும் சொல்லி வாதம் செய்தார்.

வாதம் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே வந்தது. ஒருவரும் சளைக்கவில்லை. நெடு நேரமாகிவிட்டமையின் ஒருவாறு வாதம் செய்வதை நிறுத்தித் தேவர் செட்டியாரோடும் வேறு சிலரோடும் காவிரிக் காட்சியைப் பார்க்கப் புறப்பட்டனர். போகும் போது வேறு பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே சென்றனர். காவிரிக்குப் பாலம் போட்டுச் சில வருஷங்கள் ஆகியிருந்தன. புது வெள்ளம் வந்திருந்தமையால் நதி இருகரையும் புரண்டோடியது. பாலத்தில் யாவரும் சென்று இடையில் ஓர் இடத்தில் நின்று கொண்டனர். மாலைவேளை. இனிய காற்று வீசிக்கொண்டிருந்தது. காவிரியின் இருகரையிலும் கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் ஒரே பசுமையான தோப்புக்கள் இருந்தன. திரிசிராமலை தென்பக்கம் உயர்ந்து நின்றது. அந்தக் காட்சியிலே ஊன்றி மெய்ம்மறந்து நின்ற பொன்னுசாமித் தேவர், "என்ன காட்சி! என்ன அழகு! தமிழ் மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியார் தெரியாமலா சொன்னார்!'' என்று சொல்லி,

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணுவ துஞ்சோழ மண்டலமே—பெண்ணுவாள்

அம்பர்ச் சிலம்பி அரவிந்த மேமலராம்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

என்ற செய்யுளை வாயாரச் சொன்னார். அருகில் இருந்த தம் ஸம்ஸ்தானத்து அதிகாரிகள் சிலரிடம், "இக் காட்சியைப் பார்த்தீர்களா? என்ன ஆனந்தமாக இருக்கிறது!" என்று கூறி விம்மிதமுற்று நின்றார்.

அங்கே நின்றுகொண்டிருந்த செட்டியாருக்கு அந்தக் காட்சி தினந்தோறும் பார்த்துப் பழகியதுதானே? ஆதலின் அவர் அதில் கருத்தைச் செலுத்தவில்லை; ஆனால் பொன்னுசாமித் தேவர் தம்மையே மறந்து காவிரிக் காட்சியில் ஈடுபட்டிருப்பதை அவர் கவனித்தார். ஔவையார் பாடலைத் தேவர் சொல்லிப் பாராட்டியவுடன் செட்டியார் அதுதான் சமயமென்று துணிந்து முன்னே வந்து கையைக் கொட்டி, "என் கட்சி ஜயித்தது! தங்கள் உள்ளத்தில் தோன்றிய உண்மைதானே வெளிப்பட்டுவிட்டது. ஔவையார் கூறிய பாடலைத் துரையவர்களே ஒப்புக்கொண்ட பிறகு நான் செய்த வாதம் பலித்ததென்பதில் என்ன தடை?" என்றார்.

பொன்னுசாமித் தேவர் திரும்பிப் பார்த்தார். அவர் விழித்துக்கொண்டார். தம்மை அறியாமலே வியப்பு மிகுதியாற் பரவசமாகித் தாம் கூறியவற்றைச் செட்டியார் அனுகூலமாக்கிக் கொண்டாரென்று அறிந்தார்.

"என்ன சொல்கிறீர்கள்? நான் சொன்ன பாடல் என் கட்சிக்கல்லவா அனுகூலமாக நிற்கிறது?" என்று திடீரென்று மடையை மாற்றினார்.

செட்டியார், "எப்படி?" என்று கேட்டார்.

"அந்தப் பாட்டில் உள்ள ஏகாரங்கள் எதிர்மறைப் பொருளில் வந்தன. தண்ணீருங் காவிரியே? அன்று; பொருநையாறல்லவோ? மிகத் தெளிவுள்ள நீரைப் பெற்ற அதுதான் சிறந்தது; இதோ பாருங்கள்: இந்த நீர் கலக்கமாகவல்லவோ இருக்கிறது? தார்வேந்தன் சோழனே? பாண்டியர்களே அன்றோ? ஐந்து நிலங்களையும் உடைய நாட்டை ஆளும் பெருமை அவர்களுக்குத்தானே உண்டு?"

தேவர் மேலும் விரித்துக்கொண்டே போனார். தோல்வியுற்ற வீரன் இருமடங்கு கோபத்துடன் எழுவது போல அவர் மிக்க வேகத்துடன் பேசலானார். செட்டியார் ஒன்றும் மறுத்துப்

பேசவில்லை; "இந்தமாதிரி செல்வத்திலும் கல்வியிலும் சிறந்த பிரபுக்களைப் பார்ப்பது அருமையிலும் அருமை" என்று பாராட்டி அந்த வாதத்திற்கு ஒரு முடிவு கட்டினர்.

பொன்னுசாமித் தேவர் செட்டியாருக்குச் சில சம்மானங்களைச் செய்துவிட்டு மறுநாளே சென்னையை நோக்கிப் புறப்பட்டார்.

8

எழுத்துப்பேறு தந்த பேறு

இப்போது கும்பகோணத்தில் காலேஜாக இருக்கும் கல்வி நிலயம் ஆரம்பத்தில் மாகாணப் பள்ளிக்கூடம் (Provincial School) என்ற பெயரோடு உயர்தரப் பாடசாலையாக இருந்தது. அங்கே போர்ட்டர் துரையென்பவர் தலைமையாசிரியராக இருந்தார். அவருக்கு அடுத்தபடியாகத் தண்டலம் கோபால ராவ் ஆசிரியராக இருந்தார். கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரின் குமாரரும் பிள்ளையவர்களின் மாணக்கருமாகிய ஸ்ரீசாமிநாத தேசிகரென்பவர் அங்கே முதல் தமிழ்ப் பண்டிதராக இருந்துவந்தார். அவர் திருவனந்தபுரம் மகாராஜா காலேஜில் தமிழாசிரியர் உத்தியோகம் பெற்று அங்கே போய்விட்டார். அப்போது அவர் ஸ்தானத்திற்குத் தக்க பண்டிதர் ஒருவரும் உடனே அகப்படாமையால் சாமிநாத தேசிகர் சொல்லிவந்த பாடங்களிற் சில வற்றை இரண்டாம் பண்டிதருக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டு எஞ்சிய பாடங்களைக் கோபால ராவே சொல்லிவந்தார். அவர் தமிழில் நல்ல பயிற்சி உடையவர். நன்னூலையும் பிறநூல்களையும் அழுத்தமாகப் படித்தவர்.

ஒரு நாள் கோபாலராவ் இலக்கண பாடம் நடத்திக் கொண்டிருந்தார். வழக்கப்படி முதல் நாள் நடந்த பாடத்தில் கேள்விகள் கேட்கத் தொடங்கினர். "எகர வினுமுச் சுட்டின் முன்னர்" என்ற சூத்திரத்திலும் அதன் உரையிலும் வினாக்களைக் கேட்டு வரும்போது ஒரு மாணக்கனை, "செல்வுழிச் செல்க என்பதை எப்படிப் பிரிப்பது?" என்று கேட்டார். அவன், "செல்+உழி+செல்க" என்று பிரித்துச் சொன்னான்.

"வகரம் இடையில் வந்ததே, அதற்குப் பெயர் என்ன?" என்று மீட்டும் கேட்டார். அந்த மாணக்கன் விடை கூறவில்லை. ஒவ்வொரு மாணக்கனைக் கேட்டுவருகையில் பலர் விடை தெரியாமல் விழித்தனர்.

ஒரு மாணக்கன் மாத்திரம், "செல்வுழியென்பதில் இடையே வந்த வகரம் எழுத்துப்பேறு. 'விண்வத்துக்கொட்கும்' என்பதில் விண் + அத்து என்னும் இரண்டும் சேரும்போது இடையில் வந்த வகரமும் அத்தகையதே" என்று தைரியமாகச் சொன்னன்.

அவன் கூறிய விடையைக் கேட்டுக் கோபாலராவ் ஆச்சரியமடைந்து அவனை ஊன்றிப் பார்த்தார். வகுப்பிலே சொல்லிக்கொடுக்காத விஷயங்களையும் அவன் தெரிந்து கொண்டிருந்தான்.

"அந்த வகரத்தை உடம்படு மெய் என்று ஏன் சொல்லக் கூடாது?" என்று கோபாலராவ் கேட்டார்.

"உயிரீற்றின் பின் உயிர்வந்தால் இரண்டும் நின்றவாறே சேராவாதலால் அவற்றை உடம்படுத்தற்கு வரும் யகர வகர மெய்களைத்தான் உடம்படு மெய்யென்று சொல்வர். இது வேறு வகையில் தோன்றிய எழுத்தாதலின் எழுத்துப் பேறு என்றுதான் சொல்லவேண்டும்" என்று அவன் பின்னும் தெளிவாகச் சொன்னன்.

ஆசிரியருக்கு அளவற்ற உவகை உண்டாயிற்று.

"உன் பெயர் என்ன?" என்று ஆதரவுடன் கேட்டார் கோபால ராவ்.

"தேவாஜி ராவ்."

"நீ இந்தப் பள்ளிக்கூடத்தில் எவ்வளவு காலமாகப் படிக்கிறாய்? இதற்கு முன் எங்கே யாரிடத்தில் படித்தாய்?"

"இந்த வருஷந்தான் இங்கே வந்தேன். இதற்கு முன் ஸ்ரீரங்கம் பள்ளிக்கூடத்தில் தியாகராச செட்டியாரிடம் படித்தேன். அவரிடந்தான் நன்னூலைக் கற்றுக்கொண்டேன்" என்றான்.

கோபால ராவ் ஏதோ ஒரு புதிய பொருளைக் கண்டுபிடித்தவரைப் போல உத்ஸாகமடைந்தார். போர்ட்டர் துரை, "ஒரு நல்ல பண்டிதரைத் தேர்ந்து இந்தப் பள்ளிக்கூடத்தில் நியமிப்பது உங்கள் பொறுப்பு" என்று சொல்லியிருந்தமையால் அவர் அந்தக் கவலையோடிருந்தார். தேவாஜி ராவ் மூலமாகத் தியாகராச செட்டியாரின் திறமையை அறிந்தவுடன் செட்டியாரையே வருவித்து அங்கே நியமிக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகிவிட்டது.

அன்றே அவர் தியாகராச செட்டியாருக்கு ஒரு கடிதம் எழுதினர். "உங்களுடைய கல்வியாற்றலை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். இந்தப் பள்ளிக்கூடத்தில் முதல் தமிழ்ப் பண்டிதர் வேலை காலியாக இருக்கிறது. அதற்கு உங்களை நியமிக்கலாமென்று நினைக்கிறேன். நீங்கள் ஒரு முறை இங்கே வந்தால் நேரில் விஷயங்களைப் பேசலாம்" என்று அக்கடிதத்தில் குறிப்பித்திருந்தார்.

செட்டியார் அந்தக் கடிதத்தைக் கண்டவுடன், 'இறைவன் திருவருள் இது' என்று நினைத்தார். தம்முடைய ஊருக்கு அருகில் தம் உறவினர்களுக்கு இடையில் இருந்தாலும் கும்பகோணத்துக்குப் போனால் பலவகையில் நன்மை உண்டாகுமென்பது இவர் நினைவு. இவருடைய ஆசிரியராகிய ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கிய காலம் அது. அவர் திரிசிரபுரத்தில் இருந்த காலத்தில் அவரை அடிக்கடி பார்த்துப் பழகிச் செட்டியார் இன்புற்று வந்தார். அவர் திரிசிரபுரத்தை விட்டுச் சென்றதுமுதல் அவருடைய பழக்கம் முன் போல அடிக்கடி நேராதது ஒரு பெருங் குறையாகவே இருந்தது. கும்பகோணத்துக்குப் போனால் அதன் அருகிலுள்ள திருவாவடுதுறைக்கு வாரந்தோறும் சென்று தம் ஆசிரியரோடு பழகலாமென்றும், திருவாவடுதுறை யாதீனத்தின் பழக்கமும் ஏற்படுமென்றும் அவர் எண்ணினர். ஸ்ரீரங்கத்திலிருந்த பள்ளிக்கூடமும் அரசாங்கத்தாரால் நடத்தப்பெற்றதாயினும் கும்பகோணத்திலுள்ள கலாசாலையைப் போலப் பெரிதன்றென்பதை அவர் அறிவார். அங்கே தம்முடைய அறிவும் சௌகரியங்களும் அபிவிருத்தியடையுமென்பதை உணர்ந்து உடனே கும்பகோணத்திற்குச் சென்று கோபாலராவைக் கண்டு பேசினர்.

நேரிலே கண்டு பேசியபொழுது கோபால ராவ் செட்டியாருடைய கல்வித்திறமையை நன்றாகத் தெரிந்துகொண்டார். செட்டியாரால் பள்ளிக்கூடத்திற்குப் பெருமையுண்டாகுமென்று அவர் நம்பினர். உடனே இவரைப் போர்ட்டர் துரையிடம் அழைத்துச் சென்று, "இவரே இந்தப் பதவிக்குத் தக்கவர்" என்று சொன்னர். போர்ட்டர் மிகவும் ஸந்தோஷித்து, "நான் மேலதிகாரிகளுக்கு எழுதுகிறேன். அவர்கள் உத்தரவிடும் போது நீங்கள் இங்கே வரலாம்" என்று சொல்லி விடை கொடுத்தனுப்பினர்.

போர்ட்டர் துரை பள்ளிக்கூடங்களின் மேற்பார்வை அதிகாரிக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினர்:

"பள்ளிக்கூடங்களின் இன்ஸ்பெக்டராகிய ஸ்ரீமான் ஈ. வி. கால்டுவெல் அவர்களுக்கு,

இப்பொழுது ஸ்ரீரங்கம் தாலூகா பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக இருக்கும் தியாகராச செட்டியார் சிறந்த தமிழ்ப் புலவரென்றும், நல்ல ஆசிரியரென்றும் கேள்வியுற்றிருக்கிறேன். சில காலத்திற்கு முன் ஸ்ரீ கோபால ராவ் அவரைப் பரீட்சித்து வேலைக்குப் பூரணமான தகுதியுடையவரென்று அறிந்து கொண்டாரென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கத்தில் அவருடைய ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதில் ஏதாவது சிரமம் ஏற்பட்டால் இப்போது இங்கே உள்ள முன்ஷி அவ்வேலைக்கு முற்றும் தகுதியுடையவராதலின் அவரை அங்கே மாற்றலாம்.

டபிள்யூ. ஏ. போர்ட்டர்
தலைமை ஆசிரியர்"

கோபாலராவுடைய நன்முயற்சி பலித்தது. எழுத்துப் பேறு செட்டியார் கும்பகோணத்தில் உத்தியோகப் பேறு பெறக் காரணமாயிற்று. தியாகராச செட்டியார் கும்பகோணம் பள்ளிக்கூடத்தில் 1865-ஆம் வருஷம் ஜூலை மாதம் மூன்றாந் தேதி முதல் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப் பெற்றார். அவர் கும்பகோணத்துக்கு வந்தது முதல் அவரது வாழ்க்கையில் ஒரு நல்ல தசை ஆரம்பமாயிற்று.



இரண்டு உபநிஷத்துக்கள்

சி. சுப்பிரமணிய பாரதியார்

[பாரதியார் வேதரிஷிகளின் கவிதையிலே ஈடுபட்டவர். வேதமந்திரங்களைப் பின்பற்றிச் சில பாடல்கள் இயற்றியிருக்கின்றனர். ''வேதம் நிறைந்த தமிழ் நாடு'' என்று சொல்லிக்கொள்வதில் அவருக்குத் திருப்தி அதிகம். அவர் வேதப் பகுதிகளில் சிலவற்றை மொழிபெயர்த்திருக்கிறார். 1913-ஆம் வருஷம் அவர் எழுதிய இரண்டு உபநிஷத்துக்களின் மொழிபெயர்ப்புக்கள் இங்கே வெளியிடப்படுகின்றன. இதனைத் தேடி எடுத்து உதவிய ஸ்ரீமான் வி. ஜி. ஸ்ரீநிவாசன், பி. ஏ., அவர்களுக்கு எம் நன்றி உரியது. —ப-ர்.]

ஈஶாவாஸ்யோபநிஷத்

1. இயங்கும் உலகில் இயங்குகின்ற இஃதெல்லாம் ஈசனால் நிரப்பப் படுவது. ஆதலால் (உள்ளத்) துறவுடன் (இன்பங்கள்) துய்த்திடுக. பிறன் பொருளை விரும்பாதொழிக.

2. இங்குக் கடமைகள் செய்துகொண்டே நூறுண்டு வாழ்தல் வேண்டுக. நீ இதனைக் கொள்க. இஃதல்லால் வேறு வழியில்லை. கடமைப் பயன் மாசு படுத்துவதில்லை.

3. ஆத்மநாசம் செய்துகொள்ளும் ஜனங்கள் (இவ்வுலகத்திலிருந்து) நீங்கிக் குருட்டிருள் சூழ்ந்தனவாகிய அசுர லோகங்களை அடைகின்றனர்.

['ஆத்ம நாச' மாவது நித்ய முக்தனாகிய ஆத்மாவுக்குத் தீய சிந்தனைகள், தீய செயல்கள் என்பவற்றால் தளைகள் ஏற்படுத்திக்கொள்ளும் மடமைச் செய்கை.]

(ஆத்மாவின் நிலை கூறுவது)

4. ஒன்று: அசைதலின்றி மனத்தினும் விரைந்து செல்வது; இதனை இந்திரியங்கள் எட்டியதில்லை; இது முன்னே சென்றுவிடும். மற்றவை ஓடும்போது தான் நின்றபடியே அவற்றை எட்டிவிடும். இதனிடத்தே வாயு செயல்களைச் சமைக்கிறான்.

5. அது இயங்குவது. அது இயங்குவதில்லை. அது தொலையிலுள்ளது. அப்படியே ஸமீபத்திலும் இருப்பது. அது இவ்வனைத்திற்கும் உள்ளே இருப்பது. இவ்வனைத்திற்கும் அது புறம்பானது.

['இவ்வனைத்திற்கும் 'எனில், இவ்வுலகப் பொருள்க ளெல்லாவற்றிற்கும்' என்பது பொருள்.]

6. எவன் எல்லா உயிர்களையும் தன்னுள்ளே காண்கின்றானோ, எல்லா உயிர்களிடத்தும் தன்னைக் காண்கிறானோ, அவன் பிறகு கூசுவதில்லை.

7. அறிந்தவனுக்கு எல்லா உயிர்களும் தானே யாகிவிடும். (அனைத்திலும்) ஒருமை காணும் அவனுக்கு அங்கு மயக்கமேது? சுவலையேது?

8. எங்கும் நிறைந்தது, ஒளியுடையது, புண்ணற்றது, நரம்பில்லாதது, தூய்மையுடையது, பாவமற்றது, கவி, அறிவு சான்றது; இத்தன்மையுடைய ஆத்மா எப்போதும் இருக்கும்படியாகப் பொருள்களை இயற்கையினின்றும் அமைத்தது.

9. அவித்தையை வழிபடுவோர் குருட்டிருளை அடைகின்றனர். வித்தையிலே (மாத்திரம்) பற்றுடையோர் அதனினும் மிகுந்த இருளை அடைகின்றனர்.

10. வித்தையினாலாகும் பயன் வேறென்பர். அவித்தையினாலாகும் பயன் வேறென்பர். இங்ஙனம் நமக்கு அதனை உரைத்த தீரர்களிடம் கேட்டிருக்கிறோம்.

11. வித்தை, அவித்தை என்னும் இரண்டையும் எவன் ஒருங்கே அறிந்தவனே அவன் அவித்தையால் மிருத்யுவைக் கடந்து, வித்தையால் அமிருதத்தை அருந்துகிறான்.

[வித்தை; பிரமத்தை ஒன்றாகக் காணுதல். அவித்தை; பிரமத்தைப் பலவாகக் காணுதல். அமிருதம்; சாவில்லாமை, தீரா இன்பம்.]

12. அழிவை வழிபடுவோர் குருட்டிருளிலே புகுகின்றனர். ஆக்கத்தை வழிபடுவோர் அதனினும் மிகுந்த இருளையடைகின்றனர்.

13. ஆக்கத்தால் பெறுவது வேறென்பர்; அழிவினால் பெறுவது வேறென்பர். இங்ஙனம் நமக்கு அதனை உரைத்த தீரர்களிடம் கேட்டிருக்கிறோம்.

14. ஆக்கம், அழிவு என்னும் இரண்டையும் ஒருங்கே அறிந்தவன் அழிவினால் மிருத்யுவைக் கடந்து ஆக்கத்தால் அமிருதத்தை அடைகிறான்.

15. ஸத்தியத்தின் முகம் பொற்பாத்திரத்தால் மூடப்பட்டிருக்கிறது. ஸத்யதர்மத்தையுடைய எனது பார்வைக்கு, ஹே, பூஷந்! நீ அதனைத் திறந்து காட்டுக.

16. ஹே பூஷந்! ஏகரிஷியே! யமா! சூரியா! பிரஜாபதியின் மகனே! கதிர்களை விரிவுற வகுத்து ஒளியைத் திரட்டிக்கொள்க. நினது வடிவத்திலெல்லாம் கல்யாண மிகுந்ததாகிய வடிவத்தைக் காண்கிறேன். அதில் நிற்கும் இப்புருஷன்—அவனே நான்.

17. வாயு இறப்பின்றிச் சலிப்பது. இவ்வுடல் சாம்பராய் முடிவது. ஓம். உள்ளமே. நினை, செய்ததை நினை. நினை, உள்ளமே, செய்ததை நினை.

18. அக்னியே, எங்களை ஸம்பத்துக்கு நல்வழியாற் கொண்டு செல்லுக. எங்கள் குடிலமான பாவங்களை அழித்திடுக. நினக்கு மிகச்சிறந்த போற்றி மொழி இசைக்கிறோம்.

கேநோபநிஷத்

முதற் காண்டம்

1. எவனுடைய ஏவுதலால் மனம் தான் விரும்பிய பொருளிலேபோய் வீழ்கின்றது? ஆதியிலே பிராணன் எவனுடைய அமைப்பினல் செல்வ தாயிற்று? மனிதர் பேசும் பேச்சை எவன் தூண்டுகிறான்? கண்ணையும் செவியையும் எந்தத் தேவன் தொழிலிற் பொருத்தி விடுகிறான்?

2. செவியின் செவி, மனத்தின் மனம், வாக்கின் வாக்கு, அவனே பிராணனுக்குப் பிராணன். கண்ணுக்குக் கண். அவனை அறிந்தோர் (தீரர்) பந்தங்களை விட்டு, இவ்வுலகினின்றும் (சாவற்ற) அமிர்தத்தன்மை பெறு கின்றனர்.

3. அதனிடத்தே விழி செல்வதில்லை, வாக்கு ஏறுவதில்லை, தெரிகி லோம், அதை எங்ஙனம் பிறருக்கு எடுத்துச் சொல்வதென்பதை அறிய மாட்டோம்.

4. இது வேறு. அறியப்படு பொருளுக்கெல்லாம் கீழேயுள்ளது. அறியப்படாததற்கு மேலேயுள்ளது. இங்ஙனம் நமக்கு அதனை உரைத்த முன்னோர்களிடம் கேட்டிருக்கிறோம்.

5. எது வாக்கால் விளங்குவதில்லையோ, எதனல் வாக்கு விளங்கு கிறதோ, அதுவே பிரமமென்று அறி. ஜனங்கள் வழிபடும் இஃதன்று.

6. எதனை மனத்தாற் கருதலாகாதோ, எதனல் மனம் கருதப்படு மென்பரோ, அதுவே பிரமம் என்று அறி. ஜனங்கள் வழிபடும் இஃதன்று.

7. எதனைக் கண் காண்பதில்லையோ, எதனல் கண்கள் காண்கின் றனவோ, அதுவே பிரமமென்று அறி. ஜனங்கள் வழிபடும் இஃதன்று.

8. எதனைச் செவி கேட்பதில்லையோ, எதனல் செவிகள் கேட்கின் றனவோ, அதுவே பிரமம் என்றறி. ஜனங்கள் வழிபடும் இஃதன்று.

9. எது உயிரால் உயிர்த்திருப்பதில்லையோ, எதனல் உயிர் உயிர்த் திருக்கின்றதோ, அதுவே பிரமம் என்றறி. ஜனங்கள் வழிபடும் இஃதன்று.

இரண்டாம் காண்டம்


1. நன்றாக அறிவேனென்று கருதுவையாயின் நீ இந்தப் பிரமத்தின் ரூபத்தைச் சிறிதுதான் அறிகின்றாய். இந்தப் பிரமத்திலே நீ யாது, தேவர்களிடம் யாதுளது, என நீ அறிந்ததையெல்லாம் இன்னும் பரி சோதனை செய்தே பார்த்தல் வேண்டும்.

2. நன்றாக அறிவேனென்று நான் கருதவில்லை; அறியவில்லையென்றும் கருதவில்லை. நமக்குள் இதை எவன் தெரிபவனே அவன் அறிகின்றான்; தெரியாதவனும் அறிகின்றான்.

3. எவன் (உணர்ந்ததாகக்) கொள்ளவில்லையோ, அவன் இதை உணர்ந்தவன். எவன் கொள்கையுடையவனை அவன் அறியவில்லை. அறிந்தவரால் அறியப்படாதது. அறியாதவரால் அறியப்பட்டது.

4. எவன் இதை ஒவ்வோர் உணர்விலும் உள்ளதாகக் கொண்டவனை, அவன் அமிர்தத்தன்மை பெறுகின்றான். ஆத்மாவினால் வீர்யத்தை அடைகிறான். வித்தையினால் அமிர்தத்தை அடைகிறான்.

5. இவ்வுலகிலேயே இதனை அறிந்தாலையின் பிறகு உண்மையுண்டு. இவ்வுலகில் அறியாவிடில், பெருங்கேடு. ஒவ்வோருயிரிலும் இதனைச் சிந்திக்கும் தீரர் இவ்வுலகிலிருந்து நீங்கி அமிர்தராகின்றனர்.



மாங்குடி சிதம்பர பாகவதர்

ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

சிதம்பர பாகவதர் திருவையாற்றில் ஆஹிதாக்னிகளாகிய வைதிக பரம்பரையில் 1880-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் 14-ஆம் தேதி பிறந்தார். அவருடைய முன்னோர்களில் ஒருவராகிய கனம் திருமலையரென்பவர் தஞ்சை ஸம்ஸ்தானத்தை ஆண்ட துளஜா மகாராஜா காலத்தில் அவருடைய ஆஸ்தான ஸங்கீத வித்துவானுகவும் ஸாஹித்திய கர்த்தாவாகவும் விளங்கினர். எனவே சிதம்பர பாகவதர் தம் வாழ்க்கையில் சிறப்படைவதற்குக் காரணமான திறமைகள் பரம்பரையாக வந்தவையாகும். பாகவதருடைய சர்மநாமம் ஸ்ரீநிவாஸன் என்பது. ஆயினும் அவருடைய குடும்பத்தினருக்குக் குல தெய்வமாகிய சிதம்பரம் நடராஜ மூர்த்தியின் ஞாபகத்தால் சிதம்பரம் என்ற பெயரே அவருக்கு வழங்கலாயிற்று.



சிதம்பர பாகவதர் இளம்பிராயத்தில் மெல்லிய உடம்புடையவராகவும் துடியாகவும் இருந்தாரென்பதை அறிய அன்பர்கள் வியப்பார்கள். 1894-ஆம் வருஷம் முதல் 1896-ஆம் வருஷம் வரையில் திருவையாறு ஸெகண்டரி ஸ்கூலில் உயர்தர வகுப்புகளில் மாணக்கராக அவர் இருந்தார். அப்போது அவருடன் நம் நாட்டுக்கு அணியாக விளங்கும் பேரறிஞராகிய ஸ்ரீ மகாமகோபாத்தியாய பண்டித எஸ். சுப்புஸ்வாமி சாஸ்திரிகளும் படித்துக் கொண்டிருந்தார். பாகவதரைப் பிற்காலத்தில் அறிந்தவர்கள் அவருக்குரிய சிறப்பியல்பாகிய கல்மஷமற்ற புன்சிரிப்பை இன்னும் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். அந்த இயற்கையான புன்முறுவல் அவர் சிறு பிள்ளையாக இருந்த காலமுதலே அவர் முகத்தில் விளங்கியது.

பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற ஒதெல்லோ (Othello) நாடகத்தில் இளையவராகிய சிதம்பரம் ஐயாகோவாக நடித்தார்; அப்போது அவருக்கு நடிக்குந் திறமை மிகுதியாக இருக்கிறதென்று யாவரும் புகழ்ந்தனர். காலஞ்சென்ற கிருஷ்ண பாகவதர் திருவையாற்றில் அடிக்கடி கதாகாலக்ஷேபம் நடத்துவதுண்டு. சிறு பிள்ளையாக இருந்த சிதம்பரம் ஒவ்வொரு கதைக்கும் தவறுமற் சென்று கேட்டுவிட்டுப் பிறகு காவேரி

மனலில் தம் தோழர்களுக்கிடையே அவற்றை அப்படியே சொல்லிக் காட்டுவார். ஸாக்ஷாத் கிருஷ்ணபாகவதரே அங்கே கதை பண்ணுகிறு ரென்று கேட்கும் நண்பர்கள் நினைக்கும்படி அவர் பாட்டும் பேச்சும் இருக்குமென்று மகாமகோபாத்தியாய சாஸ்திரிகள் சொல்லுவதுண்டு. பாகவதருடைய அபிநயம் அவ்வளவு சிறந்ததாக இருந்தது.

நாளடைவில் அவர் எப். ஏ., பரீட்சையில் தேர்ச்சி பெற்று இரண்டாந் தர வக்கீலானர் (Second Grade Pleader); ஆனல் சீக்கிரத்தில் அந்தத் தொழிலை விட்டுவிட்டார். அவருடைய மனப்போக்குக்கும் பல கலைத் திறமைக்கும் பாகவதராக இருப்பதுதான் பொருத்தமாக இருந்தது; அபிவிருத்திக்கும் ஏதுவாயிற்று.

காலகேஷபமென்னும் கலையை மிக விளங்கச் செய்பவராக இருந்தார் சிதம்பர பாகவதர். அவருடைய கதைகள் நல்ல போதனைகளைச் செய் வனவாகவும் மனசுக்கு உத்ஸாகத்தைத் தருவனவாகவும் இருந்தன. கதா காலகேஷப வித்துவான்களுள் தஞ்சைக் கிருஷ்ண பாகவதர் தலை சிறந்தவர்; சிதம்பர பாகவதரும் அந்த வரிசையிற் சேர்ந்தவரே. மகாராஷ்டிரர்கள் செய்யும் ஹரிகதையானது கதையையும், குணங்களையும், சங்கீதத்தோடு நாடகமுறையில் வெளிப்படுத்துவது; பாவராக தாளங்களின் இனிய கூட் டுறவையுடையது. அதையே பாகவதர் தமது லக்ஷியமாகக் கொண்டிருந்தார். அவர் மிகவும் சரியான அளவில் பாட்டையும் பேச்சையும் உபயோகித்து வந்தார். ஸங்கீதமொன்றையே உத்தேசித்துப் பொருத்தமற்ற பாட்டுக் களை தழைக்கும் வழக்கம் அவரிடம் இல்லை. ஹரிகதையில் முக்கியமானது கதை சொல்லும் திறமையென்பதையும், கதையின் அழகையும் உணர்ச்சியை யும் அதிகப்படுத்துவதற்காகவே சங்கீதம் அதில் இடம் பெற்றதென்பதை யும் அவர் எப்போதும் மறக்கவில்லை. ஆயினும் அவர் சங்கீதத்தை உப யோகிக்கும்போதெல்லாம் அது உயர்ந்ததாகவே இருக்கும். அவர் தேர்ந் தெடுக்கும் கீர்த்தனங்கள் மிகப் பொருத்தமானவையாக விளங்கும்; அவற் றில் பெரும்பாலன தியாகராஜ கீர்த்தனங்களே; அவை சந்தர்ப்பத்திற் கேற்றனவாக இருப்பதுதான் அதற்குக் காரணம். ஸாஹித்தியங்களைத் திருத்தமாகச் சொல்லிக் கவி ஹ்ருதயத்தை நன்கு அறிந்து அவற்றைப் புலப்படுத்துவார்.

ராமாயணத்திலிருந்து அவர் கதைகளைச் செய்வது தனியே எடுத்துச் சொல்வதற்குரியது. ஸம்ஸ்கிருதத்திலும் இங்கிலீஷிலும் அவருக்கு இருந்த அறிவு அவர் கதை சொல்வதில் ஒரு விசேஷமான கவர்ச்சியையும் புதுமை யையும் உண்டாக்கியது. அந்த மகாகாவியத்திலுள்ள நிகழ்ச்சிகள் எவ்வளவு நெருக்கமாய் மனிதவாழ்க்கையோடு ஒத்தனவாக உள்ளன வென்பதை அவர் நிரூபிப்பார். பல நூற்றாண்டுகள் சென்றுவிட்டாலும் அந்தப் பழங் காலத்தின் வாழ்க்கையானது முக்கியமான விஷயங்களில் இக்காலவாழ்க்கை யினின்றும் வேறுபடவில்லையென்பதையும், எந்தக் காலத்திலும் எந்த நாட் டிலும் மனித உள்ளமானது அந்தக் கதையின் பெரிய நீதிகளை உணர்ந்து

இடையறாத மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் அடையக்கூடுமென்பதை யும் அவர் தெளிவுறத்துவார். இந்திய வாழ்க்கையின் பேரிலக்காகிய 'எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை' என்பதை அவர் கேட்பவர்களுக்கு எடுத்துக் காட்டுவார்; ஹிந்து தர்மத்தைப் பற்றிய அவரது வியாக்கியானம் தாராள நோக்கமும் விரிந்த மனோபாவமும் உடையதாக இருக்கும். அவரது கால க்ஷேபம் உயர்தரமானது. நயமற்ற அஸப்யபாஷையை அவர் விலக்கினர்.

சிதம்பர பாகவதர் தற்கால வாழ்க்கையைத் தனி மனிதன், சமூகம் என்னும் இரண்டு துறைகளிலும் நுணுக்கமாக ஆராய்ந்தவர். சமூக விஷயத் திலும் அரசியல் வாழ்க்கையிலும் சமீபத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் விஞ்ஞான சாஸ்திரத்தில் அதி சமீபத்தில் கண்டுபிடித்த புதுமைகளையும் அவர் கதைக்கிடையே பொருத்தமாக எடுத்துச் சொல்வார். முக்கியமான எந்தச் சந்தர்ப்பமும் அவர் பிரசங்கத்தில் வராமல் இராது. அவருடைய கிண்டல், ஹாஸ்யம், மேற்கோள், பழைய நினைவுகள் ஆகியவை அவ ருடைய கதைக்கு அழகும் சுவையும் கொடுத்தன. மனத்திற் பதியும் அவ ருடைய சமயோசித யுக்திவாதங்களும், கிண்டல்களும், நவீன நாக ரிகத்தின் இழிந்த பகுதியின் ஊழல்களையும் வஞ்சகங்களையும் வெளிப் படுத்தின. உருக்கத்தை உண்டாக்குவதில் அவர் சிறந்தவர். அவர் 'பாதுகாபட்டாபிஷேக'த்தைக் கேட்டுக் கண்ணீர்விடாதவர் அரியர். ஸம்ஸ்கிருதத்திலும் இந்திய பாஷைகளிலும் நல்ல அறிவு, சங்கீதத்திலும் பரத சாஸ்திரத்திலும் திறமை, நாடக ஆற்றல், வாக்குவன்மை, கற்பனைசக்தி, நித்தியமான மத உண்மைகளிலும் தத்துவ சாஸ்திர உண்மைகளிலும் பூர்ணமான பழக்கம், பரந்த அறிவு, யாவரிடமும் கருணை என்னும் குணங் கள் ஒரு கதகருக்கு அவசியமான தகுதிகள்; இவை அவரிடம் மிகுதியாக இருந்தன. அவற்றோடு ஆங்கில அறிவும், மேல் நாட்டு விஞ்ஞான சாஸ்திர அறிவும் சேர்ந்தன. வளப்பமான ஞாபக சக்தியுடையவர் அவர். அவரிடம் விசேஷமாக இருந்த அச்செல்வத்தைச் சிறந்த பயனுண்டாகும் படி வெளிப்படுத்தினர். அவர் திறமை பெற்ற சிந்தனைசக்தி உடையவர். அதனால், சாதாரணமாக யாவருக்கும் தெரிந்த விஷயங்களையும் சந்தர்ப்பங் களையும் பற்றி அழகுள்ள வருணனைகளை வெளியிட முடிந்தது. அவர் அவருடைய கலையுடன் ஐக்கியப்பட்டிருந்தார். இல்லையென்றால் புகழ் பெற்ற அந்த மாங்குடி பாகவதரின் பூதாகாரமான வடிவம் மென்மையான ரஸத்துக்கும் வன்மையான ரஸத்துக்கும் ஏற்றபடி உடனுக்குடன் குரல், பேச்சு, நடை, சங்கீதம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு எவ்வகையான ஸமாதானம் கூறமுடியும்? இப்படித்தான் உண்மைக் கலை ஆவிர்ப்பவித்துச் சரீரத்தடைகளை வென்று தனியே நின்று நிலவுகிறது.

அவர் தம் வாழ்வு முழுவதும் வித்தியார்த்தியாக இருந்தாரென்பதை நான் சொல்லாமல் விடக்கூடாது. யூனிவர்ஸிடி பட்டம் பெற்றவரல்ல ராயினும் கல்விகாரணமாகவும் ஓர் ஆராய்ச்சி அறிஞரென்பதனாலும் அவர் யூனிவர்ஸிடி லைப்ரெரியில் ஒரு விசேஷ அங்கத்தினராக அனுமதிக்கப்

பட்டார். அவர் சென்னைக்கு வந்த ஒவ்வொரு சமயத்திலும் லைப்ரெரிக்கு வருவார். விரிந்த அறிவுடையவராக இருந்தமையின் புஸ்தகங்கள் உள்ள அறைகளுக்கு அவரை அழைத்துச் செல்வதில் அங்குள்ள உத்தியோகஸ்தர்கள் எப்பொழுதும் மிக்க ஸந்தோஷத்தை அடைந்தார்கள். அவருக்குப் பிரியமான விஷயங்களுக்கு ஒரு ஜாபிதா வித்தம் செய்யச் சொன்னபோது வேத அநுக்கிரமணிகை, வேத ஆராய்ச்சிகள், ச்ரௌத தர்ம சூத்திரங்கள், ஸ்மிருதிகள், ஆகமங்கள், பக்தி இலக்கியங்கள் முதலாக ஸ¨மேரியரது கலை, எகிப்திய விஷயம் என்பனவரை பதினெட்டுவிதமான விஷயங்களின் வரிசை கிடைத்தது. அவரே தம்மிடம் இந்தியா சம்பந்தமான புஸ்தகங்கள் பல வைத்திருந்தார். இந்தியக்கலை விஷயமான புஸ்தகங்களனைத்தையும் சேகரிக்க வேண்டுமென்பது அவர் ஆசை.

அவர் முதல் முதலாகச் செய்த கதை 1916-ஆம் ஹ நவம்பர் மீ 25-ஆம் தேதி ஜகந்நாத பக்தசபையின் ஆதரவில் நடைபெற்றது என்று அறிகிறேன். 1926-ஆம் ஹ ஸெப்டம்பர் 17-ஆம் தேதி சென்னைத் தொண்டைமண்டல கதாப்பிரசங்கசபை அவருக்கு "மகாகதக கண்டீரவ" என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தது. 1929-ஆம் ஹ ஸெப்டம்பர்மீ 19-ஆம் தேதி இராமநாதபுரம் ராஜாவின் முடிசூட்டு விழாவில் நடைபெற்ற தர்பாரில் "அபிநவ பரதாசார்யர்" என்ற பட்டம் பெற்றார்.

1937-ஆம் ஹ சென்னை ஸங்கீத வித்வத் ஸபையார் அவ்வருஷத்து மகாசபையின் தலைவராக அவரை நியமித்துக் கௌரவித்தனர். எதிர் பார்த்தபடியே பாகவதர் மிக்க மதிப்போடும் தகுதியோடும் அப்பதவியை வகித்தார். தமக்கு அளித்த இக் கௌரவத்தால் அவர் பெருமை பெற்றதாகக் கருதி இந்த வித்வத்ஸபையினிடமும் இதன் நோக்கங்களிலும் விருப்பங்களிலும் மாறாத விசுவாஸமும், தம்முடைய வாழ்வு முழுவதும் இந்த ஸபையின் முயற்சிகளில் ஒத்துழைப்பும் உள்ளவராக இருக்க வாக்களித்தார். ஜீவிய காலமுழுதும் இந்த வாக்கை நிறைவேற்றினர். ஆனல் இந்த ஸபை தன்னுடைய வேலைகளில் அவருடைய நெருங்கிய தொடர்பினலும் துணையினலும் கிடைக்கும் உதவியை நீண்ட காலம் பெறுவதற்கு இயலவில்லை. ஒரு வருஷத்திற்குள், 1938 ஆகஸ்டு மாதத்தில் அவர் மறைந்தார்; அவர் மரணத்தால் தென்னிந்தியா, கதகர்களுள் ஓர் ஆச்சர்ய புருஷரை இழந்தது; அவரைப் போல வேறொருவர் வருவது எக்காலம்?

ஜகந்நாத பக்தசபையில் சிதம்பர பாகவதர் படத்தைத் திறந்து வைத்தபோது பேசிய ஆங்கிலப் பேச்சின் மொழிபெயர்ப்பு.

சரித்திர ஆதாரங்களும் சாஸனங்களும்

தி. நா. சுப்பிரமணியன்

பண்டைக்காலத்தே நம் நாட்டை ஆண்டுவந்த அரசபரம்பரையினரின் சரித்திரத்தைக் கூறும் நூல்களைப்போலவே தனிப்பட்ட அரசர்களின் வாழ்க்கையைப்பற்றித் தெரிவிக்கும் நூல்களும் உள. அவற்றுள் பாணகவி எழுதிய ஹர்ஷ சரித்திரம், பில்ஹணர் எழுதிய விக்ரமாங்கதேவ சரித்திரம் ஆகிய இரண்டையும் முக்கியமானவைகளாகக் கொள்ளலாம்.

ஹர்ஷ சரித்திரம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடக்கே கன்னோசியை ஆண்டுவந்த ஹர்ஷவர்த்தனன் என்னும் அரசனுடைய சரித்திரத்தைக் கூறுவது. பில்ஹணர் எழுதியதோ கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்யாணியினின்றும் அரசு செலுத்திய ஆறாம் விக்கிரமாதித்தன் என்னும் மேலைச் சளுக்கிய அரசனுடைய சரித்திரத்தைத் தெரிவிப்பதாகும்.

இவ்வகை நூல்களுள் மேலே கூறிய இரண்டுமே பிரபலமாக வழங்குபவை. அவற்றுள் காணப்படும் இலக்கியச்சுவையே அதற்குக் காரணமாகும்; அவை சரித்திரநூல்கள் என்பதற்காக அல்ல.

அவற்றைப்போல வேறு பல நூல்களும் உள்ளன. தஞ்சாவூர்ச் சீமையைக் கி. பி. பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் ஆண்டுவந்த நாயக்க மன்னர்களில் ரகுநாத நாயக்கருடைய ஜீவிய சரித்திரத்தைப்பற்றி யஜ்ஞநாராயண தீக்ஷிதர் எழுதிய ஸாஹித்ய ரத்நாகரம், ராமபத்ராம்பா எழுதிய ரகுநாதாப்யுதயம் என்னும் வடமொழி நூல்களும், ரகுநாத நாயக்கர் புத்திரர் விஜயராகவ நாயக்கர் எழுதிய ரகுநாதாப்யுதயம் என்னும் தெலுங்கு நாடகம் போன்ற நூல்களும் உள்ளன.

இவற்றைப்போலவே விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஆண்டுவந்த மன்னர்களான சாளுவ நரஸிம்ஹன், கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர் முதலிய மன்னர்களுடைய சரித்திரங்களும் கிடைத்துள்ளன.

இவ்வகை நூல்கள் யாவும் இலக்கியச்சுவை மிகுந்தே காணப்படுகின்றன. இவற்றை அம்மன்னர்களுடைய ஜீவிய தத்துவத்தைக் கூறும் வாழ்க்கைச்சித்திரங்களாகவே நாம் கொள்ளவேண்டும். நாம் இப்பொழுது விரும்பும் முறையில் உள்ள சரித்திர நூல்களாகக் கொள்ளமுடியாது. உதாரணமாக, பில்ஹணர் தம்முடைய நூலுள் விக்கிரமாதித்தன் பிறந்த செய்தியைக் கூறுமிடத்தே அவன் பிறந்தவுடன், "தேவர்கள் ஆர்த்தனர்;

தந்துபி முழங்கிற்று; பூமாரி பொழிந்தது" என்று ஸம்பிரதாயமான முறையில் எழுதியிருக்கிறாரே ஒழியப் பிறந்த வருஷம், மாதம், தேதி முதலிய விவரங்களைக் கூறவில்லை.

இவற்றைத்தவிர, நம் நாட்டு மன்னர்களைப் பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்டு அவர்களுடைய கீர்த்திகளைக் கூறும் வேறுபல சில்லறைப் பிரபந்தங்களும் உள. கலிங்கத்துப்பரணி, மூவருலா, குலோத்துங்கன் கோவை, நந்திக்கலம்பகம் என்பன போன்றவை இந்த வகையைச் சார்ந்தவை.

இத்தகைய நூல்களிலும் பல விஷயங்கள் ஸம்பிரதாயமான முறையிலேயே குறிக்கப்பட்டுள்ளன. குலோத்துங்கன் அவதாரத்தைக் கூறும் பொழுது கலிங்கத்துப்பரணி,

"வந்தருளி யவதாரஞ் செய்ததலுமே மண்ணுலகு மறைக ணுன்கும்
அந்தநீங் கினவென்ன வந்தாதுந் துமிமுழங்கி யதிர்ந்த வாங்கே"

என்று புகழ்ந்து கூறுகின்றது. அதேபோல அவன் பட்டமேற்கும் காலத்தில் நாடு இருந்த நிலையை அதன் ஆசிரியரான ஜயங்கொண்டார்,

"மறையவர் வேள்வி குன்றி மனுநெறி யனைத்து மாறித்
துறைகளோ ராறு மாறிச் சுருதியு முழக்க மோய்ந்தே"

என்று வருணிக்கிறார். இவை யாவும் பழைய முறையைப் பின்பற்றி இலக்கியச்சுவை தோன்ற மொழிந்தனவேயன்றிச் சரித்திர நிகழ்ச்சிகளாகக் கருதவேண்டுவனவல்ல.

அன்றி, சரித்திர நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டிருக்கும் இடங்களிலும் விவரங்கள் காணப்படவில்லை. நந்திக்கலம்பகத்தில், தெள்ளாறெறிந்த நந்திவர்மன்

"படையாறு சாயப் பழையாறு வென்றூன்"

என்று பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் பழையாற்றுச் சண்டைக்குக் காரணம் என்ன, அவ்விடத்தில் அவன் யாரை வென்றூன் முதலிய விவரங்கள் காணப்படவில்லை.

எனினும் இவ்வகை நூல்கள் சரித்திர ஆராய்ச்சிக்கு மிகவும் உபயோகமாக இருக்கின்றன. இவற்றில் உள்ள சரித்திரச்செய்திகள் மிகவும் முக்கியமானவை. ஆயினும் இவற்றை நாம் ஜாக்கிரதையாகவே உபயோகிக்கவேண்டும்.

பரணி, உலா முதலிய நூல்களில் 'திருமுடியடைவு' என்று வழங்கப் பெறும் ராசபாரம்பரியப் பகுதி காணப்படுகின்றது. அதனுள்,

"மண்கண்ட பொன்னிக் கரைகட்ட வாராதாற்
கண்கொண்ட சென்னி கரிகாலன்"

(குலோ. உலா.)

என்பது போன்று பாட்டுடைத்தலைவனுடைய முன்னோர்கள் கொண்ட வெற்றிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஆயினும் பல இடங்களில் அவர்களுடைய பெயர்களை வெளிப்படையாகக் கூறாமல் அவர்களுடைய சிறப்பைமட்டுமே எடுத்துக் காட்டிச் செல்லுவர்.

"தண்டினாற்
கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும்"

என்று விக்கிரம சோழனுலாவில் முதலாம் இராஜேந்திர சோழன் புகழப்பட்டிருக்கிறான். 'கங்கையும் கடாரமும் கொண்ட அவன் கங்கை கொண்ட சோழன்' எனவும், 'கடாரம்கொண்டான்' எனவும் சிறப்புப்பெயர் களைப்பெற்ற செய்தியை நாம் சாஸனங்களின் மூலம் அறிவோமாதலால், இவ்விடத்தில் குறிக்கப்பட்டவன் அவனே என நாம் நிச்சயிக்கவேண்டியிருக்கிறது; இராசபாரம்பரியம் வருமுறையிலும், அந்த இடத்தில் வேறு யாரையும் குறிக்கமுடியாது.

இவற்றைப்போலவே நூலாசிரியர்களும் தங்களைப்பற்றிய செய்திகள் சிலவற்றைக் கூறிச் செல்வர். வடமொழி நூல்கள் சிலவற்றுள் ஆசிரியருடைய பரம்பரைச் செய்திகளும் காணப்படுகின்றன. அவர்களுடைய தந்தை, பாட்டன் ஆகியோருடைய விருத்தாந்தங்களும், அவர்கள் யார் யாரிடம் படித்து வந்தார்கள் என்பதும் கூறப்பட்டுள்ளன. தமிழ் நூல்களில் அத்தகைய செய்திகள் அதிகம் காணப்படவில்லை.

பொதுவாக எல்லா நூல்களிலும் உள்ள சிறப்புப்பாயிரப் பகுதி மிகவும் முக்கியமானது. அதனுள் அந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர், அவர் அதனை இயற்றிய காலம், அக்காலத்திருந்து அவரை உபகரித்த வள்ளல் ஆகிய விவரங்கள் காணப்படும்.

உதாரணமாக, நதிண்ட்லா கோபமந்திரி என்பவர் தாம் எழுதிய 'கிருஷ்ணர்ஜுன ஸம்வாதம்' என்னும் நூலில் தம்முடைய முன்னோர்களைப்பற்றியும், தமக்கு மாமனும், அப்பாஜி என்று சரித்திரப்பிரசித்தி பெற்றவனுமான (கிருஷ்ணதேவராயருடைய மந்திரி) சாளுவ திம்மனைப் பற்றியும் விவரமாகக் கூறியிருக்கிறார்.

'லோக விபாகம்' என்னும் ஜைனமதக் கிரந்தம் ஒன்று உண்டு. அது மோகள பாகம் உள்ளிட்டுப் பதினைந்து பிரகரணங்களைக் கொண்டது. அது வர்த்தமானரால் ஸுதர்மாவுக்கும் மற்றவர்களுக்கும் உபதேசிக்கப்பட்டது என்றும், குருசிஷ்ய முறையாக வழிவழி வந்து வெகுகாலத்திற்குப் பிறகு ரிஷி விம்ஹஸூரி என்பவர் அதனை வடமொழியில் எழுதினர் என்றும் அந்நூலுள் கூறப்பட்டுள்ளது. இப்பொழுது கிடைக்கும் அந்த நூலின் எல்லா ஏட்டுப்பிரதிகளிலும் அது பாணராஷ்டிரத்தில் உள்ள பாடலிகை என்னும் கிராமத்தில் குறிப்பிட்ட கிருஹஸ்தர்களைக் கொண்ட ஒரு நாளில்

ஸர்வநந்தி என்பவரால் பெயர்த்தெழுதப்பட்டது என்பது குறிக்கப்பட்டிருந்தது. அன்றி, காஞ்சீபுரத்தினின்றும் அரசு செலுத்திவந்த பல்லவ அரசன் விம்ஹவர்மன் ஆட்சியின் இருபத்திரண்டாம் ஆண்டுக்குச் சமமான சக 380-ஆம் வருஷத்தில் அது பூர்த்தியாயிற்று என்றும் ஒரு சுலோகம் தெரிவிக்கின்றது. பாடலிகை என்பது பாடலிபுரம் என்று வழங்கப் பெறும் திருப்பாதிரிப்புலியூரேயாகும். அங்கே சமணப்பள்ளி இருந்து வந்தது என்பது பெரிய புராணத்தினின்றும் தெரிகின்றது. நூலைப் பெயர்த்தெழுதிய நாளில் இருந்தனவாக ஸர்வநந்தி கொடுத்திருக்கும் கிரஹநிலைகளைக் கொண்டு ஜோதிஷரீதியாகக் கணித்தால் அது ஒத்திருப்பதைக் காணலாம். இதனால் விம்ஹவர்மன் என்னும் பல்லவ அரசன் ஒருவன் சக 359 (கி. பி. 437)-ஆம் ஆண்டிலிருந்து காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசுசெலுத்திவந்தான் என்பதும் அவன் ஆட்சியின் இருபத்திரண்டாம் ஆண்டில், திருப்பாதிரிப்புலியூரிலிருந்த ஸர்வநந்தி என்பவர் 'லோகவிபாகம்' என்னும் ஜைனமதக் கிரந்தத்தைப் பெயர்த்தெழுதினர் என்பதும் ஏற்படும். அக்காலத்தில் விம்ஹவர்மன் என்னும் பல்லவ அரசன் அரசுசெலுத்திவந்தான் என்பதைப் பெனுகொண்டாச் செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

நூல்களுள் காணப்படும் சிறு செய்திகளும், குறிப்புக்கள் சிலவும் சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் உபயோகமாகவுள்ளன. மண்டல புருடர் எழுதியுள்ள சூடாமணி நிகண்டில்,

"கெடிமன்னர் வணங்குந் தாளான்
கிருட்டின ராயன் கைபோற்
கொடைமட மென்ப தம்ம
வரையாது கொடுத்த லாமே"

என்று கிருட்டினராயன் என்னும் அரசனுடைய கொடைத்திறனைப் புகழ்ந்து கூறுகிறார். அங்கே குறிக்கப்பட்டவர் கி. பி. பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஆண்டுவந்த கிருஷ்ணதேவராயரேயாவர். ஆதலின் இந்நூலினுடைய ஆசிரியரும் அக்காலத்தில் வாழ்ந்தவர் என்று கொள்ளலாம்.

இவ்விதம் சரித்திரநூல்களாக உள்ளவற்றைத் தவிர, பிறநூல்களிலும் அவை எழுதப்பட்ட காலங்களில் ஆண்ட அரசர்களைப்பற்றிமட்டுமேயன்றி அம்மன்னர்களுடைய முன்னோர்களைப்பற்றிய விவரங்களும் காணப்படுவது எங்ஙனம்? அவையாவும் உண்மையாக இருக்கமுடியுமா? அவர்கள் அந்த விவரங்களையும் மன்னர்களின் வம்சாவளியையும் எவ்விதம் அறிந்தனர்? இத்தகைய கேள்விகள் உண்டாவது இயற்கையே.

நம் நாட்டவர்களுக்கு வம்சங்களின் கிளைகளைப்பற்றிய விவரங்கள் நன்றாகத் தெரிந்திருப்பது மிகவும் சாதாரணமான விஷயம். இன்றைக்குப் பல குடும்பங்களில் ஏழு தலைமுறைகளுக்கு மேற்பட்ட வம்சாவளிகள்

இருப்பதை நாம் காணலாம். ஒரே குடும்பம் பலவாறுகப் பிரிந்து போய் விடினும், சுபாசுப காரியங்களுக்கு அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேரவேண்டியதைக் கருதியே அங்ஙனம் வைக்கப்பட்டிருக்கிறது போலும். அன்றி, அவை லௌகிகமாகவும், மானியம்போன்ற சொத்துக் களின் உரிமை, அனந்தரவாரிசு பாத்தியதை முதலியவற்றை நிலைநிறுத்த வும் உபயோகப்படக் கூடியன.

அதேபோல நம் நாடுமுழுவதும் அங்கங்கே நிறுவப்பட்டுள்ள மடங் களிலும் மடாதிபதிகளின் பட்டாவாரிகள் உள்ளன.

அவ்விதமே முற்காலத்தில் ஒவ்வொரு ராஜகரத்திலும் ராஜாவாரிகள் இருந்திருத்தல் வேண்டும். இது தமிழ்நாட்டுச் சாஸனங்களினின்றும் நமக்கு நன்கு விளங்கவில்லையாயினும், பக்கத்திலே தெலுங்கு கர்நாடக தேசங்களிலே ஆண்ட அரசர்களுடைய சாஸனங்களால் தெரியவரு கின்றது.

உதாரணமாக, வேங்கி நாட்டை ஆண்டுவந்த கீழைச்சளுக்கிய வமிசத் துச் சாஸனங்களில், கி. பி. பதினோராம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட செப்பேடுகளிலும் ஏழாம் நூற்றாண்டில் அந்த வமிசம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்து அதுவரையில் ஆண்ட அரசர்களின் பெயர்கள், அவர் கள் அரசு செலுத்திய கால அளவு முதலியன கொடுக்கப்பட்டுள்ளன. ஏழாம் நூற்றாண்டுக்கும் பதினோராம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்துச் சாஸனங்களை ஒன்று சேர்த்துக் கவனித்தாலும், அந்த விவரங் கள் ஒரேவிதமாக உள்ளமை அறியலாம். ஒரு சாஸனத்தில் உள்ளது போலவே மற்றொரு சாஸனத்திலும் இருக்கும். அவற்றுள் ஒன்றிரண்டு இடங்களில் பேதங்கள் இருக்கின்றன. நேர்முறையில் இல்லாமல் பலாத் காரமாக நாட்டைக் கைப்பற்றிய இளைய பரம்பரையைச் சார்ந்தவர்போன்ற வர்களை மூத்தபரம்பரையைச் சேர்ந்தவர்கள் கூறுமல் விலக்கியிருப்பது போன்ற வேறுபாடுகளே அவை.

மேலைச்சளுக்கியர்கள் வாதாபியைத் தலைநகராகக் கொண்டு ஆறும் நூற்றாண்டின் மத்தியிலிருந்து எட்டாம் நூற்றாண்டின் மத்திவரையில் ஆண்டுவந்தனர். அவர்களுக்குப் பிறகு ராஷ்டிரகூடர்கள் அந்த நாட்டைக் கைக்கொண்டு இரண்டு நூற்றாண்டுகளுக்குமேல் அரசுசெலுத்தினர். அப் பால் சளுக்கிய பரம்பரையினர் மறுபடியும் தலையெடுத்துத் தங்கள் முன் னோர்கள் இழந்த நாட்டைக் கைப்பற்றிக் கல்யாணி என்னும் நகரினின் றும் ஆண்டுவந்தனர். அவர்கள் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதி யில் கொடுத்த சாஸனம் ஒன்றில் வாதாபிச் சளுக்கியர்களுடைய பரம் பரையும் வீரப்பிரதாபங்களும் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

இவற்றை நோக்குங்கால், அக்காலங்களிலே அரசாங்கங்களில் ராஜ காரத்து விஷயங்களைத் தெரிவிக்கும் சுவடிகளைத் தனியாகவும் பத்திரமாக வும் வைத்துப் பாதுகாத்துவந்தனர் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

அந்த அந்த வமிசங்கள் நாட்டில் ஆதிக்கியத்தை இழந்துவிட்டாலும் அவ் வமிசத்தினர் அத்தகைய சுவடிகளைப் பாதுகாத்திருத்தல்வேண்டும்.

'பவர்சுவடி' என்று பெயர்பெற்றுள்ள கணிதநூல் ஒன்று சுமார் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாயினும் நல்ல நிலைமையில் நமக்குக் கிடைத்திருக்கின்றது. அது காச்மீரத்துக்கு வடக்கே காஷ்கரியா என்னும் இடத்தில் ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரத்தினின்றும் எடுக்கப்பட்டது; பூர்ஜபத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. இதனால் நன்றுகப் பாதுகாக்கப்பட்ட ராஜகரத்துச் சுவடிகளை ஐந்தாறு நூற்றாண்டு காலம் நிச்சயமாகச் சிதிலமாகாமல் பாதுகாக்க முடியும் என்று எண்ணலாம்.

இத்தகைய வரலாறுகளை அவர்கள் அவ்வப்பொழுது எழுதிச் சேர்த்துக்கொண்டே போயிருத்தல்வேண்டும். சோழ பாண்டிய மன்னர்களின் சாஸனங்களைக் கவனித்தால் இது நன்கு விளங்கும். அவற்றுள் காணப்படும் மெய்க்கீர்த்தி அந்த அந்த அரசர்களது ஆட்சியின் ஆண்டை ஒட்டியே வளர்ந்துவருவது தெரியும். ஓர் அரசனுடைய இரண்டாம் ஆண்டுச் சாஸனத்தில் உள்ள மெய்க்கீர்த்தியைவிட அவனுடைய மூன்றும் ஆண்டுச் சாஸனத்தில் உள்ளது நீளமாகவும் அதிகச் செய்திகளைத் தெரிவிப்பதாகவும் காணப்படும். ராஜாங்க வித்துவான்கள் மன்னர்களுடைய புகழ்களை அவ்வப்பொழுது நிகழ்ந்தோறும் பாடிச் சேர்த்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். இவ்விதம் வளர்ந்துவரும் மெய்க்கீர்த்தியில் பழைய பாகங்களை மாற்றுமல் மேலே சேர்த்துக்கொண்டுபோவது குறிப்பிடத்தக்கது.*

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு கலிங்கதேசத்து அரசனுக விளங்கிய காரவேலனது ஹாதிகும்பாச் சாஸனத்தையும் இத்தகைய மெய்க்கீர்த்தி போலவே கொள்ளவேண்டும். பிறந்ததுமுதல் அவன் ஆட்சியின் பதின்மூன்றும் வருஷம் வரையில் அவன் வாழ்க்கையை வருணிக்கிறது அச் சாஸனம். மன்னன் தன் வாழ்நாளின் முதல் பதினைந்து வருஷங்களை விளையாட்டுக்களிலும், பிறகு ஒன்பது வருஷங்களை யுவராஜனுகவும் கழித்து இருபத்துநான்காம் ஆண்டின் முடிவில் முடிசூட்டப்பெற்றான் என்பதைக் கூறி அப்பால் அவன் ஆட்சியில் ஒவ்வோர் ஆண்டு நிகழ்ச்சிகளையும் முறையாக விவரித்துச் செல்கின்றது. ஹர்ஷசரித்திரம்போல ராஜகவியால் எழுதப்பட்ட அது எக்காரணத்தினலோ அரசன் ஆட்சியின் பதின்மூன்றும் ஆண்டுடன் நின்றவிட்டது.

இவ்விதம் ராஜகரத்து வரலாறுகளை எழுதியவர்கள் சுவடிகளையும் ஆதாரங்களாகக் கொண்டனர்போலும். இப்பொழுது உள்ளனபோலவே

---

* புதிய அரசன் ஒருவன் பட்டமேற்றவுடன் அவனுக்காகப் புதிய மெய்க்கீர்த்தி ஒன்றைச் சிருஷ்டிக்கும் வழக்கத்துக்கு மாறுக வாதாபிச்சளுக்கியர் மூன்னோர்களைப்பற்றிய சுலோகங்களை அப்படியே வைத்துக்கொண்டு மேலே எழுதிச் சேர்த்துக்கொண்டே போனர்கள்.

முற்காலத்திலும் அரசாங்கத்தில் தஸ்தாவேஜிகளைப் பாதுகாத்து வந்திருத்தல்வேண்டும்.

நாடு, ஊர்போன்ற சபைகளுக்குத் திருமந்திரவோலை அனுப்பும் உத்தரவுகள் சரிவர நிறைவேற்றப்பட்டனவா என்பதைக் கவனித்து அறிய மூலப்பிரதிகளை அரசாங்கத்தில் வைத்திருத்தல்வேண்டும். அதேபோலச் சபையாரும் தாங்கள் நிறைவேற்றும் காரியங்களுக்கு ஆதாரங்களாகப் பின்னால் தணிக்கை செய்பவர்களுக்குக் காண்பிப்பதற்கும் உத்தரவுகளைக் காப்பாற்றி வைக்கவேண்டும். ஓர் அரசாங்கம் மற்றொன்றுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கை முதலியன சரிவர நடைபெறுகின்றனவா என்பதைக் கவனிக்க இருதரத்தாரிடமும் அவற்றின் பிரதிகள் இருத்தல் வேண்டும். அதேபோலச் சிற்றரசர்கள் செலுத்தும் கப்பம், நாட்டில் வசூலாகும் வரிப்பணம் முதலியவற்றுக்கும் சம்பந்தப்பட்டவர்களிடம் கணக்குகள் இருக்கவேண்டும். இவற்றுள் பல நிரந்தரமாகப் பாதுகாக்கப்படவேண்டியவை. ஆயினும் இவை ஒன்றும் இப்பொழுது கிடைக்கவில்லை.

முற்காலத்திலும் அரசாங்கம் இப்பொழுது உள்ளதுபோலவே பல இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. எனினும் அவற்றுள் ஒன்றற்கொன்று நெருங்கிய சம்பந்தம் பெற்றிருந்தது. இலாகாக்களுக்குள் இப்பொழுது காணப்படும் தனிமை அப்பொழுதில்லை. அக்காலத்திலே அரசாங்கக் கணக்குகளை எவ்விதம் வைத்திருந்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. எனினும் அவை இருந்துவந்தன என்பதுமட்டில் நிச்சயம். பிற்காலத்தில் பேஷ்வாக்கள் முதலியோர் வைத்திருந்த கணக்குகளைப் பார்த்துப் பழைய காலத்திலும் அவ்விதமே இருக்குமோ என்று ஒருவாறு எண்ணலாம். பேஷ்வாக்குறிப்புக்களில் ஒவ்வொரு நாளைச் சம்பவங்களும் தொடர்ச்சியாக, இலாகாவாரியாகப் பிரிக்காமல் எழுதப்பட்டுள்ளன.

முதலாம் இராஜேந்திரன் அளித்த திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் அம்மன்னன் அளித்த உத்தரவு அவனது ஆறும் ஆண்டு எண்பத்தெட்டாவது நாள் முதற்கொண்டு அனுஷ்டிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதேபோலத் திருபுவனம் செப்பேடுகளில் "ஸ்ரீ கோச்சடைய வன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு 13-ஆவது நாள் நாலாயிரத்து முந்நூற்று அறுபது" என்று காணப்படுகின்றது. இவற்றைக் கவனித்தால் ராஜகரத்துக் கணக்குகளிலும் குறிப்புக்களிலும் நாட்களையும் கணக்கிட்டு எழுதிவந்தனர் என்பது விளங்கும்.

அவர்கள் அவ்விதம் எழுதிச்சென்ற கணக்குகளும், குறிப்புக்களும் கிடைத்துவிட்டால் போதும். நம் நாட்டின் சரித்திரம் முழுவதையும் பல துறைகளிலும் விரிவாக எழுதிவிடலாம். அது சுலபமான காரியமாக

இருக்காது. கட்டுக்கட்டாக உள்ள அவற்றுள் புகுந்து ஆராய்ந்து தேடவேண்டும். எப்படியிருந்தால் என்ன? அவை இப்பொழுது கிடைக்க வில்லை. அதனாலேயன்றோ நாம் வேறு பலவகை ஆதாரங்களைத் தேடி அலைகிறோம்?

இத்தகைய குறிப்புக்களுக்குப் பதிலாக நமக்குக் கிடைக்கும் சாஸனங் களைக் கொள்ளலாம். நாட்டுச் சரித்திரத்திற்குப் பலவகை ஆதாரங்கள் இருந்தாலும், அவற்றால் அறியப்படும் உண்மைகளை நிர்ணயம் செய்து நிச்சயமாக்கச் சாஸனங்களே பெரிதும் உதவுகின்றன. சாஸனங்கள் இல்லாவிடின் நம் நாட்டுச் சரித்திரத்துள் பெரும்பகுதி இருள் சூழ்ந்து விளங்காமல் போயிருக்கும். சாஸனங்கள் சரித்திரத்தின் பல துறை களுக்கும் உபயோகப்படக்கூடியனவாம்.



சாந்தி

து. ராமமூர்த்தி

1

அவள் தாத்தாவான அந்தக் கிழவனின் பெயர் எனக்குத் தெரியாது. கோகுல் தாவின் பங்களாவில் கிழவன் தோட்ட வேலை செய்து வந்தான். பங்களாவைச் சுற்றி நான்கு புறத்திலும் தோட்டம். அதில் ஒரு மூலையில் கிழவனின் குடிசை. குடிசையில் கிழவனைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. அவனுக்கு ஒரு பெண் மட்டும் இருந்தாள். அவளை நாட்டுப்புறத்தில் ஒருவனுக்குக் கட்டிக் கொடுத் திருந்தார்கள். வருஷத்தில் எப்பொழுதாவது ஒரு தடவை அவள் வந்து தகப்பனைப் பார்த்துப் போவாள். கிழவன் கிட்டத்தட்ட எழுபது பிராயத்தை எட்டிப் பார்த்துவிட்டான். உடல் தளர்ந்துவிட்டது. இருபது வருஷமாய் வேலை செய்தவனு யிற்றே என்று கோகுல்தாஸ் வீட்டில் இன்னும் அவனை வைத்திருந்தார்கள்.

கிழவனின் வாழ்க்கை நிர்மானுஷ்யமான இடத்தில் இருக்கும் தடாகத்தின் தெளிந்த நீர் போல் சலனமற்றிருந்தது. காற்றடித்தால் நீர்ப்பரப்பில் அலை மோது வது போல் அவன் வாழ்க்கையிலும் சலனத்தை உண்டுபண்ணும் நிகழ்ச்சி ஒன்று ஒரு சமயம் நேர்ந்தது: அவன் பெண்ணுக்குக் குழந்தை பிறந்திருக்கிறது என்று ஒரு நாள் கடிதம் வந்ததும், சுருக்கம் விழுந்து சதை தொங்கிக்கொண்டிருந்த அவன் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. குழி விழுந்து மங்கிப் போயிருந்த அவன் கண்களிலும் ஒரு பிரகாசம் தோன்றிற்று. ஆனால் இந்த மகிழ்ச்சி நீடித்திருக்கவில்லை. அடுத்த வாரம் வந்த கடிதத்தில், அவன் மகள் ஜ்வரம் கண்டு இறந்து போய்விட்டாள் என்று அவன் மாப்பிள்ளை எழுதியிருந்தான். யாரோ கடிதத்தைப் படித்துச் செய்தி யைத் தெரிவித்தார்கள். கிழவன் இரண்டு கைகளாலும் தலையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டான்.

மூன்று மாதங்கள் சென்றன. தன் மாப்பிள்ளை இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கொண்டான் என்று கேள்விப்பட்டுக் கிழவன் கிராமத்துக்குச் சென்றான். தன் பெண்ணின் குழந்தை தாயுடன் இறந்து போகாமல் உயிரோடு இருப்பதைப் பார்த்து, மாற்றாந்தாய் சரியாக வளர்க்கமாட்டாள் என்று பயந்து தான் வளர்ப்பதாய் அதன் தகப்பனிடம் கூறிக் குழந்தையை எடுத்து வந்து விட்டான்.

பங்களாவில் பரபரப்பு உண்டாயிற்று. கோகுல்தாஸும் குழந்தையைப் பார்க்க வந்தார்.

"ஆமாஞ் சாமி; எம் பொண்ணுடைய கொயந்தைங்க; இதும் அப்பன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிணான். இனிமே இதை யார் கவனிக்கப் போறுங்க? அதான் நான் வளக்கலாமுன்னு எடுத்துக்கிணு வந்துட்டேன். எனக்குத்தான் இனிமே யார் இருக்காங்க? என் கொயந்தை எனக்கு வச்சுட்டுப் போன ஆஸ்திங்க இது" என்றான் கிழவன்.

குழந்தை, தரையில் விரிக்கப்பட்டிருந்த ஒரு கந்தல் துணியின்மேல் படுத்துக் கொண்டு கால்களையும் கைகளையும் மடக்கி மடக்கி உதைத்துக் கொண்டிருந்தது.

கோகுல்தாஸ் சிரித்துக்கொண்டே, "நன்றாயிருக்கிறது! இத்தனூண்டு குழந்தையை வைத்துக்கொண்டு உன்னால் காப்பாற்ற முடியுமா? இதற்குப் பால் யார் புகட்டுவார்கள்? மருந்து யார் கொடுப்பார்கள்? யார் குளிப்பாட்டுவார்கள்? இதெல்லாம் ஒரு பொம்மனாட்டியின் வேலையாச்சே? உன்னால் முடியுமா, கிழவா? அதுவும் இந்த வயசிலே?" என்றார்.

"பால் முனியம்மா போட்டிடுவா. மீதி எல்லாம் நான் பாத்துக்குவேன்" என்றான் கிழவன்.

"ஹ்ம்—பச்சைக் குழந்தை. இந்த மாதிரி தாய் இல்லாத குழந்தைகள் பிழைப்பதே கஷ்டம். எவ்வளவோ ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டும். உன்னால் ஆகுமா?" என்று கோகுல்தாஸ் சந்தேகப்பட்டார்.

கிழவன், குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு இப்படியும் அப்படியும் ஆட்டிக்கொண்டே, "எல்லாம் சாமி காப்பாத்திடுவாரு, பாருங்க. ஒரு பொம்மனாட்டி மாத்திரம் பிரமாதமா என்ன செஞ்சுடப் போறு?" என்றான்.

கோகுல்தாஸ் தலையைச் சொறிந்துகொண்டு, "குழந்தைக்கு என்ன பேரு?" என்றார்.

கிழவன் கண்ணை மூடிக்கொண்டு யோசித்துவிட்டு, "என்ன பேரோ தெரியலீங்களே. அதும் அப்பனைக் கேட்க மறந்துட்டேன், சாமி" என்றான்.

கோகுல்தாஸுக்கு என்ன தோன்றிற்றோ, என்னவோ; வெகு காலத்துக்கு முன் இறந்து போன தம் பெண்ணின் ஞாபகம் வந்ததுபோல் இருக்கிறது; "சாந்தி என்று கூப்பிடு" என்றார்.

கிழவன் சிரித்துக்கொண்டு, "சாந்தி!" என்றான்.

அதுவே குழந்தையின் பெயராய்விட்டது.

2

சாந்தி வளரத் தொடங்கினாள். முகம் பார்த்துச் சிரித்தாள். கிழவனுக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. "ளப ளப" என்று நாக்கினால் சப்தம் செய்துகொண்டு தன் முகத்தை அவள் முகத்தருகில் கொண்டுபோவான். சாந்தி, "ஹி—ஹி" என்று சிரித்துக்கொண்டு தளிர்போன்ற தன் கரத்தை நீட்டி அவன் மூக்கைப் பிடித்துக் கொள்வாள். கிழவன் பொக்கைவாயைத் திறந்து தானும் நகைப்பான்.

சாந்திக்குத் தவழத்தெரிந்ததும் கிழவன்பாடு பெரிய தொல்லையாய்விட்டது. மார்பினால் நகர்ந்துகொண்டே அவள் போகக் கூடாத இடங்களுக்கெல்லாம் போய்ச் செய்யக்கூடாத காரியங்களெல்லாம் செய்யத் தொடங்குவாள். திடீரென்று அடுப்பங்கரைக்கு வந்து அடுப்பிலிருந்த விறகைப் பிடித்து இழுப்பாள். மூலையில் அடுக்கியிருந்த பானைகளிடம் போய் அவைகளைத் தட்டிவிட்டு உடைத்து விடுவாள்.

ஒரு நாள் இரவு கிழவன் விளக்கேற்றி வைத்துவிட்டுக் குழந்தைக்கு வித்தை காட்டிக் காட்டிக் கொண்டிருந்தான். சாந்தி அவன் மடியிலிருந்து இறங்கித் தவழ்ந்து கொண்டே விளக்கண்டையில் சென்றாள். விளக்கின் பக்கத்தில் போய், இரண்டு முழங்கால்களையும் வலது உள்ளங்கையையும் பூமியில் ஊன்றிக்கொண்டு இடது கையை உயர்த்தி, காற்றில் ஆடிக்கொண்டே சுடர்விட்டு எரிந்த விளக்கின் திரியைப் பிடிக்க முயன்றாள். கையை விளக்கருகில் கொண்டு போவதற்குள் கீழே ஊன்றியிருந்த வலது கை வலித்தது. இடது கையைக் கீழே ஊன்றி வலதுகையை

உயர்த்தி விளக்கருகில் கொண்டு போனாள். அதற்குள் இடது கை வலித்தது. இப்படி நாலுதரம் முயன்றபின் கடைசியில் சுடரைப் பிடிக்க முடியாமல் ஏமாந்து கோபமடைந்து தரையின்மேல் மார்பைப் பொத்தென்று மோட்டுக்கொண்டு விழுந்து அழத் தொடங்கினாள். சந்தடி செய்யாமல் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு விளக்கிலே எங்கே கையை வைத்துவிடப்போகிறாளோ என்று கவனித்துக் கொண்டிருந்த கிழவன், அவளை வாரி எடுத்துத் தோள்மேல் போட்டுக்கொண்டு, "விளக்கு வேணுமா நோக்கு, என் ராசாத்தி?" என்று கொஞ்சி விளையாடித் தேற்றினான்.

சாந்தி கிழவனைத் தவிர வேறு ஒருவரிடமும் போகமாட்டாள். அவளைத் தோள்மேல் போட்டுக்கொண்டு தோட்டம் முழுவதும் அவன் சுற்றி அலைவான். அது வரையில் கிழவன் உள்ள இட்மே தெரியாமலிருந்த அந்தத் தோட்டத்தில், சாந்தி வந்த பிறகு கிழவனின் குரல் எங்கும் கேட்டது. பங்களாவில் வேலை செய்த முனியம்மா ஒவ்வொரு சமயம் அவளிடம் வந்து கைகளைத் தட்டித் தட்டி, "வா வா" என்று கையை நீட்டிக் குழந்தையை அழைப்பாள். சாந்தி ஒரு நிமிஷம் ஸ்வாரஸ்யத்துடன் அவள் செய்யும் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, அவள் தன்னை வரும்படி அழைக்கிறாள் என்று தெரிந்துகொண்டதும் தலையை அசைத்து விட்டுக் கிழவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவன் தோள்பட்டையில் தன் முகத்தைப் புதைத்துக் கொள்வாள். பிடித்து இழுத்தால் கால்கள் விண்விண் என்று உதைக்கும்; அழுகை கிளம்பி விடும்.

"அடி ராக்ஷஸி!" என்று முணுமுணுப்பாள் முனியம்மா. கிழவன் சிரிப்பான். ஆனால் மனத்திற்குள், குழந்தையை அவள் ராக்ஷஸி என்று வைகிறாளே என்று கோபம் கொள்வான்.

சாந்திக்கு நடக்கத் தெரிந்ததும் கிழவனுக்கு ஒரு நிமிஷமும் ஓய்வு கொடுக்காமல் ஆட்டிவைத்தாள். கிழவன் குடிசையினுள் வேலையாக இருக்கையில், தட்டுத்தடுமாறி நடந்துகொண்டு குடிசையை விட்டு வெளிப்பட்டுத் தோட்டத்துக்குள் புகுந்துவிடுவாள். அவளைக் குடிசையில் காணுவிட்டால் கிழவன் மனம் திடுக்கிடும். தோட்டத்தில் எப்பொழுதும் மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும். குழந்தையை மாடு முட்டிவிட்டால் என்ன பண்ணுவது? மாடுகளைத் தவிர வேறு அபாயங்களும் தோட்டத்தில் இருந்தன. எற்றம் போட்டிருந்த கிணறு சமீபத்தில்தான் இருந்தது. அது தவிர, மருதாணிச் செடியின்மேல் அன்று ஒரு பாம்பைப் பார்த்ததாக முனியம்மா கூறினாள். அந்தப் பயம் வேறு, "சாந்தி! சாந்தி!" என்று கூப்பிட்டுக்கொண்டு கிழவன் தோட்டத்தில் ஓடுவான். சாந்திக்கு ஓர் அபாயமும் நேர்ந்திராது. மரநிழலில் உட்கார்ந்துகொண்டு தண்ணீர் ஓடும் வாய்க்காலிலிருந்து மண்ணை எடுத்து வாயில்போட்டு ஸ்வாரஸ்யத்துடன் மென்று கொண்டிருப்பாள் அவள்.

3

ஒருநாள் கிழவனுக்குச் சந்தோஷம் தலைகால் தெரியாமல் அடித்துவிட்டது. "ஐயையோ! என்னடி இந்தக் கிழம் இப்படிக் கலாட்டா பண்ணுது?" என்றாள் முனியம்மா.

கிழவன் சாந்தியைத் தூக்கிக்கொண்டு அவர்கள் இருந்த இடத்துக்கு வந்தான். "ஏ முனியம்மா! சாந்தியைப் பாத்தியா? அவளுக்குப் பேசக்கூட வந்திருச்சி!"

"பேச வந்திருச்சா! அதிசயந்தான்! எங்கே? என்ன பேசறு?—பேசுடி பாக்கலாம், ராக்ஷவி!"

"தா, இதோ பாரு. ராக்ஷவின்னு சொல்றியா?—சாந்தி! தாத்தா சொல்லு" என்று கிழவன் சாந்தியைக் கீழே இறக்கினான்.

சாந்தி அவர்கள் பேச்சைக் கவனியாமல் கீழே குனிந்து மண்ணுங்கட்டியைப் பொறுக்க ஆரம்பித்தாள். கிழவன் அவளைத் தூக்கி நிற்கவைத்துப் பிடித்துக் கொண்டே, "சாந்தி! தாத்தான்னு கூப்பிடு" என்றான்.

சாந்தி சுற்றிலும் நின்று கொண்டிருந்தவர் முகங்களை நோக்கினாள். தான் பேசப் போவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் என்று உணர்ந்து கொண்டாள்.

"தத்...தத்...தா...!" என்றாள்.

எல்லோரும் ஹோ என்று சிரித்தார்கள். கிழவன் பெருமையுடன் குழந்தையை வாரி அணைத்துக்கொண்டு, எங்கே திருஷ்டி பட்டுவிடுமோ என்ற பயத்துடன் குடிசைக்குள் போய்விட்டான்.

"ஐயோ அதிசயமே! இந்தக் கிழவனுக்கு என்ன பைத்தியமா?" என்றாள் முனியம்மா.

ஒருநாள் முனியம்மாவுடன் அவள் ஐந்து வயதுப்பிள்ளை வந்திருந்தான். அவன் சாந்தியைப் பார்த்ததும், "ஹோஹோ, அம்மணக்கட்டை!" என்று சிரித்தான். கிழவனுக்கு ரோசம் வந்துவிட்டது. அன்றைக்கே கடைக்குப் போய், தயாராய்த் தைத்து வைத்திருந்த பச்சை நிறமான கவுன் ஒன்று சாந்தியின் அளவுக்கு ஏற்றதாய்ப் பார்த்து வாங்கிவந்து அவளுக்கு மாட்டிவிட்டான்.

பச்சை நிறம் சாந்திக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. தாயைப்போல் அவள் சிவப்பாக இருந்தபடியால் அவள் இயற்கை அழகை அந்தப் பச்சைக் கவுன் நன்றாக எடுத்துக்காட்டியது. உருண்டையான முகத்தைச் சுற்றித் தலைமயிர் சுருள் சுருளாகத் தொங்க, புதிதாக அணிந்துகொண்ட உடையைக் கைகளால் இழுத்து விட்டுக்கொண்டு சாந்தி தன் மழலைச்சொல்லில், "தா-த்-தா" என்று இரண்டு தாக்களிலும் ஓர் அழுத்து அழுத்திக் கூறினாள்.

கிழவன் ஸ்வர்க்கத்துக்கே போய்விட்டான். அவள் கன்னங்களில் கை வைத்து விரல்களைத் தன் தலையில் வைத்து நெறித்துத் திருஷ்டி கழித்தபின் சாந்தியைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு பங்களாவுக்கு வந்தான்.

"என்ன கிழவா? பேத்தி எப்படி இருக்கா?" என்று கேட்டான் கோகுல் தாவின் பிள்ளை நாராயண்தாஸ்.

"நல்லாத்தான் சாமி இருக்கா, உங்க புண்ணியத்திலே. இன்னிக்குத்தான் சட்டை வாங்கிப் போட்டேன், சாமி."

நாராயண்தாஸ் சிரித்துக்கொண்டே சாந்தியின் கன்னத்தை நெருடிவிட்டான். சாந்தி ஒரு சிரிப்புச் சிரித்தாள். நாராயண்தாஸுக்கு அவளிடம் ஒருவிதமான அன்பு ஏற்பட்டிருந்தது. அந்தமாதிரியான 'கீழ்'ச் சாதிக் குடும்பங்களில் அவ்வளவு அழகான குழந்தையை அவன் அதுவரையில் பார்த்ததில்லை.

"கவுன் புதுசா வாங்கினியா, கிழவா?"

"ஆமாஞ் சாமி."

"இப்படிப் போட்டிருக்கியே; திருப்பின்னு போடணும்? பொத்தான் முதுகுப் பக்கம் வரணுமே, தாத்தா?"

கிழவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்; "அப்படியாங்க? தெரியாதுங்க எனக்கு—"

"என்ன விலைக்கு வாங்கினே கவுன்?" என்றான் நாராயண்தாஸ்.

"எட்டரையணு குடுத்தேனுங்க."

"என்னத்துக்கு இதுக்கு எட்டரையணு? துணி சாயம் போயிடும்போலே இருக்கே?"

கிழவன் குடிசைக்கு வந்ததும், "எட்டரையணு குடுக்கப்படாதா இதுக்கு? தையல்கூலியே நாலணு வாங்கிடுவானே? நாலணுப் பொறுதா இந்தத் துணி?" என்று முணுமுணுத்துக்கொண்டே கவுனைக் கழற்றி நாராயண்தாஸ் சொன்னபடி திருப்பிப் போட்டான்.

4

சாந்திக்கு ஐந்து வயது நிரம்பிற்று. ஒருநாள் காலை. இரவெல்லாம் பெய்த மழை அப்பொழுதுதான் ஓய்ந்திருந்தது. மப்பும் மந்தாரமுமாக இருந்த அடிவானத்தைப் பிய்த்துக்கொண்டு கிளம்புவது போல் சூரியன் தன் ஒளிக்கதிர்களை வட்டமான ஆகாய வெளியில் வாரி இறைத்துக் கொண்டிருந்தான். கோகுல்தாஸ் தோட்டத்து மரங்களின் இலைகள் மழையில் நனைந்து சூரியன் ஒளியில் ஜிலு ஜிலு என்று பிரகாசித்தன. தரையில் எங்கே பார்த்தாலும் தண்ணீர் தேங்கியிருந்தது. நனைந்திருந்த புல்தரைகளும், சிலு சிலு என்று வீசிய காற்றும், மழை பெய்து ஓய்ந்த அமைதியும் சேர்ந்து மனத்துக்கு ஓர் உத்ஸாகத்தை அளித்தன.

கிழவன் குடிசையை விட்டு வெளியே வந்தான். சாந்தி இன்னும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். கிழவன் பல் தேய்த்துவிட்டுக் குடிசைக்குள் நழையப் போன சமயத்தில், "மாமா!" என்று யாரோ கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். சாந்தியின் தகப்பன் எதிரில் வந்து நிற்பதைக் கண்டு, "என்ன, வடிவேலுவா? வா வா, என்ன விசேஷம்?" என்று உள்ளே அழைத்துச் சென்றான்.

"கொழந்தை எங்கே? நல்லாருக்குதா?" என்று கேட்டான் வடிவேலு. அவன் குழந்தையைக் கிழவனிடம் கொடுத்த பிறகு இதுவரையில் மறுபடி வந்து பார்க்கவேயில்லை.

"அதோ பார், படுத்திருக்கு" என்றான் கிழவன்.

வடிவேலு தூங்கிக் கொண்டிருந்த சாந்தியைப் பார்த்துவிட்டு, "இதுவா? என்ன இவ்வளவு வளந்திடிச்சே?" என்றான் ஆச்சரியத்துடன்.

கிழவன் கோபத்துடன், "அஞ்சு வயசாகலே? அஞ்சு வருசம் கழிச்சு இப்பத்தான் வறயாக்கும், கொயந்தையைப் பாக்க நீ?" என்றான்.

"அதான் என் சம்சாரம் சொல்லிச்சு, ஒன் கொயந்தை பெரிசா வளந்திருக்குமே போய்ப் பாரேன்னு. நான் இதுக்குள்ளே எப்புடி வளந்திருக்கும்னு நெனச்சேன்— அவ சொன்னது சரிதான்."

கிழவன் வாயைத் திறவாமல் அவன் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"என்ன பேரு வச்சிருக்கே அதுக்கு?"

"சாந்தின்னு."

"என்ன?"

"சாந்தி."

"சாந்தியா? அதென்ன பேரு அது? வாயிலியே நொழயல்லியே. நல்ல பேரா வைக்கப்படாது? கறப்பாயின்னுதான் நாங்க வச்சோம். அப்படித்தான் இனிமே நாங்க கூப்பிடப் போறும்."

கிழவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "நீங்களா?—"

"அ ஆம்—என் சம்சாரம் கர்ப்பமா இருக்கா; கூட மாட வேலை செய்ய யாரும் இல்லாமே கஷ்டப்பட்டறு. 'உன் பொண்ணே அழைச்சுக்கிட்டு வாயேன்'னு சொல்லி யனுப்பிஞ."

கிழவனுக்குத் தலை சுற்றிற்று; "அதெல்லாம் முடியாதப்பா. சாந்தியை நான் யார் கிட்டேயும் அனுப்ப மாட்டேன்" என்றான்.

வடிவேலு கோபத்துடன், "நல்லாருக்கு நியாயம்! என் பொண் எனக்குச் சொந்த மில்லாமே ஒனக்கு என்ன வந்தது? எத்தனே நாள்தான் நீயே வச்சுக்கிட்டிருப்பே? அதுக்கு வேலையெல்லாம் சொல்லிக் கொடுத்துக் கட்டிக்கொடுக்கவாணும்?" என்றான்.

"அதுக்கு வேலே ஒண்ணும் செய்யத் தெரியாதே."

"தெரியாப் போஞ சொல்லித்தறது. வயசாகலே?"

கிழவன் பரிதாபமாகத் தலையை அசைத்து, "நான் அவளே அனுப்ப மாட் டேன்" என்றான்.

"சும்மாக் கட வாயை மூடிண்டு! நீ பேசறே!"

இந்த இரைச்சலில் சாந்தி விழித்துக்கொண்டாள். எழுந்து உட்கார்ந்து கண் ணைக் கசக்கிவிட்டுக்கொண்டு பார்த்தபொழுது எதிரில் ஒரு புது மனிதன் உட்கார்ந் திருப்பதைக் கண்டு கிழவனிடம் ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவன் பின்னல் நின்றாள்.

"சாந்தி!"

"தாத்தா!"

"இது யார் தெரியுமா?"

"ஹ்ஹ்ஹும்."

"உங்க அப்பா."

"அப்பாவா? அப்பான்னா?"

"அப்பான்னா—ஹ்ம்—காயஞ!"

"ஏ, இங்கே வா" என்று கூப்பிட்டான் வடிவேலு.

சாந்தி அவனை முறைத்துப் பார்த்துவிட்டுத் தலையைப் பலமாக ஆட்டி, "ஹ்ஹ்— ஹ்ஹும்" என்றாள்.

"போ அம்மா, அப்பா கிட்டே" என்றான் கிழவன்.

"வான்ஞ தலையை ஆட்டறியா?" என்று வடிவேலு எழுந்து வந்து அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

குழந்தையின் உடல் நடுங்கிற்று. கண்கள் திகிலுடன் மிரள மிரள விழித்தன. கிழவனை ஒரு கெஞ்சும் பார்வை பார்த்து, "தாத்தா" என்றாள். கண்களிலிருந்து மளமள என்று நீர் பெருகிற்று.

கிழவனின் கண்களிலும் நீர் துளித்தது; "விட்டுடப்பா அவளை. பாவம்! பயப்படுது கொயந்தை. விட்டுடு. அவ என்னை விட்டு யார்கிட்டேயும் போக மாட்டா. எனக்குந்தான் வயசாயிட்டுது. இன்னும் எத்தனை நாள் இருக்கப் போறேன்? நான் இருக்கிற வரையிலும் எங்கிட்டியே இருக்கட்டும். அப்புறம் அப்பனுச்சு பொண்ணுச்சு. நான் இருந்தா பாக்கப்போறேன்?—" என்றான்.

"இதென்னடி வெக்கக்கேடு?" என்றாள் அங்கு வந்த முனியம்மா; "ஏ கிழவா, பைத்தியமா ஒனக்கு? எத்தனை நாள்தான் நீயே வச்சுக்கிட்டிருப்பே பொண்ணை, அப்பங்காரனிடம் அனுப்பாமே?"

கிழவன் பேசமுடியாமல் உட்கார்ந்து விட்டான்; தனக்குப் பரிந்து பேசுவார் ஒருவரும் இல்லை. தான் ஒரு கட்சி; உலகம் தனக்கு எதிர்க் கட்சி.

5

காற்றில் இலைகள் அசையும் ஓசை ஹோ என்று அழுகுரலைப் போல் கிழவன் காதில் ஒலித்தது. விசித்து விசித்து அழுதுகொண்டே சாந்தி தகப்பனுடன் சென்றாள்.

கிழவன் குடிசை வாசலுக்கு வந்து கூரையைக் கையால் பிடித்துக்கொண்டு நின்றான். மரங்களினூடே நுழைந்து பிரகாசித்த சூரிய வெளிச்சம் அவன் தேகத்தின்மேல் வரி வரியாக விழுந்து தோல் ஒட்டிப் போயிருந்த உடலை ஒரு வீணைக் காட்சியாகச் செய்தது. கூன் விழுந்திருந்த முதுகில் முதுகெலும்பு சதையைப் பிய்த்துக்கொண்டு வந்து விடுவதுபோல் தூக்கிக்கொண்டிருந்தது. தூரத்தில் நாராயண்தாவின் குழந்தைகள் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். உலகமே தன்னைப் பார்த்துச் சிரிப்பதாக நினைத்தான் கிழவன்.

பொழுது சென்றது. மகிழமரத்தடியில் போய்க் கிழவன் உட்கார்ந்தான். மாத்தடியில் கொட்டியிருந்த மணலைப் பார்த்ததும் சாந்தி அதிலே வீடு கட்டி விளையாடும் காட்சி கண்ணெதிரில் தோன்றிற்று. அங்கிருந்து எழுந்து கிணற்றங்கரைக்குப் போனான். அங்கும் சாந்தியின் ஞாபகம் விடவில்லை. கிணற்றருகில் போகக்கூடாது என்று அவன் உத்தரவிட்டிருந்ததால் சாந்தி தூரத்தில் நின்று கொண்டு கற்களைப் பொறுக்கிக் கிணற்றில் எறிவாள். கல் உள்ளே விழும்பொழுது குபுக் என்று சப்தம் உண்டாகும். தலையைச் சாய்த்துக்கொண்டு அதைக் கூர்ந்து கவனிப்பாள்.

கிழவன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு உடல் குலுங்க அழுதான். விரல் இடுக்குகள் வழியாய்க் கண்ணீர் தரையில் விழுந்தது. திடீரென்று, "தாத்தா!" என்று யாரோ கூப்பிடுவது போல் பிரமை உண்டாயிற்று. சாந்தியின் குரல்! கிழவன் பாய்ந்து எழுந்திருந்து குடிசையை நோக்கி ஓட முயன்றான். தரைக்கு மேல் தூக்கிக்கொண்டிருந்த மரத்தின் வேர் தடுக்கிக் கீழே விழுந்தான். விழுமுன் "சாந்தி!—" என்று ஒருதரம் கத்தினான்.

சாந்தியின் பெயர் தோட்டமெங்கும் எதிரொலித்தது. "சாந்தி—"

1—1—41 அன்று திருச்சி ரேடியோவில் படிக்கப்பட்டது; அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

நீர்க்குமிழி

எப். டபிள்யூ. பேயின்

[ஆங்கில மூலத்திலிருந்து ஆசிரியர் அனுமதியுடன் கி. சாவித்திரி அம்மாள் மொழிபெயர்த்தது.]

(சென்ற இதழ் 491-ஆம் பக்கத் தொடர்ச்சி)

15

அவளைக் கரங்களால் இறுக அணைத்தவண்ணம் இவ்வாறு அவன் கூறிக்கொண்டிருக்கும்பொழுது ஹரிணி திடீரென்று அவன் கைகளைத் தள்ளிவிட்டு அப்பால் சிறிது தூரத்தில் சென்று மௌனமாய் மணல் வெளியை நோக்கியவண்ணம் நின்றாள். அதிரூபன் ஆசையும் யோசனையும் கலந்த பார்வையுடன் அவள் என்ன செய்யப்போகிறாளோ என்பதை அறியும் ஆவலுடையவனைப்போல் பார்த்துக்கொண்டே நின்றான்.

'அவள் ஒரு முகட்டின் நுனியில் நின்றுகொண்டிருப்பவள்போல் இருக்கிறாள். இன்னும் ஒரு கூசணத்தில் தலை சுற்றிப் பள்ளத்தில் விழுந்து விடுவாள். போவதா இருப்பதாவென்று ஒரு விதமான தீர்மானமும் செய்யத் தைரியம் இல்லாதவளாய்த் தவிக்கின்றாள். இவ்வாறு கலங்குவதனால் உண்டாகும் வேதனையைப் பொறுக்க முடியாமல் அச்சங்கடத்தை யாராவது தீர்த்துவைக்கமாட்டார்களா என்று ஏங்கி நிற்கின்றது அவள் உள்ளம். மயிரிழையின் கனமும் இப்பொழுது தராசைச் சீர்தூக்கிவிடும்' என்று அவன் தனக்குள்ளேயே கூறிக்கொண்டான். பிறகு அவன் அவள் அருகில் சென்று, "நீ இப்பொழுது இவ்விடத்தை விட்டுச் சென்றாலும் எல்லாவற்றினிடமும் முடிவாக விடைபெற்றுச் செல்லவேண்டியதில்லை யென்பதை மறந்துவிட்டாயா? வேண்டும்போதெல்லாம் நீ இங்கே வந்து பார்த்துவிட்டுச் செல்வதற்கு என்ன தடை இருக்கிறது?" என்று கேட்க அவள் தான் நின்ற விடத்திலேயே நின்றுகொண்டு திரும்பிப் பார்த்து ஒரு பதிலும் சொல்லாமல் இருந்தாள்.

அவன் மறுபடியும், "ஹரிணி, நான் கூறுவது கேட்கவில்லையா? நீ இவ்வனத்தினிடம் கடைசிமுறையாக விடைபெற்றுக்கொண்டு வந்துவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லையே!" என்றான்.

அவள் பதில் சொல்லுவாளென்று அவன் சிறிதுநேரம் காத்திருந்தான். அவளோ இருந்த இடத்தை விட்டு நகராமலும் பேசாமலும் இருக்கவே அவன் மீண்டும், "நான் தனியாகத்தான் போகவேண்டுமென்று நீ தீர்மானித்துவிட்டால் சரி. அப்பொழுது எனக்கொன்றும் இங்கே வேலை

யில்லை. நான் இவ்விடத்தை விட்டுச் செல்லவேண்டியவன்தான். எனக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான் போய்த்தான் ஆகவேண்டும். ராஜ்யத்தை விட்டு நான் வந்து வெகு நாட்களாய்விட்டன. என்னுடன் வந்த ஆட்கள் அந்த மலையடிவாரத்தில் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதாவது என்னை ஞாபகப்படுத்திக்கொள். கதையாகிவிட்ட நம்முடைய காதலுக்கும் சந்தோஷத்திற்கும் எள்ளும் ஜலமும் இறைத்துவிடு. இந்த வனத்திலேயே நான் இருக்கமுடியாது. நீ என்னுடன் வரவில்லையென்றால் நான் இங்கே திரும்பிவருவதும் மீனே! நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன். இனிமேல் நீ என்னை ஒருபோதும் காணமாட்டாய்" என்றான்.

இவ்வாறு அவன் கூறி முடித்ததும் ஹரிணி திரும்பினாள். வேண்டாமென்று தடுப்பவள் போலவும் வேண்டிக் கொள்பவள் போலவும் கைகளை நீட்டியவண்ணம் அவன் முன் ஓர் அடி எடுத்து வைத்தாள். உடனே கால் தடுமாறிக் கீழே விழச்சென்ற அவளை அதிரூபன் தாவிச் சென்று பிடித்துக்கொண்டான்.

மிகவும் மெல்லிய குரலில் அவள், "என்னை இப்பொழுதே அழைத்துப் போய்விடுங்கள். இல்லாவிடில் இதோ என் ஹிருதயம் இரண்டாகப் பிளந்துவிடும்" என்று கூறிப் பிரக்ஞையிழந்தவளாய் அவன் கைகளில் விழுந்துவிட்டாள்.

தன் கைகளில் நினைவிழந்து கிடக்கும் அவளை அதிரூபன் ஒரு நிமிஷம் நோக்கிக்கொண்டே நின்றான். பிறகு சிறிது தயங்கியவன்போல் தனக்குள்ளேயே பின்வருமாறு கூறிக்கொண்டான்: "சரி! வேலை முடிந்தது. நாம் ஜயித்து விட்டோம். இவள் நமக்குச் சொந்தமாய் விட்டாள். ஆயினும் ஏனோ எனக்கு இப்பொழுது மனசு கொஞ்சம் கேட்கவில்லை! தேனைப் பருக எடுக்கும்பொழுது தேனீ கடித்துவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி தோன்றுகிறதே. பாவம்! கடைசியில் இவள் நம் உறவினளல்லவா? தன் பிழையை உணர்ந்த பிறகு என்ன செய்வாள்? ஆயினும் காரியம் மிஞ்சிவிட்டதே! இனிமேல் என்ன செய்வது? என்னுடன் வந்தாலும் வராவிட்டாலும் இவள் சீக்கிரத்தில் மனமுடைந்துதான் போகப்போகிறாள்."

பிறகு அதிரூபன் அவளைக் கைகளில் ஏந்தியவண்ணம் மரங்களினூடே மலைவழியாய் இறங்கிச் சென்றான்.

16

இரவு பகலாயிற்று; பகல் இரவாயிற்று. நாட்கள் சென்றன. கிருஷ்ணபக்ஷமும் சுக்லபக்ஷமும் மாறி மாறி வந்தன. பிரதி தினமும் சூரியன் வழக்கம்போல் உதித்து ஆகாயமார்க்கத்தில் சென்று சாயங்காலமானதும் மேற்குத் திசையில் அஸ்தமிக்கலானான்.

ஒரு நாள் அவ்வாறு கதிரவன் அஸ்தமிக்கும் தருணம், பப்ரு ஹரிணி காணமற் சென்றதினம் கடைசியாகத் தான் அவளுடன் பேசிவிட்டுப் பிரிந்த

அதே இடத்தில் சூரியன் வேகமாக மேற்றிசையில் மறைவதை நோக்கிய வண்ணம் தனியே உட்கார்ந்திருந்தான். மூன்பு பார்த்ததற்கு இப்பொழுது அவன் மிகவும் உருமாறித் தென்பட்டான். இடையில் எவ்வளவோ வருஷங்கள் சென்றதன் பலனை, அவன்மீது மூப்பின் சின்னங்கள் ஏற்பட்டனவோ என்று எண்ணும்படி தோற்றினன். சீர்குலைந்து வாட்டமே உருக்கொண்டதுபோல் விளங்கியது அவன் தோற்றம். அவனது சிவந்த குழிவிழுந்த கண்களைப் பார்க்கும்பொழுது தனக்குப் போட்டியாக வந்த துக்கத்தையும் கவலையையும் கண்டு தூக்கம் அக்கண்களை விட்டு ஓடிவிட்ட தோவென்று எண்ணும்படி இருந்தது.

கதிரவன் கடைசியாக மலைவாயில் விழுந்து மறையும் காட்சியை நோக்கியதும், 'இவ்வாறே வெகு சீக்கிரத்தில் நான் வந்த காரியம் முடிந்து விட்டதென்று இந்த ஜன்மத்தை ஒழித்துச் செல்ல நினைக்கிறேன். ஆவி பிரிந்து சென்ற பிறகு கவனித்துப் பார்த்துப் பிறருக்கு அருவருப்பை அளிப்பதாயிருக்கும் இவ்வற்ப உடலை வைத்துக்கொண்டிருப்பதில் என்ன பயன்? இந்த உடலை விட்டு அந்த ஆவி எங்கே சென்றது? அதற்காக எங்கே தேடுவது என்றும் தெரியவில்லை. ஹரிணி இவ்வுலகை விட்டு அகன்று விட்டாள். இனி ஒருபோதும் திரும்பிவரமாட்டாளென்று நிச்சய மாய்த் தெரிந்துவிட்டால் இத்தேகத்தை மிகவும் களிப்புடனேயே தொலைத் திருப்பேன். அவள் இறக்காமலிருந்து ஒருகால் திரும்பிவருவாளோ வென்ற நம்பிக்கை மட்டும் இல்லாத பக்ஷத்தில் வெகுகாலத்திற்கு முன்ன மேயே நான் உயிர் நீத்திருக்கமாட்டேனே? ஐயோ! அவள் இறந்துவிட் டாளோ, அல்லது இன்னும் உயிரோடு இருக்கிறாளோ? ஒன்றும் தெரிய வில்லையே! அவள் இறந்திருக்கமாட்டாள், உயிரோடுதான் இருப்பாள் என்றால் அவளை எங்கும் காணவில்லையே! இவ்வனத்தின் ஒரு கோடியி லிருந்து மற்றொரு கோடிவரையும் நான் தேடியாயிற்று. மரங்களின் ஒவ்வோர் இலையையுங்கூட நான் பிரித்துப் பார்த்து விட்டேன். சென்ற அடையாளமே இல்லாமல் ஸ்வப்பனம் போலன்றோ மறைந்து விட்டாள்? தாமரையின் இதழிலிருந்த பனித்துளி நடுப்பகலின் வெப்பத் தில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுவதுபோல் ஆய்விட்டதே! காலையில் பார்த்தவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு அப்பனித்துளி இருந்ததே தெரியாமற் போய்விடுமல்லவா? அவள் எப்படிச் சென்றாளோ, எங்கே சென்றாளோ ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. திருடனைப்போல் பார் அவளை அபகரித்துச் சென்றார்களோ! அவர்கள் அவளைக் கொன்றும் இருக்கலாம் அல்லது அதைக்காட்டிலும் கேவலமான ஸ்திதியிலும் வைத் திருக்கலாம். ஐயோ! நான் ஏன் அவளைத் தனியே விட்டுச்சென்றேன்? என்னைத்தான் சொல்லவேண்டும். வானத்தில் பறக்கும் பருந்தின் நிழலைப் பூமியில் கண்டு நடுங்கும் சிறு குருவியைப்போல் தீங்கு விளையப் போவதை அறிந்தும் நான்தான் நடுங்கி ஒளிந்துகொண்டேன். இனி மேல் அவளை மீண்டும் பார்ப்போம் என்ற நம்பிக்கையே எனக்கு முற்றும்

அற்றுப் போய்விட்டதே. நாளைப் பொழுது விடியுமட்டும் நான் உயிரை விடாமல் எதற்காகக் காத்திருக்கவேண்டும்? ஆயினும், அவள் இறக்கவில்லை, மீண்டும் உயிரோடு திரும்பிவருவாள் என்றால்—? அப்பொழுது நான் உயிரை விட்டு விடுவது எவ்வளவு அறியாமையாகும்! அப்படிக்கின்றி அவள் இறந்திருந்தால்—? அப்பொழுது இவ்வுடலை வைத்துக் கொண்டிருப்பது முற்றும் வீணல்லவா? ஆயினும் கடைசியில் அவள் உயிரோடு இருந்து விட்டால் என்னசெய்வதென்று என் உயிரை மாய்த்துக் கொள்ளவும் மனம் துணியவில்லை" என்று தானே கூறிக்கொண்டான்.

அச்சமயம் திடீரென்று ஏதோ சப்தம் அவன் காதில் விழுந்தது. கவனித்துக்கேட்டதும், 'ஏதோ குதிரைகளின் காலடிச் சப்தம்போலல்லவோ தோன்றுகிறது!' என்று எண்ணியவனுய் வேகமாக எழுந்தான். சுழலில் அகப்பட்டவன் வைக்கோல் தரும்பைப் பற்றிக்கொள்வதுபோல் நிராசையின் மத்தியில் ஏதோ கொஞ்சம் நம்பிக்கை பிறக்க அவன் ஹிருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது.

'இவ்வேளையில் குதிரைகள் இங்கே வருவானேன்?' என்று யோசித்தவனுய்ச் சப்தம் வருமிடத்தையே அவன் கவனித்து நோக்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது அநேகம் குதிரை வீரர்கள் ஒருவர்பின் ஒருவராய் அடர்ந்த மரங்களின் வழியே அவன் இருக்குமிடம் நோக்கிவருவதைக் கண்டான். அருகில் வந்ததும் அவர்களுள் தலைவன்போல் தோன்றியவன் குதிரையினின்றும் கீழிறங்கிப் பப்ரூவை நோக்கி நடந்து சென்றான். அவன் முகத்தைப் பார்த்ததும் பப்ரூ, "ஹா! அன்றொருநாள் புதரின் மறைவில் நான் பார்த்த முகமல்லவா இது!" என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்டான். உடனே அவன் உரத்த குரலில், "நீயா? நான் நினைத்தது போல் கடைசியில் திருடன் நீதானு?" என்று கத்தினன்.

அதற்குப் பதிலாகச் சாமு சிரித்துவிட்டு, "அப்பா! அவ்வளவு கூச்சலிடாதே. நீ மிகவும் அவசரப்படுகிறாய். மரியாதை இல்லாமல் பேசுகிறாய். நீ நினைப்பது முற்றும் தவறு. நாம் பழைய நண்பர்கள் என்று நீ கூறியவரையில் மிகவும் உண்மையே! இருந்தாலும் அநியாயமாய் நீ என்னைப் பற்றித் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறாய். திருடியவன் நான் அல்ல. உன்னுடைய ரதி தேவியைத் தூக்கிச் சென்றவர் எங்கள் அரசர் அதிரூபரே யன்றி வேறொருவரும் அல்ல. அவரையும் மரியாதையில்லாமல் திருடனென்று நீ கூறலாமா? அவளை அவர் திருடிச் செல்லவேயில்லை. அவளுடைய இஷ்டத்தின் பேரில்தான் கொஞ்ச நாட்களுக்குத் தம்முடன் அழைத்துச் சென்றிருந்தார். இப்பொழுது என்னுடன் அவளைத் திருப்பி அனுப்பிவிட்டார். இதோ இருக்கிறாள் பார்" என்று கூறி அவன் திரும்பியதும் பப்ரூ அவ்விடம் நோக்கினன். ஹரிணியை அவர்கள் குதிரையினின்றும் கீழே இறக்கிவிட்டார்கள்.

இடி விழுந்தவன்போல் திடுக்கிட்ட பப்ரூ அவளை நோக்கிக்கொண்டு நிற்க, சாமு மறுபடியும் சொல்லலானன்: "என்னைத் தூஷிப்பதற்கு

மாறுக நீ என்னிடம் மிகவும் நன்றியோடல்லவா இருக்கவேண்டும்? இப் பாலைவனத்தையெல்லாம் கடந்து அவளை மீண்டும் உன்னிடம் கொண்டுவந்து சேர்த்துவிட்டேனல்லவா! வேறெருவராயிருந்தால் வழியிலேயே அவளை விட்டுச் சென்றிருப்பார்கள். வருவதற்கே மனம் இல்லாமலிருக்கும் அவளை இங்கே கொண்டுவந்து சேர்ப்பதில் எனக்கு என்ன பயன்? அரசர் அதி ரூபரையும் கள்வனென்று பழிப்பது எவ்வளவு தவறென்பது உனக்கே இப் பொழுது தெரிகின்றதல்லவா? இவ்விஷயத்தில் புத்தியற்றவர்களென ஸ்திரீகள் தங்களையே குற்றம் கூறிக்கொள்ள வேண்டும். தேனைச் சுற்றி மொய்க்கும் ஈக்கள்போல அவர்கள் தாமே வந்து அவரைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த வடிவழகையோ ஆயிரம் பேர்களில் தானும் ஒருத்தியேயொழிய வேறல்லவென்று அறிந்தும் துக்கமும் சலிப்பும் கொண்டவளாகிப் படுத்தத் தொடங்கிவிட்டாள். இப்படிப்பட்டவளை வைத்துக்கொண்டு எங்கள் அரசர் என்ன செய்வார்? இப்பொழுது இவள் முன்போல் இல்லை. எவ்வளவோ விஷயங்களை அறிந்துகொண்டிருக்கிறாள். இவளை மனைவியாகப் பெற்று மிகவும் சௌகரியத்தை அடைவாய். ஓர் அரசனுடைய ஆலிங்கன சுகத்தை அனுபவித்தவளாகையால் இவள் சிருங் கார கலையில் தேர்ந்தவளாகி விட்டாள். உன்னுடைய மற்றக் குழந்தைகள் உன்னைப் போல் குரூபமாயிருந்தாலும் உன் முதல் பிள்ளை மிக்க ரூபவானா யிருப்பான். அவனுக்கு அதிரூபன் என்று அவன் தாய் ஞாபகார்த்தமாய்ப் பெயரிட்டு அழைத்தால், அழைத்துவிட்டுப் போகட்டும். அழுவது நின்ற பிறகு தானே உன்னையும் அவள் ஆர்வத்துடன் காதலிக்கத் தொடங்கு வாள்.”

இவ்வாறு சாமு கூறிக்கொண்டிருக்கும்பொழுது பப்ரு அவனை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தானேயன்றி, கண்கள் உண்மையில் அவனை நோக்கவில்லை. காதுகளும் அவன் கூறியவைகளைக் கேட்கவில்லை. அவன் உள்ளத்தில் சாமுவின் சொற்கள் ஒன்றுமே புகவில்லை. ஏனெனில், இரக்கம் அருவருப்பு ஆச்சரியம் இவைகளோடல்லாமல், எப்படியோ ஹரிணி திரும்பி வந்து சேர்ந்தாளே என்ற சந்தோஷத்தில் அவன் உள்ளம் முழுகிக் கிடந்தது. கோபமென்பது அவனுக்கு அணுவளவும் உண்டாக வில்லை. சாமுவையும் ஹரிணியையும் மாறி மாறி அவன் நோக்கிக்கொண் டிருக்கும்பொழுதே சாமுவும் அவனைத் தொடர்ந்துவந்த மற்றவர்களும் குதிரைமீது வந்த வழியே திரும்பிச் சென்றனர்.

17

ஆனால், அவர்கள் சென்றதையும் கவனிக்காமல் பப்ரு சுவரில் எழு திய சித்திரம்போல் ஹரிணியை நோக்கிக்கொண்டே நின்றான். இரக்கத்தின் மிகுதியால் அவன் கண்களில் நீர் நிறைந்து பார்வையை மறைத்தது. ஹரிணியோ குதிரையினின்றும் இறக்கிவிட்டபடி தரையில் கவிழ்ந்தவாறு உயிரற்றவள்போல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முகம்

மாறிப்போயிருந்தது. இளமையும் ஆனந்தமும் போய் அவைகளுக்குப் பதில் துக்கம், கிழத்தன்மை, வெட்கம், சலிப்பு, நிராசை முதலியவை கூடிச் சண்டையிடுவதற்குரிய இடமாய் விட்டதுபோல் தோன்றிற்று. முன் போல் இல்லாமல் அவள் சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்திருந்தாள். ஆயினும் அவை அலங்கோலமாய்க் கலைந்து புழுதிபடிந்து காணப்பட்டன. அவளது கூந்தல், அமைதி குலைந்த அவள் உள்ளத்தின் நிலைமையை எடுத்துக் காண்பிப்பதுபோல் அவிழ்ந்து தாறுமாறுமாய்ப் புரண்டுகொண்டிருந்தது. ஆயினும் எவ்விதமாகவோ பப்ரூவின் கண்களுக்கு அவள் முன்னிலும் பன்மடங்கு அழகாகவே தோற்றினாள். ஆனால் அவ்வழகு அவன் ஹிருதயத்தில் ஒருவிதமான அச்சத்தை விளைவிப்பதாகவே இருந்தது. அவள் முற்றும் மாறிப்போய் வேறு யாரோ என்று எண்ணும்படியாயிருந்தாள். அவளை நோக்கிக் கொண்டிருக்கும்பொழுது, இன்னதென்று அறியாமலே எதையோ எதிர்பார்த்து நடுக்கம் கொள்வதுபோல் அவள் தேகத்தில் மயிர் சிலிர்த்து நின்றது. அவளைத் தொட்டுத் தேற்றி இனிய மொழிகளால் சமாதானம் செய்ய வேண்டுமென அவன் உள்ளம் அவாவுற்ற போதிலும் அவன் தன்னை மறந்து மௌனமாய்த்தான் நின்றான்.

உட்கார்ந்திருந்த இடத்திலேயே வேதனை பொறுக்க முடியாமல் ஒவ்வொரு சமயம் கஷ்டப்பட்டு மெதுவாய் மூச்சு விடுவதைத் தவிர வேறு கவனம் இல்லாமல் கிடக்கும் அவளை நோக்கிக்கொண்டேயிருந்த பப்ரூவுக்கு ஒருவிதமான பயம் தோன்ற ஆரம்பித்தது. வெகுநேரம் கழித்து அவன் அவளருகில் சென்று சற்று அச்சத்தோடு உணர்ச்சி மேலிட்ட குரலில் கூறலானான்.

"ஹா, ஹரிணி! நீ மிகவும் கஷ்டப்படுகிறாயே! நீ சிரமப்படுவதை நான் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? எப்படியோ நீ திரும்பி வந்து சேர்ந்துவிட்டாயே! எனக்கு அது போதும். உன்னுடைய கஷ்டத்திற்கெல்லாம் நான்தான் காரணம். உன்னைத் தனியே விட்டுச் செல்வது தவறென்று எனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் நான் உன்னை விட்டுச் சென்றேனல்லவா? தெய்வாதீனமாய் நீயும் சரியான சமயத்தில்தான் திரும்பி வந்து சேர்ந்தாய். இன்னும் ஒருநாள் நீ வராமல் இருந்தால் நான் துக்கத்தைத் தாங்கியிருக்க மாட்டேன். நீ இறந்துவிட்டாயென்றே நான் நினைத்தேன். ஒவ்வொரு நாளும் நீ வந்துவிடுவாயென்று காத்துக்கொண்டிருந்தேன். ஒரு நாளைக்கு ஒருநாள் போதுசெல்லுவது இன்னும் பயங்கரமாகவே இருந்தது. நீ வரவேயில்லை. உனக்காக வனத்தில் மூலை முடுக்குப் பாக்கியில்லாமல் தேடினேன். இப்பொழுது என் கண்ணெதிரில் நீ நிற்கிறாய். என்னால் இதை நம்பவே முடியவில்லை. ஆனந்தம் தாங்காமல் என் உயிர் போய்விடும் போல் இருந்தாலும் என்ன காரணத்தாலோ அவ்வானந்தத்தில் சகிக்க முடியாத ஒரு வேதனையும் கலந்திருக்கிறது! நீ கஷ்டப்படும்பொழுது நான் சந்தோஷப்படுகிறேனே! என்னுடைய சுயநலத்தை என்னென்று சொல்லு

வேன்! உன் துன்பத்தைப் பகிர்ந்துகொள்வதற்கோ முற்றும் நானே அனுப விப்பதற்கோ, என்ன செய்யவேண்டும்? சொல்."

இவ்வாறு கூறிவிட்டு அவன் ஆவலுடன் அவளை நோக்கியதும் அவள் கண்களினின்றும் திடீரென்று கண்ணீர் முத்தொன்று தோன்றிக் கீழே உதிர்ந்தது. ஆயினும் அவள் இருந்த இடத்தை விட்டு அசையவும் இல்லை; பேசவும் இல்லை.

பப்ரு மீண்டும் தயங்கியவண்ணம் வருத்தத்துடன் கூறலானான்: "ஹரிணீ, உன்னுடைய அழகைக் கண்டு மயங்கி யாரோ பாவிகள் வந்து உன்னைத் தூக்கிச் சென்றதற்காக உன்மேல் பழிசுமத்துவேனென்று நினைக் கிறாயா? வழியிலே போகிறவன் தாமரை மலரைப் பறித்துத் தலையில் சூட் டிக்கொண்டு அடுத்த நிமிஷமே காலில் மிதிபடும்வண்ணம் எடுத்து எறிந்து விட்டானென்றால் அதற்குத் தாமரை என்ன செய்யும்? அது அதன் குற்ற மாகுமா? ஐயோ! நானல்லவா குற்றம் செய்தவன்? நானும் உன்னோடு இப் போது அழவல்லவா வேண்டும்? எப்படியோ நீ திரும்பி வந்துவிட்டாயென்று சந்தோஷப்படுகிறேனே! அது இன்னும் பெரிய குற்றமல்லவா? நான் ஏதா வது உன்மீது குறைகூறிக் கேள்விகள் கேட்டுத் துன்புறுத்துவேனென்று பயமா? ஹா! உனக்கு அந்தக் கவலை வேண்டாம். நடந்ததெல்லாம் கேவலம் ஸ்வப்னம். அதிலிருந்து விழித்துக்கொண்டுவிட்டதாக வேண்டுமானால் நினைத்துக்கொள். எனக்கோ ஒன்றும் தெரியாது; ஆதலால், நானும் உன்னைப் போலவே எல்லாவற்றையும் அடியோடு மறந்துவிடுகிறேன். இப்பொழுதோ நடந்ததெல்லாம் நடக்காத சம்பவமாகவேதான் தோன்றுகிறது."

இவ்வாறு கூறிய அவன் குற்றம் செய்தவன் மன்னிப்பை வேண்டுவது போல் அவளை மீண்டும் ஆவலுடன் பார்த்துக்கொண்டு நின்றான். அவன் சொற்கள் கூரிய கத்திபோல் அவள் ஹிருதயத்தைக் குத்தியதோ என் னும்படி அவள் கண்களினின்றும் கண்ணீர் ஆறு போல் பெருகியோடத் தலைப்பட்டது. அப்பொழுதும் அவள் பேசவில்லை. அவன் மறுபடியும் வேண்டிக்கொள்பவன் போலக் கூறலானான்.

"ஹரிணீ, என் சந்தோஷம் எப்படிப்பட்டதென்பதை நீ கனவில்கூட அறிய முடியாது. நீ மிகவும் கலங்கியும் களைப்புற்றும் காணப்படுகிறாய். நீ வந்தால் வீட்டிற்கு அழைத்துச் செல்லுகிறேன். எவ்வளவு நாழிகை யானாலும், எவ்வளவு நாட்கள் வேண்டுமாயினும் நீ அங்கே நிம்மதியாய்த் தூங்கலாம். நான் வெளியில் உன் நித்திரை கலையாவண்ணம் காவல் காத்துக்கொண்டிருப்பேன். உன் காலால் இட்டதைத் தலையால் செய்வேன். எல்லாவற்றிற்கும் மேல் இனி உன்னை ஒருவரும் அபகரித்துச் செல்லா வண்ணம் பார்த்துக்கொள்வேன். இனிமேல் உனக்குத் துன்பத்தைச் செய்ய நினைத்தவன் என்ன கதியாகிறான் பார்! வெகு சீக்கிரத்தில் உன்னை இப் பொழுது துன்பத்திற்குள்ளாக்கிக் கொண்டிருப்பது எதுவோ அதன் ஞாபகமே உன் உள்ளத்தை விட்டு மறைந்துவிடும். உன்னை அவமானப் படுத்தவாவது அல்லது உன் மன அமைதியை எவ்விதத்திலேனும் கலைக்கவா

வது வருபவர் ஒருவரும் இருக்கமாட்டார்கள். நீ காணுமற் போனதைக் கண்டு நான்தான் உன்னை அழைத்துச் சென்றேனென்று எண்ணி உன் தகப்பனார் என்னைத் தேடி வந்தார். தாம் நினைத்தது தவறென்று அறிந்ததும், "ஐயோ! ஜயன் மறைந்து குத்திவிட்டானே!" என்று கதறினார். எனக்கு அச்சொற்கள் ஒன்றும் விளங்கவில்லை. அதனுடன் அவர் ஹிருதயம் பிளந்துவிட்டது போலும்! இரண்டு நாட்களுக்கெல்லாம் அவரது ஆவி அவர் உடலை விட்டுப் பிரிந்து சென்றது."

அதைக் கேட்டதும் மின்னல்போல் வேகமாய் எழுந்து நின்ற ஹரிணி அவ்வனம் முழுவதும் சிலம்பும்படி ஒரு கூச்சலிட்டாள். அம்முழக்கத்தைக் கேட்கப் பப்ரூவின் ஹிருதயம் அப்படியே நின்றுவிடும்போல் இருந்தது. பொறக்க முடியாத வேதனையுற்றவள் போல் கைகளை நீட்டித் தவித்தவள் திடீரென்று தான் வசித்திருந்த குடிசையை நோக்கி அம்பு போல் பாய்ந்து சென்றாள். அவ்வாறு சென்றவள் மறு நிமிஷமே திரும்பி மான்போல் எதிர்ப்பக்கம் விரைந்து சென்றாள். ஒன்றும் புரியாமல் பப்ரு அவளை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு நின்றான். சில நிமிஷங்கள் கழிந்த பிறகு கனவினின்றும் விழித்து எழுந்தவனைப்போல் அவள் பின்னல் விரைந்து சென்று, "போகுமிடம் எதுவென்று கூடப் பாராமல் எங்கே வேகமாய்ச் சென்றுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்பவனைப்போல் அவள் தோளின்மீது கையை வைத்தான்.

அவன் கைபட்டதும் ஹரிணி நின்று ஒரே திகிலடைந்தவளாய்த் திரும்பிப் பார்த்தாள். ஆச்சரியமும் வெறுப்பும் கண்களில் விளங்க அகல விழித்துக்கொண்டு பைத்தியம் பிடித்தவள்போல் திடீரென்று சிரிக்கலானாள். "ஹா பப்ரூ! நீயா? நான்தான் உன்னைத் தனியே விட்டுச் சென்றேனே? பாவம்! உன்னையும் பிடிக்காமல் தள்ளி விட்டார்களா? வா, அப்படியானால் நாம் இருவரும் சேர்ந்து ஓடிப்போய் விடுவோம்" என்று கூறி அவன் கையைப் பிடித்துத் தன்னுடன் வேகமாய் இழுத்துக்கொண்டு செல்லத் தொடங்கினாள். ரகசியம் பேசுவதுபோல் குரலைத் தாழ்த்தி என்ன என்னவோ பேச ஆரம்பித்தாள். பேசிய வேகத்தில் வார்த்தைகள் கூடத் தெளிவில்லாமல் இருந்தன: "பாவம்! பப்ரூ! நீ மிகவும் விகாரமாயிருக்கிறாயென்று ஹரிணி உன்மீது காதல் கொள்ளவில்லை. ஆனால், அவளும் விகாரந்தான்; தன்னைக் காதலிக்கக் கூடியவர் ஒருவரும் இல்லையென்பதை அவள் மறந்து விட்டாள். ஆனால் அவள் அழகை என்னென்று சொல்லுவேன்! அவ்வழகிற்காகத்தான் அவள் உன்னை ஏமாற்றிவிட்டுச் சென்றாள். தன்னைப்போல் அறிவிழந்தவர்களை மற்றெல்லா ஸ்திரீகளும் என்பதை அவள் கனவிலும் எண்ணியவளல்ல. அந்த ஸ்திரீகள்தாம் எவ்வளவு பேர்கள்! அவர்கள் எவ்வளவு கொடியவர்கள்! இங்கு வேறு ஸ்திரீகள் ஒருவரும் இல்லையே! ஹரிணி சென்ற பிறகு எங்கும் வெறிச் சென்றிருந்ததா? அவர்கள் இருவரும் நகரத்தில் ஒருவரையொருவர் முத்தமிட்டு ரமித்துக்கொண்டிருக்கும்பொழுது, பப்ரூ, நீ இங்கே தனியே

கிடந்தாய். தான் இன்புற்றிருக்கும் சமயம் நீ இங்கே தனியே உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பது ஹரிணியின் மனக்கண்முன் தோன்றிவிடும். அவளுக்கு உன்மீது அடியோடு அன்பில்லாமற் போகவில்லை. ஆயினும் நீ எங்கே திடீரென்று ஒரு நாள் வந்து விடுவாயோவென்று அவள் பயந்து கொண்டே இருந்தாள். அவள் சென்றவிடத்தை ஒருகால் நீ அறியவில்லை போலும்! இல்லாவிடில் நீ அவரைக் கொன்றிருக்க மாட்டாயா?

"பப்ரூ! நீ ஏன் அவளைப் பின் தொடர்ந்து செல்லாமல் பேசாமலிருந்து விட்டாய்? ஆனால் உன் குரூபத்தைப் பார்த்துக் காவலாளர்கள் உன்னை உள்ளே விட்டிருக்கமாட்டார்கள். வேறு வழியில்லாமல் நீ அரண்மனைக்கு வெளியே சுற்றிச் சுற்றி அலைந்து கொண்டிருப்பாய். அப்பொழுதெல்லாம் அரண்மனைக்குள் உனக்குரிய தாமரைமலரை அவர் மோந்து முத்தமிட்டுக் கசக்கிக் காலின்கீழ் மிதித்து எறிந்துகொண்டிருந்தார். ஹரிணியும் ஒரு ராஜ குமாரிதான்; அவருக்கு உறவினளுமாவாள். பாவம்! பப்ரூ, உனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது. ஆனால் ஹரிணியைப்போல அங்கே இன்னும் எவ்வளவோ ஸ்திரீகள் இருந்தார்கள். அவர்கள் நடுவில் ஹரிணி யை நீ எங்கே அடையாளம் கண்டுகொள்ள முடியும்? அவள் கண்களின் அழகும் அதரங்களின் ஸ்பரிசமும் வேறுதான். வனத்தில் வேறு ஸ்திரீகள் இல்லாமையால் அவை மிகவும் உயர்வாய்த்தான் தோன்றின. பப்ரூ, காலின் கீழ் மிதித்து எறியப்படும் அவமானத்திற்காளானவன் நீ ஒருவன்தான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாயா? ஆனால் நீ எவ்வளவு விகார ரூபம் உள்ளவனென்பதை எளிதில் நீயே அறிந்து கொண்டிருக்கலாம். ஹரிணியோ மிகவும் அழகுள்ளவள். அவளுக்கே இந்த விதி வாய்த்திருக்கும்பொழுது உன்னைப்பற்றி என்ன சொல்வது? அவளே காதலுக்குரியவளாக இல்லாதிருக் கும்பொழுது அவள் உன்னை எப்படிக் காதலிப்பாள்? அவரோ இவ்வனத் தில் வழிதவறி வந்த மன்மதனேவென்று கூறும்படி இருந்தார். ஆனால் வழி தவறித் தவித்தவள் ஹரிணியேயொழிய அவரல்ல. அவருக்கு வழியெல்லாம் நன்றாய்த் தெரியும். அவரது அன்பு முழுவதும் தானே அடைந்து அனு பவிக்கவேண்டுமென்று அவள் எதிர்பார்க்க முடியுமா? மயக்கும் கொடிய கண்களையுடைய பெண்கள் உலகில் நிரம்பிக் கிடக்கவில்லையா? பப்ரூ, ஒருத்தியைமட்டும் உயர்வாய் நினைக்கும்படி உனக்கு என்ன அவ்வளவு பேதைமை! அவர் தன்னைமட்டுமே காதலிக்க வேண்டுமென்று ஹரிணி ஆசைப்பட்டாளே; அதுவும் பேதைமைதான்!

"பப்ரூ, உனக்கும் அவருக்கும் ஈடேது? நீ விகாரமாய் முரட்டுத்தன மாயிருக்கிறாய். அவரோ இணையற்ற எழில் பொருந்திய ஒரு பெண்ணைக் காட்டிலும் அதிகமான எழில் வாய்ந்தவர். அவரது தயையையும் அன்பையும் ஆர்வத்துடன்கூடிய முத்தங்களையும் என்னென்று சொல்லு வேன்! ஆனால் உண்மையில் அவரா தயையுள்ளவர்? பப்ரூ, நீயல்லவா? அவரை நல்ல பாம்பென்றல்லவா சொல்லவேண்டும்? எவ்வளவு ஆர்வம் மிகுந்த முத்தங்களாக இருந்தாலும் வேறு இதழ்களைக் கண்டவுடன் அவை

மிகவும் வேண்டாதனவாகி விடுகின்றன. எங்கள் இருவர்களுக்கிடையில் வேறு இதழ்களும் இடம் பெற்றிருப்பது தெரியும்பொழுது, எப்படியிருக்கும்? அவளுடைய அதரங்களோ ஆயிரக்கணக்கான வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கும் மலர் போன்றவை. ஐயோ! பப்ரூ, ஒரு பெண்ணையும் முத்தமிட்டு அறியாத உனக்கு அதையெல்லாம் பற்றி என்ன தெரியும்? என்னை வேண்டுமானால் முத்தமிட்டுப் பார்! வண்டுகள் எச்சிற்படுத்திச் சென்ற, தேனுடன் கசிந்து கிடக்கும், இதழ்களை முத்தமிட்டுப் பார்த்தால் அப்பொழுது அக்கொடிய விஷம் எப்படிப்பட்டதென்பதை நீ அறிந்து கொள்வாய்.''

(தொடரும்)



"பங்காளி"

எஸ். ராமன்

வீரையன் முகத்தில் என்றுமுள்ள சாந்து இல்லை. அவன் கண்கள் கோபமிகுதியால் சிவந்திருந்தன. வண்டியை அவிழ்த்துவிட்டவன் வழக்கம்போல் மாட்டிற்குத் தண்ணீர் காட்டிக் கட்டிவிட்டு வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்தான்.

பின்புறம் வேலை செய்துகொண்டிருந்த அவன் மகள் கண்ணம்மா வண்டி அவிழ்த்த சப்தம் கேட்டு அரைநாழிகைக்கு மேலாகியும் நாயனு வழக்கம்போல் தன்னைக் கூப்பிட்டுக்கொண்டு உள்ளே வராததால், வேறு எங்காவது அவசரமாய் வெளியில் போய்விட்டாரோ என்று பார்ப்பதற்காக வெளியில் வந்தாள். அங்கு வீரையன் உட்கார்ந்திருந்த நிலையைப் பார்த்ததும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. இரண்டு நிமிஷம் பேசாமல் அவனைப் பார்த்தபடியே இருந்தாள். வீரையன் திரும்புவதாகக் காணவில்லை. மெதுவாக 'நாயனு' என்று கூப்பிட்டாள்.

வீரையன் அப்பொழுதுதான் கனவிலிருந்து விழித்தவன்போல் திரும்பிப் பார்த்தான்.

"என்ன நாயனு! அப்பவே வண்டிச்சத்தம் கேட்டிச்சே; இந்நேரம் மட்டும் உன்குரலைக் காணலையேன்னு பார்க்க வந்தேன். நீ சாஞ்சிக்கினு உட்காந்திருக்கறதெ பாத்ததும் எனக்குப் பக்குனிச்சு. உடம்பு சரியாயில்லியா?"

"இல்லை கண்ணு. கொஞ்சம் அலுப்பாயிருந்திச்சு. நீயும் பின்பக்கம் இருந்திட்டியா; அப்படியே இங்கே கொஞ்சம் உக்காந்தேன்" என்று சொல்லியபடியே சட்டென்று எழுந்து மாட்டைக் கட்டித் தீனி வைக்கப் போய்விட்டான்.

கண்ணம்மாவுக்கு விஷயம் புரியவில்லை. ஆனாலும் நாயனு தன்னிடமிருந்து எதையோ மறைக்கப் பார்க்கிறார் என்று மட்டும் தெரிந்துகொண்டாள். அவனுடைய முகமே அதை அவளுக்குத் தெரிவித்தது. வீரையன் இரவு சாப்பிடும்பொழுதும் அதிகமாக வார்த்தையாடவில்லை; பேசாமல் இரண்டுவாய் அள்ளிப் போட்டுக் கொண்டு ஓலைப்பாயையும், வெற்றிலைப்பையையும் எடுத்துக்கொண்டு தெருவுக்குப் போய்விட்டான். கண்ணம்மாவிற்கு வேலை ஓடவில்லை. இப்படி ஒருநாளும் அவள் நாயனு நடந்துகொண்டது இல்லை. அவனது மனத்திலுள்ளதை எப்படியாவது அறிந்துகொள்ள வேண்டுமென அவள் நினைத்தாள். சட்டுப்புட்டென்று வேலையெல்லாம் முடித்துக்கொண்டு தானும் தெருவுக்குப் போனாள்.

வீரையன் வெற்றிலைப்பையைக் கையில் பிடித்தபடியே உட்கார்ந்திருந்தான். கண்ணம்மாவுக்கு முதலில் பேச்சுக் கொடுக்கத் துணிவு பிறக்கவில்லை. இனியும் பேசாமல் இருந்தால் அவள் ஏதாவது சந்தேகப்படப் போகிறாளே என்றெண்ணி அவனே பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தான்.

"என்ன கண்ணு, வேலையெல்லாம் அதுக்குள்ளேயா முடிச்சிட்டே?"

அவனே பேச்சை ஆரம்பிக்கவே, கண்ணம்மா சிறிது தைரியம் கொண்டாள்.

"நம்ப வூட்டுலே என்ன தொலேயாத வேலே! அது போவட்டும்; என்ன, சாயந்திரத்திலேருந்து ஒரு மாதிரியாயிருக்கயே?"

"அது ஒண்ணுமில்லேம்மா....."

"எல்லாம் எனக்குத் தெரியும். நீ எங்கிட்டே மறைக்கப் பாக்கிறே."

இதைச் சொல்லும்பொழுதே அவள் குரல் கம்மிற்று. அவள் முகத்திலும் ஒரு மாறுதல் ஏற்பட்டதை வீரையன் கவனித்தான். அவள் மனத்தைப் புண்படுத்த அவன் நினைக்கவில்லே. அவன் கண்ணுக்கு முன் அன்று மத்தியான்ன நிகழ்ச்சிகள் தோன்றி அவன் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டன.

"நமக்குப் பங்காளியா இந்த ஊருக்கு ஒரு பயல் வந்து சேந்திருக்கானம்மா."

விஷயம் வெளிவரவும் அவள் வருத்தக்குறி மறைந்தது. ஆனால் அவள் மனம் இன்னும் அறியவேண்டுமென்று ஆர்வம் கொண்டது.

"என்ன நாயனு, என்னமோ திடுதிப்பின்னு புதுர்போடறுப்போலே சமாசாரம் சொல்லறே."

"ஆமாங் கண்ணு! இந்த ஊரிலே இத்தினி நாளாய் நம்ப ஒரு வண்டிதானே ஓடிக் கிட்டிருந்திச்சு? அதைக் கண்டு எவனுக்கோ பொறுக்கல்லே. எங்கிருந்தோ வந்திருக் கான், ஓர் அனுதைப்பயல். முருகன்னு பேராம். அப்பன் ஆயி ஒத்தரும் இல்லே. ரயில் டேசன்லியே இத்தினி சோறு வாங்கித் தின்னுக்கிட்டு இருக்கான்."

கண்ணம்மாவின் மனம் அங்கு நிலைநிற்கவில்லே. அது சடுதியில் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பறந்தது. அவள் முருகனைக் கற்பனைசெய்து பார்த்தாள்: அங்கே ஸ்டேஷன் விளக்கடியில் ஓர் ஒற்றைமாட்டுவண்டி அவிழ்த்துக் கிடந்தது. அதற்கு முன்னுல் காளேபோன்ற ஒரு வாலிபன்; இருபத்தைந்து வயதிருக்கும்; முறுக்கிவிட்ட மீசை. நல்ல கட்டுமஸ்தான தேகம்; இருந்தாலும் அந்தத் தனிமையின் சோகம் அவன் முகத்தில் தோன்றியது. பாதி சாப்பிட்டவாறே ஏதோ குருட்டு யோசனே செய்துகொண்டு உட்கார்ந்திருந்தான்.....கண்ணம்மாவிற்கு அவளே அறியாமலே முன்பின் தெரியாத அந்த முருகனிடம் ஒரு பச்சாத்தாபம் ஏற்பட்டது. அவள் வாயி லிருந்து 'பாவம்!' என்ற வார்த்தை வெளிவந்தது.

வீரையன் கோபம் இன்னும் அதிகமாயிற்று.

"பாவன்னுதான் கண்ணு, நானும் அந்தப் பயலே நாலு நாளாக இந்த ஊரிலே விட்டு வச்சிருக்கேன். போரூன் அறியாப்புள்ளே, நாலு காசு சம்பாதிச்சிட்டுப் போரூன்னு பாத்தாக்கா, அவன் நம்ம கிட்டியே தன் வேலையைக் காண்பிக்கிறான். இன்னிக்கி மத்தியான்னம், பாத்துக்கோ, அக்கிராரத்துக்கு வந்த சவாரியை என்னே மறிச்சு இந்தப் பய ஓட்டிக்கிட்டுப் போயிட்டான். இன்னும் அவன் வீரையனே நல்லாத் தெரிஞ்சுக்கல்லே. அவனுக்கு நல்லாப் புத்தி சொல்லாட்டி நானும் வீரை யன்தானு? இல்லாட்டி நான் இந்த ஊரிலே ஏளு வருசமா வண்டி ஓட்டறதுந்தான் நிசமா?"

"நீதான் சொல்றியே, அறியாப் புள்ளேன்னு. இன்னுங் கொஞ்சநாள் போனுத் தன்னுலே நீ சொல்றபடி கேட்டுக்கிட்டு இருக்கும்."

"அதுமாதிரி அந்தப் பயலேப் பண்ணுட்டி இந்தக் கையாலே தலேக் கவுத்தெ பிடிச்சு வண்டி ஓட்டமாட்டேனே."

பிறகு ஒரு வாரத்திற்கு வீரையனுக்குத் தன் சாமர்த்தியத்தைக் காண்பிக்கச் சரியான சமயம் வாய்க்கவில்லை. அவன் ஸ்டேஷனுக்குப் போகும்போது முருகன் எங்கேயாவது சவாரி போயிருப்பான்; முருகன் வரும்பொழுது வீரையன் எங்கேயாவது போயிருப்பான். அப்படி ஒவ்வொரு சமயம் இரண்டு பேரும் சேர்ந்திருந்தாலும் இருவருக்கும் சவாரி கிடைத்து வந்தது. வீரையனுக்கு இது பெரிய தர்மசங்கடமாயிருந்தது. நாயனு ஒன்றும் விசேஷமான செய்தி சொல்லாததால் இப்படியே அமைதியாய் இருந்து, பிறகு சமாதானமாய்விடும் என்று கண்ணம்மா எண்ணியிருந்தாள். முருகன் வீரையனோடு பேசவில்லை; ஆனால் அவன் கோபமாயிருக்கிறான் என்று சிறிதும் சந்தேகப்படவில்லை.

ஒருநாள் சாயந்திரம் 6-20 மெயில் வண்டிவரும் சமயம். இருவரும் 'கேட்டு'க்கு வெளியே வண்டியை அவிழ்த்துப் போட்டிருந்தனர். வீரையனுவது மூன்று நடை அடித்திருந்தான். முருகனு காலையில் செட்டித்தெருவுக்குப் போன ஒரு நடையோடு சரி. அந்தப் பணமும் மத்தியான்னமே செலவழிந்துவிட்டது. இன்னும் மெயிலும் எட்டேமுக்கால் வண்டியுந்தான் பாக்கி. அதற்குள் எதாவது வந்தால்தான் உண்டு.

இதற்குள் ரெயில் வெளிக் கைகாட்டியண்டை வரும் சப்தம் கேட்கவே இருவரும் வண்டியைப் பூட்டி நிறுத்திவிட்டுக் 'கேட்'டில் வந்து நின்றனர். ரெயிலில் கூட்டமே இல்லை. ஓர் இருபது வயது இளைஞன் மட்டும், கையில் ஒரு சிறிய 'ஸூட்கேஸு'டன் இறங்கிவந்தான். அவன் டிக்கட்டை ஸ்டேஷன் மாஸ்டரிடம் கொடுத்துவிட்டுக் கைப்பெட்டியைப் பழகியவன்போல் முருகனிடம் கொடுத்தான். எங்கே போகவேண்டுமென்று கேட்டதற்குச் சிங்காரத்தோப்பிற்கு என்றான். முருகன் பெட்டியுடன் வண்டியை நோக்கி நடந்தான்.

வீரையனுக்கு முகத்தில் அடித்தாற்போல் இருந்தது.

"ஏய் முருகா! மெயில்வண்டிக் கிராக்கி எப்போதும் என்னுடையது. பெட்டியை என் வண்டியில் வச்சிடு" என்றான்.

"என்ன அண்ணே, நீதான் மூணு நடை அடிச்சிட்டியே. இந்த ஒரு நடை நான்தான் போறேனே."

"அந்தக் கணக்கெல்லாம் உன்னைக் கேக்கல்லே, தம்பி. ஊரிலே நெலச்சிருக்கணும்னு நான் சொல்றபடி கேக்கணும்."

இதற்குள் வாலிபன் நிலைமையை ஒருவாறு அறிந்துகொண்டான். முருகனுக்குத் தைரியமூட்ட எண்ணினான்.

"தம்பீ, உன்கையிலே பெட்டியைக் கொடுத்தேன். உன் வண்டியை ஓட்டறதாயிருந்தால் ஓட்டு. இல்லாட்டாப் பெட்டியைக் கொடு. நான் நடந்து போறேன்!'

முருகன் பேசாமல் பெட்டியை வண்டியில் வைத்தான்; இளைஞன் ஏறிக் கொள்ளவே மாட்டைத் தட்டிவிட்டான்.

வீரையனுக்கு நிலைமையைச் சமாளிக்கச் சிறிது நேரமாயிற்று. முருகன் தன்னை இவ்வளவு தைரியமாக மட்டந்தட்டுவானென்று நினைக்கவேயில்லை. மிரட்டினால் கிராக்கியை விட்டுவிடுவான், அப்புறம் அவனுக்கு ராத்திரி செலவுக்கு எதாவது கொடுத்துவிடலாமென நினைத்தான். இனியும் அவனைத் தளர்க்கவிடக் கூடாதென்று தீர்மானித்தான்.

வண்டியிலேறி உட்கார்ந்தான். மாடு தன் நடையில் போய்க்கொண்டிருந்தது. சிவன் கோயில் மூலை வந்ததும் வண்டியை ஓரமாய் நிறுத்தினான். சிங்காரத்தோப் பிலிருந்து வரும்பொழுது முருகன் அவ்வழியாகத்தான் வரவேண்டும். எப்படியும் பார்த்துக்கொள்ளலாம் என்று இருந்தான்.

முருகன் எதிர்பார்த்ததற்குமேல் இரட்டிப்புக் கூலி கிடைத்துவிட்டது. வீரையனைப்பற்றி அவன் துளிக்கூட நினைக்கவில்லை. காளையை நாலுகால் பாய்ச்சலில் கிளப்பிவிட்டான். வண்டிச்சப்தம் கேட்டதும் வீரையன் தன் வண்டியை ஈசான மூலைப் பள்ளத்திற்குப் பக்கத்தில் ஒதுக்கினான். யார் எதிரில் வந்தாலும் வண்டியை நிறுத்தித்தான் ஆகவேண்டும்; இல்லாவிட்டால் பள்ளத்தில் விழவேண்டியதுதான்.

முருகனுக்கு ஊர் புதிது. பணம் கிடைத்த சந்தோஷம் வேறு. வீரையன் வண்டிநின்ற பக்கங்கூடப் பார்க்கவில்லை. அவன் கோபத்தைக் கிளப்பிவிடு வானேனென்று மாட்டைச் சிறிது ஒதுக்கிவிட்டான். வீரையனும் அந்தப் பக்கமாகவே திருப்பினான். முருகன் தன் வண்டி அதனுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காக இன்னும் கொஞ்சம் ஒதுக்கினான். அடுத்த நிமிஷம் தடால் என்று சப்தம் கேட்டது. மாடு பள்ளத்தில் மொடித்து விழுந்தது. வண்டியும் குடைசாய்ந்தது. முருகனும் எதிர்பாராத நிலையில் இருந்ததால் தூக்கி எறியப்பட்டான். நல்ல வேளையாக வண்டிச் சக்கரம் பள்ளத்தில் மாட்டிக்கொண்டதால் மேலே ஏற முடியவில்லை. முருகனுக்குத் தலையில் நல்ல ஊமைக்காயம். தோள்பட்டையில் சிறிது கிழித்து ரத்தம் வந்துகொண்டிருந்தது. அப்படியே மூர்ச்சையாகிவிட்டான்.

வீரையனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. சட்டென்று இறங்கி ஓடினான். இப்படியும் அப்படியும் அசைத்துப் பார்த்தான். பேச்சு மூச்சில்லை. அவன் மனத்தில் பெரிய கிலி பிடித்தது. அப்படியே எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடினான் வீட்டிற்கு.

"கண்ணு! கண்ணு!"

கண்ணம்மா வந்தாள். நாயனு கையில் ரத்தக்கறையையும், முகத்தில் கோரக் களையையும் கண்டதும் ஏதோ விபரீதம் நடந்திருக்கிறதென்று ஊகித்து விட்டாள். ஆனால் அவள் வாயைத் திறக்க நேரமில்லை. வீரையன் கத்த ஆரம்பித்துவிட்டான்.

"என் கண்ணு! நான் இனி இந்த ஊரிலே தலை காட்டமுடியாது. எங்கேயா வது கண்காணுமல் ஓடவேண்டியதுதான். ஐயோ! முருகனே நான் கொன்னுட் டேன். பொழுது விடிஞ்சா என் தலை தரிக்காது....."

"என்ன நாயனு உளர்றே! ஏன் உனக்கு இப்படிப் புத்தி தடுமாறிப் போச்சு?

"எனக்கு இப்போ புத்தி சரியாத்தான் இருக்கு, கண்ணு. அப்போதான் நாசமாப் போற புத்தி தடுமாறிப்போய் அந்தப் பயலே வழிமறிச்சுக் குழியிலே தள்ளிட்டேன்."

கண்ணம்மாவுக்குக் கைகாலெல்லாம் வெடவெடவென்று உதறலெடுத்தன. இருந்தாலும் சமாசாரத்தை ஒருவாறு வாங்கிக்கொண்டாள். முருகன் எப்படியாவது உயிர் பிழைக்கவேண்டுமென்று தனது இஷ்ட தெய்வத்தையெல்லாம் வேண்டிக் கொண்டாள். வீரையனைத் தைரியம் சொல்லி ஆசுவாசப்படுத்தினாள். பின்பு மெதுவாக அவனையும் அழைத்துக்கொண்டு சிவன் கோவில் மூலைக்குச் சென்றாள்.

இருட்டு மூலை; ஜன நடமாட்டமே இல்லை. முருகன் படுத்தபடியே இருந்தான். வீரையன் கிட்ட நெருங்கவும் பயப்பட்டான். கண்ணம்மாவிற்கு முருகன் முகத்தைப் பார்க்கும்பொழுதே மயிர்க்கூச்சல் எடுத்தது. தன் மனத்தில்

எழுதியுருவத்தை நேரில் பார்க்கும்போது அவள் உடல் வேர்த்தது. ஆனால் அந்தக் கோலத்தில் பார்ப்போமென்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. முதலில் தொடுவதற்கும் கூச்சப்பட்டாள்.

இருவரும் தயங்கினால் காரியம் ஆவது எப்படி? கூசுவதற்கு அதுவா சமயம்? கண்ணம்மா மெதுவாக மார்பில் கையை வைத்துப் பார்த்தாள். அப்படித் தொடும் பொழுதே அவளுக்கு ஏதோ ஒரு காந்த சக்தி இழுப்பதுபோல் இருந்தது. அவள் முகத்தில் இருந்த பயக்குறி தெளிந்தது; தைரியம் பிறந்தது. முருகனுக்குச் சுவாசம் நூலிழைபோல் வந்துகொண்டிருந்தது. வீரையனையும் தைரியப்படுத்தினாள். பின்பு இருவருமாக முருகனைப் பிடித்து வண்டியில் போட்டார்கள். முருகனது வண்டி மட்டும் அங்கேயே கிடந்தது. அவனுடைய மாட்டைமாத்திரம் ஓட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்தனர்.

முருகன் இன்னும் கண்விழிக்கவில்லை. ஆனால் இனி உயிருக்குப் பயம் இல்லை. வீரையன் பேய்பிடித்தவன்போல் நின்றுகொண்டிருந்தான். முருகனுக்கு வேண்டிய வைத்தியமெல்லாம் கண்ணம்மாவே செய்தாள். அவன் தோள்காயத்திற்கு வெந்நீர் வைத்து அலம்பிக் கட்டினாள். அவன் தலைக்கும் மார்பிற்கும் தலைவி ஒற்றடம் கொடுத்தாள். தந்தையும் மகளும் அன்றிரவு சாப்பிடவும் இல்லை; தூங்கவும் இல்லை.

ராத்திரி மூன்றுமணியிருக்கும். முருகன் சிறிது கண்விழித்தான். கண்ணம்மா தயாராக வைத்திருந்த ஆட்டுப்பாலில் சிறிது அவன் வாயில் விட்டாள். அவன் இன்னும் ஒருதடவை கண்ணை மூடித்திறந்தான். அவனுக்கு நினைவு சிறிது தெளியத் தொடங்கியது. சுற்றுமுற்றும் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தன் வண்டியை விட்டுத் தான் எங்கேயோ படுத்திருப்பதையும் பதினெறு வயதுப் பெண்ணொருத்தி தன் பக்கத்தில் நின்றுகொண்டிருப்பதையும் கவனித்தான்.

வீரையன் மெதுவாக அவள் பக்கத்தில் வந்தான்.

"முருகா!"

முருகன் தலையை நிமிர்த்தி அவனை நோக்கினான். வாய்பேச முடியவில்லை.

"தம்பி! என்னை மன்னிச்சிடு. நான் அவசரத்திலே செஞ்சிட்டேன். என் மகள் கண்ணம்மாதான் உன் உயிரையும் காப்பாத்தினா; என் உயிரையும் காப்பாத்தினா."

முருகன் கண்ணம்மா பக்கம் திரும்பினான். அந்தப் பார்வையில் நன்றியறிவு, திருப்தி, ஆறுதல் எல்லாம் கலந்திருந்தன; அவைகளுக்குமேலே ஓர் உணர்ச்சியும் தோற்றியது. அவன் தன் பார்வையால் பேசின மௌனப்பேச்சுக்குக் கண்ணம்மாவும் தன்னுடைய புன்சிரிப்பால் விடை அளித்தாள்.

கண்ணம்மாவைப் போல் ஒரு மோகினி தனக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்கும்பொழுது வீரையனை அவன் மன்னிப்பதற்கு என்ன?

* * * * *

முருகன் 'பங்காளியாக' வந்ததற்காக அவனிடம் கோபங்கொண்டான் வீரையன். ஆனால் அவனுடைய சொத்தெல்லாமாகிய கண்ணம்மாவையே தனதாக்கிக் கொண்டுவிட்டான் முருகன். வீரையனும் தன் வாக்கை நிறைவேற்றிவிட்டான். முருகன் இப்பொழுது அவன் சொல்கிறபடிதான் நடக்கிறான். வண்டிக் கிராக்கியையும் தானே பார்த்துக்கொண்டுவிடுகிறான். இப்போதெல்லாம் அவனை அழைத்தென்றால் கண்ணம்மாவிற்குப் பிரமாதமான கோபம் வந்துவிடுகிறது.

———


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JUL 1941
MADRAS

ஐவர்மலை

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.

பழநியம்பதியின் மேற்கே ஒன்பது மைல் தூரத்தில், நீர்நிலைமட்டத்திற்கு 1402 அடி உயரத்துக்குமேல் ஓர் அகன்ற நிலப்பரப்பின் நடுவில் பூமியினின்றும் திடீரென முளைத்ததுபோன்ற உயரிய பாறை ஒன்று தன் உச்சியிலே ஒரு விநாயகர் கோயிலுடன் திகழ்கின்றது.[1]

அதற்குச் சிறிது தூரத்தில் ஒரு பெரிய மலையும் அதன் சகோதரி போல் அதனைப் போற்றி நிற்கின்ற தன்மையாய்த் தோன்றுகின்றது. ஐவர் மலைக்கடுத்து வானளாவிய தென்னை பலா மரங்களும், தெளிந்த நீரோடைகளும், பரந்த தோட்டங்களும் கண்ணுக்கினிய காட்சி அளிக்கின்றன.



ஐவர்மலைத் தோற்றம்

தமிழ்நாடெங்கும் இது போன்ற பெரும் பாறைகள் பலவுள. அவற்றுள் தலைமையுடையவை திருப்பரங்குன்றம், அழகர்மலை, மேட்டுப்பட்டிச் சித்தர்மலைக் குகை, யானைமலை, கொங்கர் புளியங்குளம், கருங்காலக்குடி முதலியவையாகும்.[2] இத்தகைய குன்றுகளின் உச்சிகளிலேனும், சரிவுகளிலேனும் காணப்படுகின்ற மலையரங்குகள் 'பஞ்சபாண்டவர் படுக்கை' என மக்களாற் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இவ்வழக்கு, பஞ்சபாண்டவர்களது வனவாசத்தின் சார்பாக எழுந்த பல கதைகளை ஒட்டியதென்பதற்கு இடந்தருகின்றது. ஆனால், வேறொரு செய்தியும் இங்கே குறிப்பிடுவதற்குரியது. தென்னிந்தியாவிலே சமண மதம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி வளர்ந்து, கி. பி. 7, 8 ஆம் நூற்றாண்டுவரையில் சிறப்புற்றிருந்ததென்பது சரித்திர உண்மை. அச்சமயத்துறவிகள் பெரும்பாலும் மக்கள் நடமாட்ட மற்ற இடங்களாகிய மலையுச்சிகளிலும், ஒதுக்கிடமாகிய பாறைகளுக்கிடையிலும், வெயில், மழை, குளிர் முதலியவற்றினாலே துன்பம் நிகழாத

---

1. இம்மலை அயிரைமலை, அயிரூர் மலையெனவும் வழங்கப்பெற்றதென்பர்.
2. Epi. Rep. 1918. p. 7.

பாதுகாப்பிடங்களிலும் வதிந்துவந்தனர். அதற்குச் சான்றாக, அவர்கள் வாழ்ந்த மேற்குறிக்கப்பட்ட இடங்களிலே காணும் பாறைகளிலே அவர்களுள் சிலர் தம் பெயர்களை அக்காலத்திய பிராமி, வட்டெழுத்து முதலிய லிபியிற் பொறித்து வைத்திருக்கின்றனர். இன்னும் சில இடங்களில் அவர்கள் தூங்குதற்குரிய கற்களைச் சமமாகச் செதுக்கியும், தலையணைகளைப் போல் அமைத்தும் செய்துகொண்ட வசதிகளைக் காணலாம். இக்காரணங்களால் மேற்குறித்த இடங்கள் அக்காலங்களிலே ஜைனப்பள்ளிகளாகவும், ஜைனத்துறவிகள் உறைவதற்கான இடங்களாகவும் இருந்தன என்பதை அறியலாம்.



'பஞ்சபாண்டவர் படுக்கை'

இத்தகைய அமைப்புக்களை இந்த ஐவர்மலையிலும் காணலாம். ஏறக்குறைய 160 அடி நீளமும், 13 அடி உயரமும், 30 அடி அகலமும் உள்ள ஒரு நீண்ட பாறைக்குகையை ஆறு கூறுகத் தடுத்து, அப்பாறையின்மீது 18 அங்குல உயரமுள்ள ஜைன தீர்த்தங்கரரின் உருவச்சிலைகள் பலவகையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வுருவச் சிலைகளிற் சில நின்ற நிலையாகவும், வேறு சில உட்கார்ந்த நிலையாகவும், பின்னும் சில படமெடுத்த நாகத்தின்கீழ் அமர்ந்த நிலையாகவும், மற்றும் சில மும்முடி சூடிய தோற்றமாகவும், இன்னும் சில இருமருங்கும் சாமரை வீசி நிற்கும் நிலையாகவும், வேறு பல இவையன்றிப் பல்வேறு வகையாகவும் காட்சியளிக்கின்றன.

இப் பரந்த பாறையைச் சுற்றிப் பல வட்டெழுத்துக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆயின், இவை இன்ன என ஆராயப்பட்டனவா



கோவலன்—கண்ணகி

('சிலப்பதிகார'க் கதை)

ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், எம். ஏ., ஐ. ஸி. எஸ்.
ஆங்கிலத்தில் ஆக்கியதைத் தழுவி

தி. அ. சாமிநாத ஐயர்
தமிழில் எழுதியது.
விலை ரூ. 1—0—0

பி. வரதாச்சாரி அண்டு கம்பெனி
8, லிங்க செட்டித் தெரு,
சென்னை.



Retail Branch:
285, China Bazar Road.

இனம்

எம்முடைய நெல்சன் ரோம சங்காரி தேகத்தின் எந்தப் பாகத்திலு முள்ள மயிரையும் அடியோடு போக்கி மீண்டும் வளரவொட்டாமல் தடுத்து விடுகின்றது. அது சருமத்தை வழு வழுப்பாகவும் மிருதுவாகவும் ஆக்கி விடுகின்றது. ஒரு புட்டி விலை ரு. 2. மூன்று புட்டிகளின் விலை ரு. 5-8-0.

ஒவ்வொரு புட்டியுடனும் அமெரிக் கப் புதுமைத் தங்கம் இனமாக அளிக்கப்படும். இதனைத் தகடு போலவும் கம்பிபோலவும் ஆக்கிப் பலவித ஆபரணங்கள் செய்யலாம். இது அசல் தங்கம் போல் தோற் றம் அளிக்கின்றது.

மூன்று புட்டி வாங்குவோருக்கு இத்தங்கம் மூன்று தோலா இனமாக அளிக்கப்படும்; புட்டிகளை அனுப்பும் தபாற் செலவும் இனம்.

Indo Western Trading Co.,
P. O. Box No. 10,003 (Sec. K.M.)
CALCUTTA

புதிய கலைமகள் ஸோல் ஏஜெண்டுகள்

ஸ்ரீ மெ. அழ. காசிவிசுவநாதன் செட்டியார்
நியூஸ் ஏஜெண்டு, புதுப்பட்டி
போன்னமராவதி போஸ்டு.
(புதுக்கோட்டை ஸ்டேட்)

பாரத் நியூஸ் ஏஜென்ஸி,
114, ஸுபாதார் சந்து,
திண்டுக்கல்.

புதிய சந்தாதார் சேர்க்கவும் பழைய சந்தா வசூல் செய்யவும் இவர்களுக்கு அதிகாரம் அளித்துள்ளோம். இவர்களே சந்தா தார்க்கு விநியோகம் செய்வர். கலைமகள் வெளியீடுகளும் இவர் களிடம் கிடைக்கும்.

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

என்பது தெரியவில்லை. ஆகவே, இம்மலைக் குகைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஜைனப் பள்ளிகளாக இருந்தனவென்றும், ஜைனர்கள் மறையவே அவ்விடங்களைப் பொதுமக்கள் பஞ்சபாண்டவர் படுக்கை என்று வழங்குவராயினரென்றும் தெரிகிறது. நாளடைவில் இச்செய்தி வலியுறுதற்கு அம்மலைக்குகைகளுக்குக் கீழும், அடிவாரங்களிலேயும், கன்னிமார், திரௌபதை ஆகியோர்க்குக் கோயில்களும் ஏற்பட்டதனால் இப் பெயர் வழங்கலாயிற்றென்று கூறலாம். இதற்கேற்ப இம்மலையிலும் திரௌபதைக்கு முதன்மையான கோயிலும், அதனையடுத்து விநாயகர், தண்டபாணி கோயில்களும் காணப்படுகின்றன. இம்மலையை அடுத்த ஐயம்பாளையம் கிராமத்திலிருந்து ஒரு பண்டாரம் நாள்தோறும் இங்குவந்து தீர்த்தங்கரருக்கு அபிஷேகமும், வேண்டிய தெய்வத்திருமேனிகளுக்குப் பூசையும் இயற்றி வருகின்றார். இம்மலைமீதுள்ள பிள்ளையார் கோயிலும் சமீபகாலத்திலேயே கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆனால், ஐவர் மலைக்குள்ள சில சிறப்பியல்புகள் ஆராய்வதற்குரியனவாகும். ஐவர்மலை என்ற பெயராலும், இம்மலையின்மீது காணும் சில குறிகளாலும் இதனைச் சுற்றிலுமுள்ள இடப்பெயர்களைப் பற்றிய ஆராய்ச்சியாலும் உண்மையாகவே இம்மலையில் ஐவர்கள் வதிந்திருந்தார்களென எண்ண இடமுண்டாகிறது. பஞ்சபாண்டவர் வனவாசம் புரிந்தமைக்கும், ஐவர்மலைக்கு அணித்தாயுள்ள தாராபுரம், காரைத் தொழுவு, கடத்தூர், பொருந்தல் ஆகிய ஊர்ப்பெயர்களுக்கும் பல தொடர்புகள் காணப்படுகின்றன. தாராபுரம் விராடபுரத்தின் பெயர்த்திரிபென்றும், விராடனுடைய பசுக்கூட்டங்களைக் கவர்ந்து கடத்தின இடமே கடத்தூர் என்றும், அம்மாடுகளைத் தொழுப் பூட்டியிருந்த இடமே காரைத் தொழுவு என்றும், அம்மாடுகளைத் திருப்பிக்கொணர்ந்த இடமே திருப்பூர் என்றும், ஐவருள் அருச்சுனன் தவம் புரிந்த இடமே வராககிரிச் சாரலான பழநிமலை என்றும், அதற்கு ஏழாவது மைலில் உள்ளதே பழம் மீண்டும் பொருந்திய இடமாகிய பொருந்தல் என்றும் அப்பெயர்களுக்குப் பொருத்தங் காட்டி வழங்குவதை நோக்குங்கால் அக்காலத்தில் பாண்டவர் ஐவர்மலை என்ற இம்மலைக் குகையில் வதிந்திருக்கக் கூடும் என ஒருவாறு கூறலாம். இன்றும் தாராபுரத்திற்கு வடக்கே சிறிது தூரத்திலுள்ள மருதகாளியம்மன் கோயிலில் ஒரு வன்னிமரத்தின் பொந்திலேதான் இப்பாண்டவர்கள் விராடனிடம் மறைந்து உறைதற்கு முன்னர், தங்கள் ஆயுதங்களை மறைத்துவைத்துச் சென்றனர் என்ற வழக்கும் இக் கூற்றுக்கு ஆதாரமாகின்றது.

ஆகவே, ஐவர்மலை பாரதகாலத்திலே சிறிது காலம் அஞ்ஞாதவாசத்தினுக்கு இடமாயும், பிற்காலத்தில் ஜைன சந்நியாசிகள் வதிந்துவருவதற்குரிய இருக்கையாகவும் இருந்திருக்கலாம். இதனை அறிஞர்கள் ஆராய்வார்களாக.

———

ஸ்வர்க்கம் தந்த வரம்

கவி பச்சன்

[ஹிந்தியிலிருந்து கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்த்தது]

1

இது சிருஷ்டியின் ஆரம்பகாலத்தில் நிகழ்ந்த கதை. அப்போதும் பூமியில் மனிதன் இருந்தான். மனிதனிடத்தில் இதயம் இருந்தது. இதயத்தில் பூஜை செய்யவேண்டுமென்ற ஆவல் இருந்தது. ஆனால், தெய்வங்கள் இல்லை. அப்போதும் மனிதன் சூரியனுக்கு அர்க்கியம் கொடுத்து வந்தான்; அக்கினிக்கு அவிர்ப்பாகம் சமர்ப்பித்து வந்தான். ஆனால் இவைகளினால் மட்டும் அவனுக்குத் திருப்தி உண்டாகவில்லை. அவன் இன்னும் ஏதோ ஒரு பொருளை வேண்டினான்.

"ஓ ஸ்வர்க்கமே! நீ பூமியில் எங்களுக்கு எல்லாவிதமான சௌகரியங்களையும் அளித்திருக்கிறாய். ஆனால் நீ எங்களுக்கென்று ஒரு தெய்வமாவது கொடுக்கவில்லையே! உன்னிடத்திலோ தேவர்கள் குழுமியிருக்கின்றனர். நாங்கள் எங்கள் காணிக்கைகளை அர்ப்பணம் செய்ய ஒரு தேவனை இங்கே அனுப்பு. அவன் எங்கள் காணிக்கைகளைப் பெற்றுப் புன்னகை புரிவான்; எங்கள் உள்ளத்தில் புதைந்துள்ள கருத்துக்களை அறிந்துகொள்வான். எங்களுக்காக ஒரே ஒரு சாகூதாத்தான தேவனை அனுப்பிவிடு" என்று உயரக் கையைத் தூக்கி மனிதன் பிரார்த்தனை செய்தான்.

உலகத்தின் குழந்தைப் பருவத்து மனிதன் செய்த அந்தப் பிரார்த்தனையில், ஸ்வர்க்கமும் உருகும்படியான அத்தனை நேர்மையும் உண்மையும் இருந்தன.

"போய்க் கோயில் கட்டு! சரத்ருதுவில் பௌர்ணமியன்று, சந்திர பிம்பம் அடிவானத்தின்மீது எழும் தருணத்தில், கோயிலில் தேவன் தோன்றுவான். போ, கோயில் கட்டு" என்று ஆகாசவாணி உண்டாயிற்று. அதைக் கேட்டு மனிதனின் உள்ளம் களிப்பினால் பொங்கியது. அவன் ஸ்வர்க்கத்தை அடிக்கடி வணங்கலானான்.

'உலகத்தில் தெய்வங்கள் வரும்' என்னும் பேராசை மனிதனது வாழ்க்கையில் அளவிலா உற்சாகத்தை மூட்டிவிட்டது. சிறிது காலத்துக்குள் கோயில் கட்டியாயிற்று. சந்தனக் கதவு அமைக்கப்பட்டது. பூசாரியை நியமித்தான். சரத் பௌர்ணமியும் வந்தது. அதிகாலையிலிருந்தே பக்தகோடிகள் தீர்த்த பாத்திரமும் புஷ்பாகூதைகள் நிரம்பிய தட்டுக்களும் ஏந்தியவர்களாய்க் கோயிலைச் சுற்றிக் குவிந்துகொண்டிருந்தனர். அஸ்தமன வேளைக்குள் அபாரமான ஜனக்கூட்டம் கூடிவிட்டது.

பக்தர்களின் ஒரு கண் கிழக்கே அடிவானத்தின் மீதும், மற்றொன்று கோயிற் கதவின்மீதுமாக இருந்தன. தேவன் தோன்றும்போதே—அதே க்ஷணத்தில்—சங்கை முழக்கவேண்டுமென்றும், அப்போதே கோயிலின் கதவைத் திறக்கவேண்டுமென்றும் பூசாரிக்கு உத்தரவு.

பூசாரி தேவனை எதிர்பார்த்து நின்றான்—கண் கொட்டாமல், ஆவல் நிரம்பிய மனத்தினனாக! திடீரென்று தேவன் தோன்றினான். சொல்லொணா அழகும், நேர்மையும், இனிய சாயலும், மென்மையும் பொருந்தியிருந்தன அவனிடத்திலே! தேவன் தேவலோகத்தான் இருந்தான்.

வெளியே பக்தர்கள் சந்திர பிம்பத்தைப் பார்த்தாயிற்று. எண்ணிலாக் குரல்கள் ஒன்று சேர்ந்து கூவலாயின. 'ஜய தேவ தேவ!' என்னும் கோஷம் பத்துத் திசைகளிலும் எதிரொலித்தது. ஆனால், கோயிலுள்ளிருந்து சங்கநாதம் கேட்கவில்லை!

பூசாரி ஜன்னல்வழியாக அந்த அபாரமான ஜனசமூகத்தை ஒரு முறை நோக்கினான்; மறு முறை அழகும், லாவண்யமும், மென்மையும், நேர்மையும் வாய்ந்த தேவனையும் கண்டான். அவன் உடல் நடுங்கியது.

ஜனக்கூட்டம் முழுவதும் கோபம் நிரம்பிய குரலில், "கோயிலின் கதவைத் திற! திற!!" என்று ஒருங்கே கூவியது. பூசாரியின் கை பல தடவைகள் தாழ்ப்பாள் வரையிலும் சென்று திரும்பிவந்தது.

ஆயிரக்கணக்கான கைகள் ஒன்று சேர்ந்து கோயிலின் கதவை அறைந்தன; அதன்மீது மோதின. கண்ணிமைக்கும் நேரத்தில் சந்தனக் கதவு பிளந்து வீழ்ந்தது. பக்தகோடிகள் கோயிலுள் புகுந்தனர். பூசாரியோ கண்களை மூடிக்கொண்டு ஒரு மூலையில் நின்றான்.

தேவனுக்குப் பூசை ஆரம்பமாயிற்று. வாய் மூடும் நேரத்தில் தேவன் மீது புஷ்பம் சுமைசுமையாகக் குவிந்தன. அவன் மலர்களிலே மறைந்துவிட்டான்; பூக்கள் அவனை அழுத்தின. இரவு முழுவதும் பக்தர்கள் அந்த மலர்க்குவியலை மேலும் மேலும் அதிகப்படுத்தியவாறே இருந்தனர்.

காலையில் பூசாரி மலர்க்குவியலை அகற்றியபோது அதன் கீழே கிடந்தது தேவனின் பிணம்!

2

இப்போதும் பூமியில் மனிதன் இருந்தான்; மனிதனிடத்தில் இதயம் இருந்தது. இதயத்தில் பூசை செய்யவேண்டுமென்ற ஆவல் இருந்தது. ஆனால், தெய்வங்கள் இல்லை. இப்போதும் அவன் சூரியனுக்கு அர்க்கியம் கொடுத்துவந்தான்; அக்கினிக்கு அவிர்ப்பாகம் சமர்ப்பித்துவந்தான். ஆனால் இப்போது அவனுடைய அதிருப்தி முன்னிலும் பன்மடங்கு அதிகமாயிருந்தது. ஒரு தடவை தேவனைப் பெற்றுவிட்டானதலின், அவன் வேட்கை வளர்ந்தது; அவன் ஆவல் பெருகியது. அவன் இன்னும் ஏதோ ஒன்றை வேண்டினான்.

மனிதன் குற்றம் செய்திருந்தான்; அதனால் அவன் வெட்கமடைந்தான். ஸ்வர்க்கத்திலிருந்துதான் தேவனைப் பெற முடியும். ஆனால் இனி அவன் எந்த முகத்தைக் கொண்டு ஸ்வர்க்கத்தினிடம் போவது? 'ஸ்வர்க்கத்தின் உள்ளம் விரிந்ததாயிற்றே! மனிதன் செய்த ஒரு குற்றத்தைக் கூடவா அது மன்னிக்காது?' என்று அவன் நினைத்தான்.

அவன் தலையைக் கவிழ்த்துக்கொண்டே, "ஓ ஸ்வர்க்கமே! எங்கள் குற்றத்தை மன்னித்துவிடு. இனி நாங்கள் இத்தகைய குற்றம் செய்யமாட்டோம். மீண்டும் எங்கள் பிரார்த்தனை அதுவே; முன்பு கோரினோமே, அதுதான்!" என்றான்.

மனிதன் பதிலை எதிர்பார்த்து நின்றான். அவனுக்கு ஒன்றும் மறுமொழி கிடைக்கவில்லை.

நாட்கள் பல கடந்து சென்றன. 'காலம் எல்லாவற்றையும் மறக்கடித்துவிடும்; ஸ்வர்க்கத்தை மீண்டும் பிரார்த்திக்கவேண்டும்' என்று மனிதன் கருதினான்.

அவன் கை கூப்பிக்கொண்டு, "ஓ ஸ்வர்க்கமே! நீ எண்ணற்ற தேவர்களுக்கு இருப்பிடமாவாய். எங்களுக்கு இன்னும் ஒரே ஒரு தேவனை அளித்துவிடு. நாங்கள் அவனை வெகு ஜாக்கிரதையாக வைத்துக்கொள்வோம்" என்று பிரார்த்தித்தான்.

மனிதனின் குரல்தான் திசைகளில் சிலம்பிற்றே யொழிய, ஸ்வர்க்கம் மௌனமாக இருந்தது.

பல நாட்கள் மீண்டும் கடந்து சென்றன. மனிதனை தோல்வியடைபவன்? அவனுடைய முயற்சிகள் நின்றபாடில்லை. அவன் குரல் ஸ்வர்க்கத்தை எட்டியே தீரவேண்டும்!

அவன் திடமாக நின்றுகொண்டு, "ஓ ஸ்வர்க்கமே! எங்கள் உள்ளத்தில் பூஜையின் பாவனை இருக்கும்வரையில், தேவர்களைப் பெறுவதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. நீ ஏன் எங்கள் உரிமையை எங்களுக்குக் கொடுக்கமாட்டேனென்கிறாய்?" என்று கேட்டான்.

ஆகாயத்தில் இடி முழக்கம் உண்டாயிற்று. பல கல் துண்டுகள் பூமியில் வந்து விழுந்தன.

மனிதன் மிக்க வியப்புடன் அவைகளைப் பார்த்துத் தலையில் அடித்துக்கொண்டே, "பேஷ் ஸ்வர்க்கமே! நாங்கள் உன்னிடம் கேட்டது தேவனை; நீ எங்களிடம் அனுப்பியதோ கல், கல்!" என்றான்.

"ஓ பெரிய மனிதனே, நான் உன் பிரார்த்தனையைக் கேட்டது முதல் ஒற்றைக்காலால் தேவர்களின் ஒவ்வொரு வாசலுக்கும் போய்ச் சுற்றிவருகிறேன். மனிதனின் பூஜையை ஏற்றுக்கொள்ளும் ஆலோசனையைச் செவியுற்றவுடனே, தேவர்கள் யாவரும் வெலவெலத்து நடுங்குகின்றனர். உன் பூஜையைத் தேவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது அன்று; அந்தப்

பூஜையைச் சகிக்க அவர்களால் முடியாது என்பதுதான் அதற்குக் காரணம். உன் ஒரு மலர், உன் ஆத்ம சமர்ப்பணத்தின் பாவனையுடன் தேவன்மீது தூவப்படும் போது, அதன் பாரம் ஸமஸ்தமான பிரும்மாண்டத்தின் சுமையையும் லேசாக்கிவிடுகிறது. உன் ஒரு துளி அர்க்கியதீர்த்தம், கனிந்த உன் உள்ளத்தின் கண்ணீருக்கு அறிகுறியாகித் தேவனுக்கு அர்ப்பிக்கப் படும்போது, கடல் தன் சிறுமையை நினைந்து, 'ஐயோ' என விம்மிப் புலம்புகின்றது. சிறு தேவர்கள் என்னிடம் கூறியதை நான் உனக்கு என்ன வென்று சொல்லுவேன்! தேவர்களில் மிகச் சிறந்த ஒளித்திரளான சூரிய பகவானே, 'மனிதன் பூமியிலிருந்து எனக்கு நீர் எற்றுகிறான். என்றுவது ஒரு நாள் நான் குளிர்ந்துபோய், அவன் வேறொரு கதிரவனைத் தேடப் புறப்பட்டுவிடுவானே என்று நான் அஞ்சுகிறேன்!' என்கிறான். ஓ பரந்த மனிதனே, உன் பூஜையைச் சகித்துக்கொள்ளும் சக்தி இந்தக் கற்களுக்கு மாத்திரந்தான் இருக்கிறது" என்று ஸ்வர்க்கம் சொல்லியது.

அன்றையிலிருந்துதான் மனிதன் கற்களைப் பூசிக்கத் தொடங்கினன். இவ்விஷயத்தைக் கேட்டதும் இமயமலைக்குத் தூக்கி வாரிப்போட்டது!



வித்தியானந்தன்

ஸரோஜா

1

வைகறையில் ஆசிரமத்தினின்று எழும் அகிற்புகையின் சுகந்தம் வான வெளி எங்கும் வியாபித்து நின்றது. ஆசிரமத்தில் மாணவர்கள் பரம்பொருளுக்குப் பள்ளியெழுச்சி பாடிக்கொண்டிருந்தார்கள். கீழ்வானத்தில் பரிதியின் பெரு வட்டம் காணப்பட்டது. தெளிந்து ஓடும் புனலில் நீராடிக் கமலம் ஒன்றைக் கையிலேந்திப் பூஜாக்கிருஹத்தை நோக்கி நடந்தான் ஓர் இளைஞன். நெற்றியில் சிவச் சின்னம். கழுத்தில் ருத்ராக்ஷம். ஒரு கையில் கமலம். மற்றொரு கையில் கமண்டலம். பால சூரியனைப் பழிக்கும் தேஜஸ்வியான அந்த யுவன் குமாரவேளை ஒத்திருந்தான். பூஜாக்கிருஹத்தில் வாணியின் பாதத்தில் மலரை அர்ப்பணம் செய்துவிட்டு, அவசர மாய் எதிரிலிருந்த குடிலை நோக்கி நடந்தான் இளைஞன். வித்தியார்த்திகளுக்கு இச்செய்கை என்றுமில்லாத வியப்பை அளித்தது. குடிலுக்குள் கிருஷ்ணஜினத்தில் வயது முதிர்ந்த ஒருவர் படுத்துக்கொண்டிருந்தார். எதிரில் மழமழப்பான பலகை ஒன்றில் ஆனந்தமூர்த்தி நடராஜப்பெருமானின் உருவம் தீட்டப்பட்டு மாட்டியிருந் தது. பக்கத்தில் தூங்கா விளக்கு. இளைஞன் அவர் பாதங்களைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, "அப்பா" என்றவாறு அவைகளை வருடினான். முதியவர் கண் திறந்து பார்த்தார்.

"நந்தனா! பூஜை முடிந்துவிட்டதா?" என்றார்.

"முடிந்துவிட்டது. வித்தியார்த்திகள் எல்லோரும் அங்கேதான் இருக்கிறார்கள். நான்மட்டும் வந்துவிட்டேன். உங்களுக்கு உடம்பு எப்படியப்பா இருக்கிறது?"

"நந்தனா, என் வாழ்க்கையின் அஸ்தமனம் வெகு சீக்கிரத்திலேயே இருக் கிறது. அதற்குமுன் சொல்லவேண்டியது ஒன்று பாக்கி" என்று நிறுத்தினார்.

நந்தனன் அவர் முகத்தை ஆவலோடு பார்த்தான்.

"நந்தனா!" என்று தடுமாறினார் முதியவர்.

"தைரியமாய்ச் சொல்லுங்கள். எதுவாயிருந்தாலும பரவாயில்லை, அப்பா" என்றான் நந்தனன்.

"ஈசுவர சாக்ஷியாக நீ கல்யாணமே பண்ணிக்கொள்ளக் கூடாது. என்ன? தெரிகிறதா?" என்றார் கம்பீரமாக.

நந்தனன் ஒரு கணம் திகைத்தான்.

அவனுடைய இரண்டு கரங்களும் தாமரை மலர் குவிந்துகொள்வது போல் குவிந்தன.

"இதற்குத்தானா இவ்வளவு யோசனை? வேண்டாம். நான் கல்யாணம் பண் ணிக் கொள்வதில்லை" என்று வாக்களித்தான் நந்தனன்.

முதியவர் அவன் கரங்களைக் கண்ணில் ஒற்றிக்கொண்டார்,

"என் செல்வமே; அந்தப் பாதகியின் குகூயில் நீ எப்படித்தான் இருந்தாயோ! உன் அன்னையைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதே?"

"ஊஹூம்...தெரியாது" என்று சந்தேகத்துடன் சொன்னான் நந்தனன்.

"அவள்..." என்று பெருமூச்சுவிட்டார் அவர்; "அவள் பசுத்தோல் போர்த்த புலி; கபடி, வஞ்சகி. சிறு பிராயத்தில், அதாவது மூப்பது வயதிலிருந்தே, எனக்கு ஸம்ஸாரப்பற்று அதிகமில்லை. புண்ணிய நதிகளில் நீராடவும், கங்கா தேவி துள்ளி விளையாடும் புண்ணிய க்ஷேத்திரங்களைக் காணவும், வெள்ளியங்கிரியைத் தரிசிக்கவும் மனத்தில் பெருந்தாபம். நான் க்ஷேத்ராடனத்துக்குக் கிளம்பும்போது நீ இரண்டு வயதுக் குழந்தை. என்னுடைய குருகுலத்தில் வித்தை பயின்றுவந்த ஒருவன் பாண்டி நாட்டினன்; என் வயதினன்; தர்க்க சாஸ்திரம் பயில வந்திருந்தான். புறத்திலே சௌந்தர்யம் பொங்கி வழிந்ததே யொழிய, அவன் அகத்தில் கபட எண்ணங்கள் நிறைந்திருந்தன. உன் அன்னையுடன் எல்லா மாணவர்களும் பழகுகிறமாதிரி அவன் பழகி வந்தான். நான் க்ஷேத்ரயாத்திரை போனது பெரும்பாலும் அவனை நம்பித் தான். இருக்கும் மாணவர்களில் அவன் கொஞ்சம் வயது முதிர்ந்தவன். அவன் பொறுப்பில் ஆசிரமத்தையும் மனைவியையும் விட்டுப் போவதில் தவறில்லை என்று நினைத்துவிட்டுச் சென்றேன். நான் சென்ற ஒரு மாதத்திற்குள் ஆசிரமம் கேளிக்கை நிலயமாக மாறிவிட்டது. தர்ம நெறியில் நின்றிருந்த மாணவர்கள் வேறு குருகுலத்துக் குப் போய்விட்டார்கள். அந்தப் பாதகன், துரோகி, உன் மாதாவைத் தன் வலைக்குள் போட்டுக்கொண்டான். ஹரித்துவாரத்துக் குளிரில் ஒரு நள்ளிரவு அவளைப்பற்றிய நினைவு வந்தது. 'வருஷக் கணக்கில் அவளைத் தனியாக விட்டு வந்திருக்கிறோமே; மாணவர்கள் அவளைக் கவனிப்பார்களா?' என்று என் மனம் ஏங்கிற்று. மானஸரோ வர் முதலிய இடங்களுக்குப் போகாமல் ஊருக்குத் திரும்பிவிட்டேன். ஆசிரமத் தில் நான் கண்ட காட்சி என் ஹிருதயத்தைப் பிளப்பதுபோல் இருந்தது. பூத்துக் குலுங்கி, பாய் போட்டதுபோல் மலர் உதிர்ந்து கிடக்கும் மகிழ மரத்தடியில் அவன் மடியில் உன் அன்னை சயனித்துக்கொண்டிருந்தாள். நீ உடம்பெங்கும் புழுதிபடிந்து தெருவில் விளையாடிக்கொண்டிருந்தாய். வாணியின் முகமண்டலம் தூசு படிந்து மங்கிப்போயிருந்தது. வேத கோஷம் ரீங்காரம் செய்யும் இடம் வெறும் சிற்றின்ப நிலயமாக மாறியிருந்தது. நான் வந்த விஷயம் தெரிந்து அவள் ஓடி வந்து என்னைத் தழுவிக்கொண்டாள். புஷ்பம் போலிருந்த அவள் கரங்கள் இரும்பினும் கடினமாகத் தென்பட்டன. சாகஸக்காரி! என்ன பசப்புப் பசப்பினாள் தெரியுமா? கையைப் பிடித் துத் தூரத் தள்ளி அவளை எரித்துவிடுவதுபோல் பார்த்தேன். அதற்குள், அவன் என் நிலைமையைப் பார்த்து எங்கோ நழுவிவிட்டான். உண்மையில் என் மனம் அவ னைத் தண்டிக்க விரும்பவில்லை. எதிரில் தரையில் விழுந்திருந்தாளே, அவளைச் சித்திரவதை செய்ய என் ஒவ்வோர் அங்கமும் பதறித் துடித்தது. சாந்தியை நாடிப் பண்பட்டுப்போன என் மனம் அகங்காரத்தை அழுக்கிவிட்டது. அன்றைத்தினத்தி லிருந்து அவள் இறந்துபோகிறவரையில் அவள் முகத்தைப் பார்க்கவில்லை. ஒரு வருஷத்திற்குள் இறந்து போனாள், நந்தனா" என்றார் அவர்.

நந்தனனுடைய விழிகள் நீர்த்துளிகளை உதிர்த்தன.

"எனக்கப்புறம் இந்தக் குருகுலத்தைப் பாதுகாத்துக் கல்வியைப் பரப்பவேண்டியது உன் கடமை" என்று சொல்லிவிட்டுக் கண்ணை மூடினார் முதியவர்.

2

ஆசிரமத்தில் குரு இறந்து போனது மாணவர்களைவிட, அங்கிருந்த ஒன்றிரண்டு மாணவிகளுக்கு அதிகத் துயரத்தை அளித்தது. வித்தியார்த்திகள் எல்லோரும் வாலிபர்கள். அவர்களில், கல்வியில் முதிர்ந்தவன் குரு புத்திரன் நந்தனன். ஸ்ரீலஹரியும், சித்ரூபியும் குருவின் மறைவுக்கப்புறம் அங்கிருக்க மனமில்லாமல் தங்கள் இல்லங்களுக்குச் சென்றுவிட்டனர். ஆனால், வித்யா எங்கே போவாள்? அவளுக்கு ஜாதி ஏது? பெற்றோர் இருவரும் ஒரே சமயத்தில் மறையவே, இந்த ஆசிரமத்தில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டாள். அப்பொழுது அவளுக்கு வயது எட்டு.

ஆசிரமத்தின் மான் பிணைகளையும், தெளிந்து விளங்கும் நீரோடையையும், சோலைக் குயில்களையும், வித்தியார்த்திகளையும் அவள் அறிவாளேயன்றி வேறு யாரையும் வெளியுலகில் அறியாள்.

ஸ்ரீலஹரியும், சித்ரூபியும் காவ்யம், இலக்கணம் முதலியவை படித்து வந்தனர்; வித்யா மாத்திரம் ஓவியக்கலை பயின்று வந்தாள். அவளுக்குக் காவ்யத்தில் மனமிருந்த போதிலும் காவ்யத்திலுள்ள காட்சிகளை ஓவியமாகத் தீட்டும் சித்திரகார உள்ளம் இருந்தது. இலக்கணத்தையும் மற்ற நூல்களையும் அவள் கண்ணெடுத்துக்கூடப் பார்த்ததில்லை. அவளுக்கு நந்தனனோடு பழகுவதில் தனித்த இன்பம். அவன் தன் ஓவியங்களை மெச்சும்போது, மனத்திலே விவரிக்க முடியாத இன்பங்கலந்த துன்ப உணர்ச்சி தோன்றி மறையும். குருவின் மறைவுக்கப்புறம் நந்தனன் அவளுடன் அதிகமாகப் பழகுவதை நிறுத்திக்கொண்டான். அவன் சித்தத்தைச் சிதற அடித்துக்கொண்டிருந்தாள் அவ்வணங்கு. அவளுடைய மருண்ட பார்வையையும், புன்முறுவலையும், முதுகில் விழுந்து புரளும் கூந்தலையும் பார்த்து அவன் மனம் நிலையில்லாமல் பறந்தது.

ஒரு நாள் ஓடையில் குளித்துவிட்டு இடுப்பில் குடத்தில் ஜலத்துடன் ஆசிரம விடுதிக்குள் வரும் வித்யாவை நந்தனன் பார்த்தான்.

'மஹாகவி காளிதாஸனுக்கு முன்பு இந்த மாதிரி ஒரு நங்கை வந்திருப்பாள். இல்லாவிட்டால் நம்மைக் கந்தர்வ லோகத்துக்கு எடுத்துச் செல்லும் அந்தச் சாகுந்தலத்தில் எப்படித் தோன்றும் அந்த வர்ணனைகள்?' என்று நினைத்து, ''வித்யா'' என்று கூப்பிட வாயெடுத்தவன் அப்படியே விழுங்கிக் கொண்டான்.

3

இளவேனில்; ஆசிரமத்தின் தருக்கள் தளிர் விட்டு நின்றன. தெளிந்த ஓடையில் மலர்கள் மலர்ந்து நகைத்தன. சூர்ய ரச்மி பட்டுப் பறந்து செல்லும் பட்டுப்பூச்சிகளின் இறகிலிருந்து வர்ண ஜாலங்கள் சிதறித் துடித்தன. எங்கும் பக்ஷி ஜாலங்களின் இன்னிசையோடு அந்த ஆசிரமம் ரமணீயமாய் விளங்கிற்று.

நீல வானில் சிதறுண்ட நக்ஷத்திரங்களின் மத்தியில் தனி ஆட்சி செலுத்தியது மதி. அமைதியான இரவு. மாணவர்கள் நித்திரை போய்விட்டார்கள். வித்யா கையில் அன்று முடிவடைந்த ஓவியம் ஒன்றைச் சுருட்டி எடுத்துக்கொண்டு நந்தனன் குடிலுக்குள் புகுந்தாள். அவன் சிந்தனையை நிலைகலங்கச்செய்து கொண்டிருந்த அவள் அவன் எதிரில் தந்தப் பாவைபோல் நின்றாள்.

''வித்யா! என்ன இது, இந்த இரவில்?'' என்றான் நந்தனன்.



கலியாணங்களுக்கும், தினப்படி தேவைக்கும் வேண்டிய பொன், வைர, நகைகள் காரண்டியுடனும் உயர்தர வேலைப்பாட்டுடனும் தயார் செய்து கொடுக்கின்றோம்.

எங்களிடத்தில் தயாராய் எல்லாவிதமான வெள்ளிப் பாத்திரங்கள் எப்பொழுதும் கிடைக்கும்.

L. B. Shah & Co.,

Manufacturing Jewellers,
26, Kutchery Road, Mylapore.

TO STOP PREGNANCY

"**Rahat**" is an unfailing contraceptive, a three-day use of which ensures life-long relief from the misery of conception without in any way harming the physique or disturbing menstrual regularity. Guarantee form accompanies every order. Price Rs. 5-8-0 or Sh. 10

"**Threenot**" pills recontinue stopped menses regularising M. C. too. With guarantee form. Price Rs. 5-8-0. Foreign Sh. 10.

Dr. S. H. KHAN,
42, K. M. Churchgate Street,
Fort, BOMBAY. *Phone: 21343.*

கலைமகள் வருடசந்தா

(தபால் செலவுடன்)

இந்தியா, ஸிலோன் ரூ. 4-0-0
பர்மா ரூ. 4-8-0
பினாங்கு, சிங்கப்பூர், நேடால் ரூ. 6-0-0
தனி ஸஞ்சிகை அணா 6
அல்லது 36 சதம்

புதிய நாவல்

தமிழ் நாட்டுக் கதை

தமிழ்நாட்டுக் கிராமவாழ்க்கை

தமிழ் நாட்டுக் காட்சிகள்

தமிழ் நாட்டுப் பேச்சுக்கள்

எல்லாம் சேர்ந்தது

மண்ணாசை

என்னும் நாவல்

ஸ்ரீமான் 'சங்கராம்' எழுதியது

விரைவில் வெளிவரும்

உங்கள் ஊர்க் கலைமகள் ஏஜெண்டிடம்

விசாரியுங்கள்

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

"இந்த ஓவியத்துக்குப் பரிசு வாங்கிக்கொண்டு போக வந்தேன். தருவதில் தடை ஒன்றும் இல்லையே" என்று முறுவலித்தாள் வித்யா.

"பரிசுக்கென்ன? காலையில் ஆகட்டும்" என்றான் நந்தனன். வித்யா உத்தரம் சொல்லாமல் சித்திரத்தைப் பிரித்தாள்:

புனலில் நீராடி விட்டு வரும் நங்கையை யுவன் ஒருவன் கண் இமைக்காமல் பார்க்கிறான். வாயைத் திறந்து ஏதோ சொல்ல நினைத்தவன் அதை மென்று விழுங்குவது போன்ற பாவத்தைத் தீட்டியிருந்தாள்.

நந்தனனுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

"ஓவியத்தில் நீயும் நானுந்தான் இருக்கிறோம்" என்றான் மெதுவாக.

"அதிலிருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லையா?" என்று கேட்டாள் வித்யா.

நந்தனனுடைய அதரங்களில் புன்னகையின் சாயை தென்பட்டது.

"உன் மனத்தில் இருப்பதைச் சொல்லட்டுமா, வித்யா?" என்றான்.

அவள் அவனைத் தலை நிமிர்ந்து நாணத்தோடு நோக்கிவிட்டுக் குனிந்து கொண்டாள்.

"நீ என்னைத்தானே கோருகிறாய்? அந்தப் பரிசுதானே உனக்கு வேண்டும்?"

"ஆம்" என்ற பாவனையாய்த் தலையை அசைத்தாள் வித்யா.

"அதைத்தான் என்னால் கொடுக்க முடியாது. என் உள்ளத்தை, நீ கோரும் பரிசை, இந்த ஜன்மாவில் தரமுடியாது" என்றான் நந்தனன்.

"என்ன?" என்று துள்ளி நிமிர்ந்து அவன் கைகளைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டாள் வித்யா. அவள் சிவந்த அதரங்கள் பொங்கி வரும் சோகத்தைத் தம் துடிப்பின் மூலம் தெரிவித்தன.

நந்தனன் ஒரு கணம் இன்ப உலகில் இருந்தான்.

எதிரில் மாட்டியிருந்த சுடராஜப்பெருமானின் படத்தில் இந்நேரம் தாழ்த்தியிருந்த இமைகள் அவனை ஏறிட்டுப் பார்ப்பதுபோல் இருந்தன.

வித்யாவை விட்டு விலகி, "அது என் தந்தையின் வாக்கு. நான் அவருக்குச் செய்து கொடுத்த சத்தியம்; அதுவும் மரணப்படுக்கையில்."

"என்னைப் பற்றி உன் ஹிருதயத்தில் ஒன்றும் இல்லையா? அது இருண்டு சூன்யமாய்விட்டதா? என்னைப் பார்த்துச் சொல்."

"உலகில் கடமைதானே பெரிது? அதை மறக்கமுடியுமா? உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லையே" என்றான் நந்தனன்.

"கடமை, நந்தனா, கடமைதான் பெரிது!" என்று உடைந்த மனத்துடன் சொல்லி வெளியே சென்றாள் வித்யா.

4

சூரு இறந்துபோன செய்தியைக் கேட்டு அவர் நண்பர் பாலதேவர் ஆசிரமத்துக்கு வந்திருந்தார். ஆசிரம நீதிகள் எல்லாம் அவருக்குப் பிடித்திருந்தன. அவர் வந்த தினத்திலிருந்து வித்யாதான் எல்லாப் பணிவிடைகளும் அவருக்குச் செய்து

வந்தாள். நந்தனனுடைய கடமை அவருக்குத் தெரிந்திருந்தது. வித்யாவின் பிற்கால வாழ்க்கையே அவருக்குப் பெரும் கவலை அளித்தது.

பூஜைக்காக மலர் பறித்துக் குடலையில் எடுத்துக்கொண்டு வந்தாள் வித்யா.

பாலதேவர் அவளைக் கூப்பிட்டுத் தம் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, "நந்தனன் விஷயந்தான் உனக்குத் தெரியுமே. நீ உன் தந்தைக்குச் செய்து கொடுத்த வாக்கை மீறுவாயா? உங்கள் இருவர் மனத்திலும் மலர்ந்திருந்த காதலை அவர் அறியமாட்டார். அதோடு, அவரது சிறுபிராயத்தில் நடந்த விஷயம் பெரும் பாலும் அவர் மனத்தைக் கடினமாக்கிவிட்டது. வித்யா, நந்தனன் உனக்குக் கிடைக்காவிட்டால் நீ வேறொருவனை மணந்துதானே ஆகவேண்டும்?" என்று கேட்டார்.

வித்யா பெருமூச்சு விட்டாள்.

"ஸ்வாமி, இந்தக் கடினமான கேள்வியை என் கேட்கிறீர்கள்? இதை மாத்திரம் கேட்காதீர்கள்."

"என்ன இது? குழந்தை மாதிரி பேசுகிறாய். நந்தனனைப்போலவே விற்பன்ன னாக ஒருவன் கிடைக்கமாட்டானா என்ன? அழாதே அம்மா" என்று தேற்றினார் பாலதேவர்.

கொஞ்ச நாளைக்கப்புறம் உயர் குடும்பத்து வாலிபன் ஒருவன் வித்யாவை மணந்துகொண்டான்.

5

கையெழுத்து மறையும் சமயம் நந்தனன் குடிலுக்குள் ஒரு சிறுவன் நுழைந் தான். கையில் ஒரு லிகிதம் இருந்தது. நந்தனன் அதைப் பிரித்துப் பார்த்தான்.

"குழம்பிச் சாம்பிப்போன மனத்திற்கு, வாழ்க்கையில் ஏதாவது ஆறுதல் உண்டா என்று எங்கும் உள்ளத்திற்குச் சாந்தி அளிக்க நல்ல புத்தகங்களில் ஏதாவது தொன்றைத் தாமாட்டாயா? நந்தனா, உன் புஸ்தகங்களில் 'காவ்யாலங்காரம்' இருக் கிறதே அதை உன் சிஷ்யைக்குத் தாக்கூட யோசிப்பாயா?" என்று வித்யா எழுதி யிருந்தாள்.

"பேதை!" என்று முணுமுணுத்தான் நந்தனன்.

காவ்யாலங்காரத்தைப் பிரித்து ஒரு முறை பார்த்துவிட்டு, "சிறுவ, இந்த லிகிதத்தை வித்யாவிடம் கொடு" என்று சிறுவனிடம் கடிதத்தைக் கொடுத்தான் நந்தனன். குடிலுக்குள் இருளைப் பிய்த்துக்கொண்டு வரும் சந்திர ஒளியில் மாலை மாலையாய்க் கண்ணீரை உதிர்த்தவண்ணம் லிகிதத்தைப் படித்தாள் வித்யா.

"குழம்பிச் சாம்பிய உள்ளத்தைப் பற்றி நான் என்ன சொல்ல? என்னைப்போல் வேறோர் ஆத்மா இருக்கிறதாக்கும் என்று என் மனம் துடிக்கிறது. நிம்மதியை நாடி நான் கதைகள் படிப்பதில்லை. சாந்தத்தோடு இருக்கும் மனத்தையும் அநேக காவ்யங்கள் கெடுத்துவிடுகின்றன. காவ்யாலங்காரத்தில் இருக்கும் ராதை கிருஷ்ண னின் பிரேமலீலையையும், சகுந்தலை துஷ்யந்தனின் சரஸப் பேச்சுக்களையும் படித்த பின் மனத்தில் சாந்தி நிலவுகிறதா?" என்று எழுதியிருந்தான் நந்தனன்.

வித்யா அந்த லிகிதத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு மார்புற அணைத்துக் கொண்டாள். அவள் செவ்விய அதரங்கள் அதில் பதிந்தன. லிகிதம் தந்தப் பேழைக்குள் பத்திரமாக இருந்தது.

மறுநாள் உதயத்தில் வித்யா தன் கணவனுடன் ஊருக்குப் புறப்பட்டாள்.

ஆசிரமத்தின் வெளியில் தழைத்திருக்கும் ஆலவிருக்ஷத்தினடியில் நின்றிருந்த நந்தனன், "குந்தியின் மகனே! விருப்பமெனப்படும் இந் நிரப்பொருத் தீ ஞானிக்கு



நித்பப் பகையாம்; ஞானத்தைச் சூழ்ந்து நிற்கிறது. ஆதலால், விஜய, நீ ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் அழிப்பதாகிய இந்தப் பாவத்தைக் கொன்றுவிடு" என்கிற கீதா வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டு வாவியை நோக்கி நீராடச் சென்றான்.

ரெலடிவிடி அல்லது சார்புநிலைக் கொள்கை

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

'பூமி நிலையாயும் தட்டையாயும் உள்ளது. சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் அதைச் சுற்றி ஓடுகின்றன. பாம்பும், யானைகளும், ஆமையும் அதைத் தாங்குகின்றன' என்பது நமது பழங்காலக் கொள்கை. ஆட்லஸ் தாங்குகிறான் என்பது கிரேக்கர் கொள்கை. இத்தகைய கொள்கைகள் வெகுகாலமாக ஆதரிக்கப்பட்டு வந்தன. ஆயினும் ஆங்காங்கே தோன்றிய சிற்சில அறிவாளிகளின் மனத்திலே இந்தக் கொள்கைகளைப் பற்றிச் சந்தேகம் ஏற்பட்டது. 'பூமி நடுநிலை அன்று; அதுதான் சூரியனைச் சுற்றி ஓடுகிறது' என்று சிலர் சொன்னார்கள். இவர்களுள் பிரசித்தமானவர் கோப்பேர்னிக்கஸ் (Copernicus) என்பவர். இவர் சொல்லியதைப் பாமர உலகம் உடனே ஒப்புக்கொள்ளவில்லை. ஆனல் நாளடைவில் ஒப்புக் கொண்டுதான் தீரவேண்டியதாயிற்று.

புதிய கொள்கையின்படி, அளவில் அடங்காததாய், எங்கும் நிறைந்ததாய், எல்லையற்றதாய் உள்ளது வானவெளி என்னும் வெற்றிடம். அகலம், நீளம், கனம் என்னும் மூன்று பரிமாணங்களை உடையது அது. அப்பேர்ப்பட்ட வானவெளியிலே கோடானுகோடி நக்ஷத்திரங்கள் சிதறிக் கிடக்கின்றன. அவை யாவும் பல்வேறு திசைகளை நோக்கிப் பல்வேறு கதிகளோடு ஓடியவண்ணமாகவே இருக்கின்றன. அவை அனைத்தையும் அந்தரத்தில் நிறுத்தி, ஒன்றுகப் பிணைக்கும் சக்தி ஒன்று இருக்கிறது. அதற்கு ஆகர்ஷணம் என்று பெயர். சுழலும் பூமி விண்டுபோகாமல் இறுகப் பிடிப்பதும் அது; வாடிய சருகை மரத்தினின்று கீழே விழச் செய்வதும் அது. மனத்தாலும் கிரகிக்க இயலாத தூரத்துக்கு அப்பாலுள்ள இடத்தையும் அது தக்ஷணமே அடைந்து, தன் அதிகாரத்தைச் செலுத்த வல்லது. வானவெளி அனைத்தையும் மிகவும் நுண்ணிய பொருள் ஒன்று நிரப்பிக் கிடக்கிறது. இதன் பெயர் ஈதெர். இது அற்புதமான குணங்கள் வாய்ந்தது. வெப்பம், ஒளி, மின்சாரம் ஆகியவற்றின் அலைகளை இது கடத்திச் செல்லுவதைப் பார்த்தால் இது விறைப்புள்ள பொருளாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனல் இதன் ஊடே செல்லும் பொருள்களுக்கு யாதொரு தடையும் இதனல் ஏற்படாததைப் பார்த்தால் ஈதெர் இல்லவே இல்லையோ என்று சொல்லும்படி அத்தனை மிகமிக நுண்ணிய பொருளாகத்தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

இப்படி விபரீதமான குணங்கள் வாய்ந்த ஈதர்க்கடலின் வழியே பூமியும் பிறவும் நீந்திச் செல்கின்றன. 'இந்த ஈதெரானது கடலைப்போல்

நிலையாய் நிற்கிறதா? அல்லது ஆற்றைப் போல் ஓடுகிறதா?' என்று கண்டு பிடிக்க வேண்டும் என்று சில விஞ்ஞானிகளுக்குத் தோன்றிற்று. அவர் களுள் ஒருவராகிய பீஸ்ஸோ (Fizeau) என்னும் பிரெஞ்சு விஞ்ஞானி 'ஈதெர் நிலையாகத்தான் நிற்கிறது; அது ஓடவில்லை' என்று நிரூபித்தார்.

இதன் பிறகு சிலகாலம் சென்றது. இந்த முடிவைச் சோதித்துப் பார்க்கவேண்டும் என்ற எண்ணமானது மிக்கெல்ஸன், மார்லி என்னும் இரண்டு அமெரிக்கர்களுக்குத் தோன்றிற்று.* சூரியனைச் சுற்றி ஓடும் பூமி யானது ஈதெரைத் தள்ளிக்கொண்டு செகண்டுக்குப் பதினெட்டரை மைல் வீதம் கிழக்கு முகமாகச் செல்லுகிறது என்பதை ஆதாரமாகக்கொண்டது அவர்கள் நடத்திய ஆராய்ச்சி. கிழக்கு மேற்காகவும் தெற்கு வடக்காகவும் சமதூரம் ஒன்றைக் குறித்துக்கொண்டார்கள். இரண்டு ஒளிக்கிரணங்களை ஓட்டப் பந்தயத்துக்கு விட்டார்கள். கனத்த கல்மேடை ஒன்றின்மேல் தங்களுடைய சோதனைக் கருவிகளை வைத்தார்கள். கணக்குப்படி பார்த் தால், தெற்கு வடக்காக ஓடித் திரும்பும் கிரணம் கிழக்கு மேற்காக ஓடித் திரும்பும் கிரணத்துக்கு முன்னால் வந்து சேரவேண்டும். ஆனால் சோதனையை நடத்திப் பார்த்தபோது இரண்டு கிரணங்களும் ஒரே கணத்தில் திரும்பி வந்து சேர்ந்தன. சோதனை தவறிவிட்டது என்று நினைத்து, மீண்டும் மீண்டும் சோதனையை நிகழ்த்திப் பார்த்தார்கள். ஒவ்வொரு தடவையும் இதே முடிவுதான் ஏற்பட்டது. 'ஈதெர் ஓடுவதுபோல் அல்லவோ தோன்று கிறது?' என்றார் மிக்கெல்ஸன். ஆனால் ஈதெர் ஓடவில்லை என்று பீஸ்ஸோ நிரூபித்தாய்விட்டதே.

இதற்கு வேறு ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று விஞ்ஞானிகள் நினைத்தார்கள். பூமி மேற்கேயிருந்து கிழக்குமுகமாக ஓடும் காரணத்தால் சோதனைக்கருவியைத் தாங்கிய கல் அழுத்தமுறுகிறது. அதனால் அதன் தெற்கு வடக்கு அளவு மாறுவதில்லை; கிழக்கு மேற்கு அளவு மிகச் சிறு அளவில் குறைகிறது. இந்தக் குறைவினால்தான் பந்தய ஓட்டம் சமகாலத்தில் நடைபெறுகிறது என்று டப்ளின் நகரவாசியான பிட்ஸ்கெரல்டும் (Fitzgerald) கூடன் நகரவாசியான லாரென்ட்ஸும் (Lorentz) சொன்னார்கள். விஞ்ஞான உலகம் இவர்கள் சொன்னதை ஒப்புக்கொண்டு வந்தது. பிறகு 1905-ஆம் வருஷத்திலே ஐன்ஸ்டைன் (Einstein) என்பவர் இதை மறுத்துத் தம்முடைய கொள்கையை வெளி யிட்டார். அதை விசேஷச் சார்புநிலைக் கொள்கை (Special Theory of Relativity) என்று சொல்லலாம். இந்தக் கொள்கையைக் கேட்ட விஞ் ஞான உலகம் பிரமிப்படைந்தது. ஆயினும் அதை உடனே ஒப்புக்கொள்ள வில்லை. அதன் நுட்பங்கள் முழுமையும் மிகச் சிறந்த அறிவாளிகளும் உணர்ந்துகொள்வது கஷ்டம். அதைப்பற்றி இலேசாகச் சிறிது சொல்லு கிறேன்.

---

* கடைசிப் பக்கம் பார்க்க.

ஒரு மோட்டார்கார் மணிக்கு 30 மைல்வீதம் ஓடுகிறது என்கிறோம். இதற்குப் பொருள் என்ன? ஓர் இடத்தில் நிலையாய் இருந்துகொண்டு கவனிக்கும் ஒருவனுக்கு அந்த மோட்டார்கார் மணிக்கு 30 மைல்வீதம் ஓடுவதாகத் தோன்றும் என்பதுதான். அந்தக் கார் ஓடும் திசையாகவே மணிக்கு 20 மைல்வீதம் மற்றொரு மோட்டார்கார் ஓடிக்கொண்டிருந்தால் மெதுவாகச் செல்லும்மோட்டார்காரை மணிக்குப் பத்துமைல்வேகத்தோடு வேகமாகச் செல்லும் மோட்டார் கார் தாண்டிச்செல்லும். அதாவது மெதுவாகச் செல்லும் மோட்டார் காரில் உள்ள ஒருவன் தான் இருக்கும் இடத்தை நிலையாகப் பாவித்துக் கொண்டானுனால், வேகமாகச் செல்லும் மோட்டார்காரின் வேகம் மணிக்கு 10 மைல் என்றே அவன் நினைப்பான். இவ்விரண்டு மோட்டார்கார்களும் ஒரே திசையாகச் செல்லாமல் ஒன்றுக்கொன்று எதிர்முகமாகச் சென்றால், ஒவ்வொரு மோட்டார்காரில் உள்ளவனும் தன்னை நிலையாகப் பாவித்துக்கொண்டால், அவனுக்கு மற்றொரு மோட்டார்காரின் வேகம் ஐம்பது மைலாகத் தோன்றும். ஆதலால் ஓடும் மோட்டார்காரின் வேகமானது, நிற்பவனுக்கு முப்பது மைலாகவும், ஒரு திசையாகச் செல்பவனுக்குப் பத்து மைலாகவும், எதிர்த்திசையாகச் செல்பவனுக்கு ஐம்பது மைலாகவும் தோன்றும். மிகவும் வேகமாகச் செல்லும் ஒளிக்கிரணத்தைக் கவனித்தாலும் அதன் வேகமும் இவ்வாறே மாறுபடவேண்டும் அல்லவா? ஆனால் ஐன்ஸ்ட்டைன் சொல்லியது என்ன வெனில்: ஒளிக்கிரணத்தின் வேகமானது, அதைக் கவனிப்பவன் நின்றுகொண்டிருந்தாலும் சரி, எந்தத் திக்கை நோக்கி என்னவிதமாய் ஓடிக்கொண்டிருந்தாலும் சரி, மாறவே மாறாது; அவனுக்கு எந்த நிலையிலும் அது லைகண்டுக்கு லக்ஷத்து எண்பத்தாறுயிரம் மைல்வீதம் செல்வதாகத் தோன்றும் என்பதுதான்.

'இதைப் பார்த்தால் தப்பாக அல்லவோ தோன்றுகிறது; இது எப்படி உண்மையாயிருக்கக்கூடும்?' என்று நினைக்கலாம். கவனித்துப் பார்ப்போம்: ஒரு பொருளின் வேகத்தை நாம் எப்படிக் கணக்கிடுகிறோம்? அது சென்ற தூரத்தை அளக்கிறோம். அது செல்லும் நேரத்தையும் குறித்துக் கொள்கிறோம். அந்தத் தூரத்தின் அளவை நேரத்தின் அளவால் வகுக்கிறோம். கிடைத்த ஈவுதான் வேகம். அளப்பவர்கள் உபயோகிக்கும் நீள அளவைகளும், கால அளவைகளும் அவரவர்கள் இருக்கும் நிலைமைக்கு ஏற்றபடி மாறுமானால்—அதாவது நிற்பவன் உபயோகிக்கும் அளவு ஒன்று, ஒரு திசையாய் ஓடுபவன் உபயோகிக்கும் அளவு மற்றொன்று, அதற்கு எதிர்த்திசையாக ஓடுபவன் உபயோகிக்கும் அளவு வேறொன்று என்று இருக்குமானால்—அப்போது கிடைக்கும் ஈவாகிய வேகம் ஒரே மாதிரியாக இருப்பதற்கு இடம் உண்டு.

உண்மையில் இவ்வாறுதான் நிகழ்கிறது என்று ஐன்ஸ்ட்டைன் சொல்லுகிறார். நிலையாக நின்று பார்க்கும் ஒருவனுடைய கண்ணுக்கு வெகு வேகமாக ஓடுபவனுடைய கையிலுள்ள கஜக் கோலானது சற்றே

அளவில் குறைந்ததுபோல் தோன்றும் என்றும், ஓடுபவன் கையிலுள்ள கடியாரம் சற்றே மெல்லப்போவதுபோல் இருக்கும் என்றும் ஐன்ஸ்ட்டைன் சொல்லுகிறார். இதிலிருந்து சாமானியமாய் ஓடும்போது 'கஜக்கோலின் நீளம் கால் இஞ்சு, அரை இஞ்சு குறைந்துவிடும் என்றுவது, கடியாரம் மணிக்கு ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் பிந்திவிடும் என்றுவது நினைக்க லாகாது. மிக மிக வேகமாய்ச் செல்லும்போது, மிக மிக நுண்ணிய அள விலேதான் இந்த வித்தியாசம் ஏற்படும்.

ஆகையால் ஐன்ஸ்ட்டைன் சொல்லியது என்னவென்றால்: ஒளியின் வேகமானது மாறுத தன்மையுடையது. இடத்தின் அளவைகளும், காலத் தின் அளவைகளும் அளப்பவனுடைய நிலைக்கு ஏற்றபடி மாறும் இயல் புள்ளவை. அளவைகள் யாவும் அவனுடைய நிலையைச் சார்ந்தவை. இதுதான் 1905-ஆம் வருஷத்தில் ஐன்ஸ்ட்டைன் வெளியிட்ட விசேஷச் சார்புநிலைக் கொள்கையின் தத்துவம். விஞ்ஞான உலகம் இதை முதலில் ஒப்புக்கொள்ளவில்லை. ஆயினும் வரவர இதன் உண்மை வெளியாகிக் கொண்டே வந்தது.

முற்காலத்தவர் எல்லாரும் இடைவெளி என்பது மூன்று அளவைகள் கொண்டது என்று கருதினார்கள். அவற்றில் இரண்டை நாம் அகலம், நீளம் என்றும், மற்றொன்றைக் கனம் அல்லது ஆழம் அல்லது உயரம் என்றும் சொல்லுகிறோம். யூக்ளிட் (Euclid) என்பவர் இப்பேர்ப்பட்ட இடைவெளிக்கு ஏற்றதான ஜியாமெட்ரி ஒன்றைக் கற்பித்தார். ஆனால் இந்த ஜியாமெட்ரியின் தத்துவங்களைப் பிரபஞ்ச வெளிகளில் உள்ள பொருள்களோடு பொருத்திப் பார்க்கும்போது ஒன்றும் சரியாக வரவில்லை. அதனால் ரீமன் (Riemann), போல்யை (Bolyai) என்பவர்கள் புதிய ஜியாமெட்ரிகளை வெளியிட்டனர். இவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு இடைவெளியின் அமைப்பை விஞ்ஞானிகள் கற்பித்துக் கொள்ள முயன்றார்கள்.

முற்காலத்திலே இடைவெளி என்பது ஒன்று, காலம் என்பது மற்றொன்று என்று கருதி வந்தார்கள். இப்பொழுதோ இடத்தையும் காலத்தையும் ஒன்றுகப் பொருத்திக் காலவெளித்தொடர் (Space-time-continuum) என்ற கற்பனை ஒன்றை நிருமித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கற்பனையை முதல்முதலில் வெளியிட்டவர் மின்கௌஸ்கி (Minkowski) என்பவர். இது நான்கு அம்சங்களை உடையது. உயரம், நீளம், அகலம், காலம் என்னும் இந்நான்கும் ஒன்றுகக் கலந்து அமைந்தது. சாமானியராகிய நம்மால் இந்தக் கற்பனையைக் கிரகிப்பதுகூடச் சாத்திய மில்லை. ஆனால் சிறந்த விஞ்ஞானிகள் இதை உண்மையென்று ஒப்புக் கொள்கிறார்கள்.

பிறகு கிட்டத்தட்டப் பன்னிரண்டு வருஷகாலம் ஐன்ஸ்ட்டைன் இடம், காலம் என்னும் விஷயங்களைப்பற்றியும், ஒளிக்கிரணத்தின் கதியைப் பற்றியும், ஆகர்ஷண சக்தியைப்பற்றியும் ஆராய்ந்தார். 'சூனியமான இடை


வெளி என்பது எங்கும் ஒன்றுபோல் இருப்பதில்லை; பக்கத்திலுள்ள பொருள்களின் கவர்ச்சியால் அதன் வடிவம் மாறுபடுகிறது. இடம் என்பது நேரானதன்று; வளைவும் நெளிவும் உடையது' என்றார். விஞ்ஞான உலகம் திகைப்படைந்தது. உடனே ஒப்புக்கொள்ளவில்லை. சோதித்து உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றார்கள் விஞ்ஞானிகள்.

ஐன்ஸ்ட்டைன் வெளியிட்ட முடிவுகளின் உண்மையைச் சோதிப் பதற்குச் சில சௌகரியங்களும் ஏற்பட்டன. புதன் என்ற கிரகமானது நியூட்டன், கேப்ளர் முதலியவர்கள் சொல்லிய கணக்குப்படி ஒழுங்காகச் சூரியனைச் சுற்றி ஓடி வரவில்லை. அதனால் சூரியனுக்கு அருகே வேறொரு கிரகம் இருக்கிறது என்றும், அந்தக் கிரகத்தினுடைய கவர்ச்சியினால்தான் புதன் நெறி பிசகி நடக்கிறது என்றும் சில வானசாஸ்திரிகள் அபிப் பிராயப்பட்டார்கள். எவ்வளவு முயன்று தேடியும் அப்பேர்ப்பட்ட கிரகம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஐன்ஸ்ட்டைன் வெளியிட்ட முறைப் படி கணக்கிட்டுப் பார்த்தபோது, புதன் ஓடிவரும் முறை சரியான முறை தான் என்பது தெரியவந்தது.

ஐன்ஸ்ட்டைன் வெளியிட்ட கொள்கை சரியானால், நேராகச் செல் லும் ஒளிக்கிரணங்கள் ஆகர்ஷண சக்தியால் கவரப்படவேண்டும். அப் படிக் கவரப்படும்போது, அவற்றின் திசையானது மாறுபடவேண்டும். ஆதலால் கோடிக்கணக்கான நக்ஷத்திரங்கள் சிதறிக்கிடக்கும் வானவெளி யிலே ஒளிக்கிரணங்கள் நேராகச் செல்லுவதில்லை என்று ஐன்ஸ்ட்டைன் சொன்னார். இதன் உண்மையைப் பரிசோதிப்பதற்கு 1919-ஆம் வருஷம் மே மாதத்தில் ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அந்த வருஷத்தில் பூரண சூரிய கிரகணம் ஒன்று நிகழ்ந்தது. தென் அமெரிக்காவில் ப்ரஸீல் (Brazil) நாட்டிலுள்ள ஸோப்ரால் (Sobral) என்னும் ஊரிலும், ஆப்பிரிக்காவின் மேற்குக்கடற்கரை ஓரத்திலுள்ள பிரின்ஸிபே (Principe) என்னும் தீவிலும் அந்தப் பூரண சூரிய கிரகணம் நன்றாகத் தெரியக்கூடியதாய் இருந்தது. 'அப்பேர்ப்பட்ட கிரகணத்தின்போது சூரிய பிம்பம் முற்றும் மறைபடுவதால், சூரியனுக்கு அப்பால் இருப்பனவாயும், அந்தப் பிம்பத்தின் அருகில் தோன்றுவனவாயுமுள்ள நக்ஷத்திரங்களிலிருந்து வரும் கிரணங்கள் சூரியனைக் கடந்து வரும்போது கோணமல் குறுகாமல் வருகின்றனவா? அல்லது சூரியபிம்பத்தால் அவை கவர்ச்சியுண்டு வளைகின்றனவா?' என்று சோதிக்கக்கூடுமென்று விஞ்ஞானிகள் நினைத்தார்கள். இதன் பொருட்டு அவ்விரண்டு இடங்களுக்கும் மிகவும் நுட்பமான கருவிகளை எடுத்துக் கொண்டு வானசாஸ்திரிகள் சென்றார்கள். அவர்கள் செய்த ஆராய்ச்சிகளி லிருந்து ஒளிக்கிரணங்கள் ஐன்ஸ்ட்டைன் சொன்னபடியே வளைகின்றன என்பது நிரூபிக்கப்பட்டது.

இந்தக் கொள்கையால் ஏற்படும் சில முடிவுகள் நம்மைப் பிரமிக்கச் செய்வன. காலம், இடம், கனம் ஆகிய மூன்றும் நிலைக்கு ஏற்றபடி மாறு கின்றன. நிற்பவனைக்காட்டிலும் வெகு வேகமாக ஓடுபவனுக்குக் காலம்

மெதுவாகச் செல்லுகிறது; நீளம் குறைவாக இருக்கிறது; கனம் அதிக மாகிவிடுகிறது. இத்தனை விபரீதமாகத் தோன்றும் இந்தக் கொள்கையை விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்டு விட்டார்கள். அரைகுறையாகத் தெரிந்து கொண்ட நாமும் அப்படியே செய்வோம்.



மீக்கெல்ஸனும் மார்லியும் செய்த சோதனை

[ஆ என்ற இடத்திலுள்ள லென்ஸின் வழியே அ என்ற இடத்திலுள்ள கண்ணுடிக்கு ஓர் ஒளிக்கதிர் செலுத்தப்பட்டது. அந்தக் கண்ணுடியில் ஒரு பாதி ரஸம் பூசியும் ஒரு பாதி பூசாமலும் இருந்தது. கண்ணுடியில் ரஸம் பூசாத பாதியின் வழியாக ஒளிக்கதிரின் ஒரு பகுதி கண்ணுடியை ஊடுருவி நேராக மறுபுறம் சென்றது. ஒளிக்கதிரின் மற்றொரு பகுதி, கண்ணுடியில் ரஸம்பூசிய பாதியால் பிரதிபலிக்கப் பட்டு, முதற்பகுதி சென்ற வழிக்குக் குறுக்காகச் சென்றது. இவ்வாறு இரண்டாகப் பிரிவுபட்ட ஒளிக்கதிர்கள் ஒன்றுக்கொன்று நேர் கோணமாகச் சென்று, இருபக்கத் தும் உள்ள கண்ணுடிகளை அடைந்து, அவற்றால் பிரதிபலிக்கப்பட்டு, சென்ற வழியே மீண்டு, இ என்னும் இடத்திலுள்ள சிறிய டெலஸ்கோப்பை வந்து அடைந்தன.]

திருச்சி அகில இந்திய ரேடியோ நிலயத்திலிருந்து 6-3-41-ல் ஒலிபரப்பப்பட் டது; அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது.

என் புத்தகங்கள்

"குமுதினி"

அகமதாபாத்தில் இருவர் மகாத்மா காந்தி எழுதியவையும், அவரைப்பற்றிய வையுமான புத்தகங்களெல்லாவற்றிற்கும் ஒரு பட்டியல், "காந்தி இலக்கிய சூசி" என்ற பெயரில் தயாரித்திருக்கிறார்கள். அப்பட்டியலில் சுமார் ஆயிரம் புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன. காந்திஜி எழுதியுள்ளவையும், அவைகளின் மொழிபெயர்ப்பு களுமான புத்தகங்கள் சுமார் இருநூறு இருப்பினும், மிகுந்திருக்கும் தொகையை நோக்கின் ஒருவருடைய வாழ்க்கைக் காலத்தில் அவரைப்பற்றி எழுதப்பட்டுள்ள புத்தகத்தொகைகளில் இதுவே மிக அதிகமானதாக இருக்குமென்று நினைக்கிறேன்.

"மகாத்மா காந்தி", "காந்தி தத்துவம்", "நான் மகாத்மாவைப் பின்பற்று கிறேன்", "நான் அறிந்த காந்தி", "நம்பமுடியாத காந்தி", "நிர்வாணப் பக்கிரி" என் பன போன்ற பெயர்கொண்ட புத்தகங்களில் காந்திஜியின் வாழ்க்கையும் குணங்களும் பற்பலால் வர்ணிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு மனிதர்கள் இவ்வளவு முறையில் ஆராய முயன்ற அந்த மகாத்மாவின் தன்மைதான் என்ன? அதை அறிய யாரால் இயலும்?

இப்புத்தகங்களைத் தவிரக் காந்தி தத்துவத்தைப் பற்றிப் பல கட்டுரைகள் வெளி வந்துகொண்டே இருக்கின்றன. அவைகளில் நான் சமீபத்தில் படித்த ஒன்று சற்று ரஸமாக இருந்தது. கவி டாகூரின் ஆதரவில் வெளிவரும் "விச்வ பாரதி" என்ற பத்திரிகையில் ஸ்ரீ என். வி. போஸ் என்பவர் தாம் எவ்வளவு தூரம் காந்திஜி யுடன் ஒத்துப்போக முடிகிறது, அதற்குமேல் என் ஒத்துப்போக முடியவில்லை என்பதைப் பற்றி எழுதியிருக்கிறார். ஸ்ரீ என். வி. போஸ் ஒரு 'ஸோஷலிஸ்டு.' காந்திஜி சொல்லும் பல அபிப்பிராயங்கள் தமது அபிப்பிராயம் போன்றனவே என் பதை விவரித்திருக்கிறார். "காந்திஜி சொல்லும் இதை ஒப்புக்கொள்கிறேன், அதை ஒப்புக்கொள்கிறேன், மற்றொன்றை ஒப்புக்கொள்கிறேன், ஆனால் இந்த ஜமீன்தார் களை ஒன்றும் செய்யாமல் விட்டுவையுங்கள்' என்று காந்திஜி சொல்கிறாரே, அது மாத்திரம் ஏன் என்று எனக்குப் புரியவில்லை" என்று ஸ்ரீ போஸ் தவிக்கிறார்.

இதைப் படித்த சமயம் காந்திஜியைப்பற்றி நான் படித்த மற்றொரு புத்தகத் தில் கண்டிருந்த ஒரு விஷயம் என் ஞாபகத்திற்கு வந்தது. அப்புத்தகம் ஸ்ரீ ஜி. டி. பிர்லா ஹிந்தியில் எழுதியிருக்கும் "பாபு" என்பது. அதில் காந்திஜிக்கும் தமக்கும் ஒரு தினம் நடந்த சம்பாஷணையைப் பிர்லாஜி வர்ணிக்கிறார்:

"சூதாகலத்தினால் நான் ஒரு முறை காந்திஜியை, 'தாங்கள் செய்திருக்கும் எல்லா வேலைகளிலும் மேம்பட்டது என்று எதைச் சொல்லுவீர்கள்?' என்று கேட்டேன்.

"காந்திஜியினால் இதற்குச் சட்டென்று விடை கூற முடியவில்லை. ஒரே ஒரு கணம் தாமதித்தார். ஒரு மகாசமுத்திரத்தை, 'எந்த நதியின் நீர் உன்னைச் சமுத்திர மாகச் செய்திருக்கிறது?' என்று கேட்டால் அது என்ன விடை சொல்லும்?

காந்திஜி, 'கதரும், ஹரிஜன சேவையும் நான் செய்த முக்கிய வேலையாகச் சொல்ல லாம்' என்றார். எனக்கு இந்த விடை திருப்தி அளிக்கவில்லை.

"'அஹிம்சை? தாங்கள் ஜனங்களுக்கு எடுத்துக்காட்டியிருப்பதில் மிகப் பெரியது அஹிம்சை அல்லவா?' என்று கேட்டேன்.

"'ஆம். ஆனால் அஹிம்சை என்னுடைய எல்லாக் காரியங்களிலும் கலந்திருக் கிறது. கதரும் ஹரிஜனத் தொண்டும் என்னுடைய மிகப் பெரிய வேலை என்றும், அஹிம்சையை என்னுடைய வேலைகளென்னும் மணிகளைக் கோத்திருக்கும் நூல் என்றும் கூறலாம். அஹிம்சை என்னுடைய எல்லாவேலைக்கும் அடிப்படையானது' என்றார்."

இந்த அஹிம்சையைக் காந்திஜியின் ஒவ்வொரு காரியத்திலும் காண முயன் றாலே நாம் அவருடைய செயல்களைப் புரிந்துகொள்ளக்கூடும். ஸ்ரீ போஸ் ஜமீன் தார்கள் என்று முறையிடும் சமயம் பணத்தினால் கொழுத்துச் சுகத்திற்கென்றே காலந்தள்ளும் தமக்குத் தெரிந்த சில ஜமீன்தார்களை மனத்தில் வைத்துக்கொண் டிருக்கலாம். ஆனால் காந்திஜிக்குப் பரிசயமானவர்களாகவும் சொந்த நண்பர்களாக வும் சுமார் ஆயிரம் ஜமீன்தார்களுக்கு மேல் இருப்பார்கள். இவர்களைக் கொண்டே அவர் மற்றப் பல்லாயிரம் ஜமீன்தார்களையும் மதிப்பிடுவார். தாம் ஒரு விதத் தவறும் செய்யாமலிருக்க விதியினால் ஒரு ஜமீன்தாரின் பிள்ளையாகப் பிறப்பிக்கப்பட்டு, செல்வமாக வளர்ந்து, தமக்கென்று சம்பாதித்துக்கொள்ளும் திறமையற்று, ஏதோ தமக்குத் தெரிந்தவரை தம் கடமையைச் செய்து வரும் ஜமீன்தாரை ஒரு சட்டத்தினால் ஒரே இரவில் சொத்திழந்தவராகச் செய்து தாரத்தினால் அவ ருடைய கதி என்னவாகும், அவர் எவ்விதம் தவிப்பார் என்பதைக் காந்திஜி தமது கருணையினால் உணர்ந்தவர். ஆகையாலேயே ஜமீன்தாரின் ஜமீன்களைப் பறிக்கும் இந்த வேலையை நாளடைவில் நிறைவேறுமாறு செய்யவேண்டுமென்கிறார். ஜமீன்தார் களுக்கும் சக்தியை உண்டாக்கி, ஆத்மவளர்ச்சியை ஏற்படுத்திக்கொண்டே, சிறிது சிறிதாக அவர்கள் நிலத்தை வாங்கிவிடவேண்டும் என்கிறார். என்னைப் பற்றியவரை எனக்கு ஜமீன்தார்களிடம் அதிகப் பக்ஷபாதம் இல்லை. இருந்தும் காந்திஜியினுடைய இவ்வபிப்பிராயத்தை மனிதவர்க்கத்தினரிடை அனுதாபம் கொண்ட எவர் ஒப்புக்கொள்ளாமல் இருப்பார்? ஜமீன்தாரின் நிலங்களைப் பரிகரித் தால் மாத்திரம் ஏழைகள் பணக்காரராகிவிடமாட்டார். ஒரு குழந்தை பக்ஷணத்திற் கென்று அழுதால் மற்றொரு குழந்தையின் கையிலிருப்பதைப் பிடுங்கிக்கொண்டால் என்ன லாபம்? இந்தக் குழந்தைக்கு மாறாக அந்தக் குழந்தையே அழும். தாய் தன் நல்ல வார்த்தைகளினால் பக்ஷணம் வைத்துக்கொண்டிருக்கும் குழந்தை தானே வலுவில் பக்ஷணத்தை மற்றொரு குழந்தைக்கும் கொடுத்து இருவருமாகச் சந்தோஷ மாய்த் தின்னுமாறே செய்வாள்.

"பாபு" என்ற ஹிந்திப் புத்தகம் படிக்க மிகவும் ரஸமாக இருக்கிறது. பிர்லாஜி தம் கருத்துக்களை வெளியிடுவதற்கென்று ஹிந்தி பாஷையை மிக நூதன முறையில் சிற்சில சமயம் உபயோகிக்கிறார். அவர் கையில் அப்பாஷை ஒரு பிரத்தியேகச் சிறப்புப் பெற்றிருக்கிறது. காந்திஜியின் தத்துவத்தை நன்கு விளக்கமுயன்றவர் இதுவரை அநேகமாய் மேல்நாட்டாரே ஆவர். அவர்கள் மேல்நாட்டு மனப்பான் மையுடன் விஷயங்களை விளக்குகிறார்கள். ஒன்றை மதிப்பிடும் சமயம் மேல்நாட்டுத் திட்டங்களைக்கொண்டு மதிப்பிடுகிறார்கள். ஆனால் பிர்லாஜி இப்புத்தகத்தில் காந்திஜி யின் கொள்கைகளை விளக்க முயன்றிருப்பது நமது மனத்தில் இன்னும் நன்றாகப்

பதிவதாக இருக்கிறது. மேல்நாட்டுப் படிப்பு எவ்வளவு இருப்பினும் இவருடைய மனப்பான்மை நமது நாட்டின் தர்மமுறையை அனுசரிப்பதுதான் காரணம்.

கீதையிலும், தர்மசாஸ்திரங்களிலும், உபநிஷத்துக்களிலும் கூறியிருப்பதைக் கொண்டே காந்திஜியின் செய்கைகளின் மேன்மையை விளக்குகிறார். இப்புத்தகத்திலிருக்கும் பற்பல ரஸமான விஷயங்களை எடுத்துச்சொல்ல எனக்கு விருப்பமுண்டாகிறது. இருந்தும் அவ்விதம் சொல்லிக்கொண்டே போனால் புத்தகம் முழுவதுமே சொல்லும்படியாகிவிடும். ஒரே ஒரு சிறிய சம்பவத்தைப் பிர்லாஜி வர்ணித்திருப்பது எனக்கு மிக ரஸமாகப்பட்டதால் அதை இங்கே கூறுகிறேன்:

பிர்லாஜி எழுதுகிறார்:—

"நானும் பார்த்து வருகிறேன். சிறிய அற்பப் பொருளையுங்கூடக் காந்திஜி வீணுக்குவதில்லை. ஒரு கஜம், இரண்டு கஜம் நீளமான மெல்லிய நூல்களையும் பத்திரமாகச் சேர்த்துச் சேர்த்து வைக்கிறார். மாதங்கள் கழிந்தபின், மிக ஜாக்கிரதையுடன் அவைகளை எடுத்துக்கொடுக்கிறார். அவருடைய ராட்டைக்கு அடியில் வைத்துக்கொள்ளும் ஒரு நீலக் கதர்த் துணியின் சிறிய துண்டை நான் பன்னிரண்டு வருஷமாகப் பார்த்துக்கொண்டு வருகிறேன். இன்னும் அது உபயோகப்பட்டுக் கொண்டே இருக்கிறது. தமக்குக் கிடைக்கும் கடிதங்களில் எழுதாமல் விடப்பட்டிருக்கும் சுத்தமான பாகங்களைக் கிழித்து எடுத்து உபயோகித்துக்கொள்கிறார். இதெல்லாம் நோக்கும் சமயம் கருமித்தனம் என்றுகூடத் தோன்றும்.

"லண்டனில் நடந்த சம்பவம்: வட்டமேஜை மகாநாட்டிற்குக் காந்திஜி சென்ற போது ஊருக்குக் கிழக்குப்புறம் தூரத்திலிருக்கும் ஓர் இடத்தில் தங்கியிருந்தார். மகாநாட்டின் வேலைகள் நடக்கும் காரியாலயம் ஊரின் மேற்குப்புறத்தில் இருந்தது. இதற்கும் அதற்கும் எழெட்டு மைல்கள் தூரம். பகல் போஜனம் காரியாலயத்திலேயே நடக்கும். தங்கும் இடத்திலிருந்து போஜனம் இந்தக் காரியாலயத்திற்கு வரும்.

"போஜன காலத்தில் சிற்சில சமயம் காந்திஜி சிறிது தேன் பருகுவதுண்டு. நாங்கள் இங்கிலாந்து சென்ற சமயம் சிலர் ஒரு மட்பாண்டம் நிறையத் தேன் கொடுத்திருந்தார்கள். அதனிலிருந்து தினமும் சிறிது எடுத்துச் சாப்பாட்டுவேளையில் உபயோகிப்பது வழக்கம். அன்றைத்தினம் ஏதோ மறதியில் மீராபஹன் தேன் எடுத்துவரத் தவறிவிட்டார். சாப்பாட்டுச் சமயத்தில் தேன் இல்லை என்பது ஞாபகத்துக்கு வரவே நாலணாவிற்கு ஒரு சிறிய தேன்புட்டி வாங்கிச் சாப்பாட்டுப் பதார்த்தங்களுடன் வைத்திருந்தார். காந்திஜி சாப்பிட உட்கார்ந்ததும் பார்வை அந்தப் புதிய புட்டியின்பேரில் பட்டது. 'இந்தச் சீசா ஏது?' என்று கேட்டார்.

"அது விலைக்கு வாங்கப்பட்டது என்பதைத் தெரிவித்தார்கள். அவ்வளவுதான்; சண்டமாருதம் கிளம்பிவிட்டது. 'இந்தச் செலவைச் செய்வானேன்? ஜனங்கள் நம்மை நம்பிக் கொடுத்திருக்கும் பணத்தை இவ்விதம் தாறுமாறாகச் செலவழிக்கலாமா? ஒரு தினம் தேன் குடிக்காவிட்டால் நான் பட்டினியாக இருந்து விடுவேனா?' என்றார்.

"இந்தியாவைப்பற்றின மிகச் சிக்கலான பிரச்னைகள் தீர்ப்பதற்காகக் காத்திருந்தன. அவைகளைப் புறக்கணித்துப் பக்கத்திலிருப்பவர் வியக்கும்வண்ணம் இந்தத் தேனைப்பற்றின பிரச்னை பெரிய வியாக்யானம், கேள்வி, விடைகள் ஆகியவைகளுடன் நடந்தது. காந்திஜிக்குச் சிறிய பிரச்னையானாலும் பெரிய பிரச்னையானாலும் ஒன்றே. இரண்டும் மிகுந்த கவனத்துடன் தீர்க்கப்படும்."

இந்த விஷயத்தையே விளக்க மற்றோர் இடத்தில் பிர்லாஜி கூறுகிறார்:

"ஆசிரமந்தான் என்ன, ஒரு விநோதக்காட்சியே! அங்கிருப்பவர்களைச் சிவகணங்களின் கல்யாணக் கூட்டம் என்றே சொல்லலாம். பலவித ரோகிகளும் இருக்கிறார்கள். அவர்களைச் சொஸ்தம் செய்யும் விஷயத்திலும் காந்திஜி அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார். ஒருதினம் ஒரு வியாதியஸ்தனுக்குக் குளிர்காலத்திற்காக ஒரு ரஜாயி தைக்கப்படுவதை நான் பார்த்தேன். 'பா' வின் (காந்திஜி மனைவியின்) பழைய புடைவை ஒன்று கொண்டுவரப்பட்டது. காந்திஜி அதைத் தமது கையினல் அளந்து, எவ்வளவு துணி வேண்டுமென்பதைத் தீர்மானித்தார். ரஜாயிக்கு உள்ளே அடைப்பதற்குப் பஞ்சுக்குப் பதிலாகப் பழைய பத்திரிகைகள் ஒன்றன்மேல் ஒன்றாய் அடுக்கப்பட்டுத் துணிக்குள் வைத்துச் சேர்த்துத் தைக்கப்பட்டன. காந்திஜி அக்கரையுடன் அவ்வேலை முழுவதையும் செய்துவைத்தார். என்னிடம், 'பஞ்சைவிடக் காகிதம் குளிருக்கு அதிக அடக்கமாக இருக்கும்' என்றார். அவருடைய மிக அருமையான நேரத்தை இந்த வேலைகளில் செலவழிக்கிறாரே என்று எனக்குத் தோன்றிற்று. நான் விளையாட்டாக, 'தேசத்தின் பெரிய பெரிய காரியங்களைவிட ஆசிரமத்தின் மிகச் சிறிய காரியத்தில் அதிக அக்கரை இருக்கிறமாதிரி காண்கிறதே!' என்றேன். 'அதிகம் இல்லை; ஆனல் அவ்வளவு அக்கரை இதிலும் இருக்கிறது என்று சொல்லலாம்' என்றார்."

காந்தி பக்தர்களென்று தம்மைச் சொல்லிக்கொள்பவர்கள் காந்திஜியின் இந்தக் குணங்களையும் கவனித்துப் பின்பற்றினல் சாதகமே பெறலாம்.

காந்திஜியின் ஈச்வர பக்தி, ராஜதந்திர நிபுணத்வம், ஹரிஜனசேவை, ஆத்ம சுத்தி, கோபத்தை அடக்குதல் ஆகிய குணங்களைத் தனித்தனியாகப் பிர்லாஜி மிக ஸ்வாரஸ்யமான நடையில் வர்ணித்திருக்கிறார். அவைகளில் எதை இந்தக் கட்டுரையில் எடுத்துச் சொல்லலாமென்று அப்புத்தகத்தைப் புரட்டுவேன். படிக்க ஆரம்பித்ததும் ஊன்றி மேன்மேல் படித்துக்கொண்டே இருந்துவிடுவேன். இவ்விதமே எனக்குப் பல நாட்கள் கழிந்துவிட்டன. நான் அப்புத்தகத்தைப் பல முறை படித்தாய்விட்டது. ஆனல் எதை எடுத்துச்சொல்வது என்பதைத் தீர்மானிக்கமுடியவில்லை. பிர்லாஜி சொல்லியிருக்கும் மற்றும் ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் கூறி இக்கட்டுரையை முடித்துக் கொள்ளுகிறேன்:

"காந்திஜிக்குப் பிறகு அஹிம்ஸை நிலைத்திருக்குமா? காந்திஜியின் வாழ்நாட்களுக்குப் பிறகு அஹிம்ஸை விருத்தியடையுமா? கூர்ணித்துவிடுமா?

"புத்தர் ஏசுநாதர் இவர்களுடைய உபதேச வார்த்தைகளை ஜனங்கள் மேல்வாரியாகப் பின்பற்ற முயலுகிறார்களே தவிர, அவைகளின் உட்கருத்துப்படி நடக்க முயலவில்லை என்பது இருக்கலாம். இருந்தும் புத்தருடைய உபதேசம் வீணுகிவிட்டதென்றுகிலும், ஏசுநாதரின் தேஜஸ் மங்கிவிட்டதென்றுகிலும் இன்று சொல்ல இயலுமோ? மழைபொழியும் சமயம் எல்லா இடங்களும் ஜலமயமாகக் காண்கின்றன. சரத்காலத்தில் அந்தத் தண்ணீர் மறைந்துவிடுகிறது. அதனல் நாம் மழையின் பிரபாவம் போய்விட்டது என்று சொல்ல இயலுமோ? உண்மை என்னவெனில் சரத்காலத்தின் பசுமை வயல்கள் மாரிக்காலத்தின் பிரபாவத்தையே எடுத்துக்காட்டுகின்றன. மாரிக்காலத்தின் தண்ணீர் வயல்களின் மண்ணில் மறைந்துவிட்டது; ஆனல் அதே நீர் பயிர்களின் தான்யங்களில் புகுந்து ஜீவிக்கிறது. வயலில் தண்ணீர் தேங்கி நின்றுல் துர்க்கந்தமே பரவும்; பூச்சிகளும் புழுக்களும் துர்நாற்றமும் விருத்தியாகும். தான்யங்களில் பிரவேசித்து அது அழியாத்தன்மை அடைந்திருக்கிறது" என்கிறார்.

காந்திஜியின் போதனையைப் பின்பற்றுபவர்களுக்கு இந்த வார்த்தைகள் உற்சாகமும் ஊக்கமும் அளிக்கும்.

ராமதீர்த்தரின் உபதேசக் கதைகள்

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

ராமதீர்த்தர் ஒரு காலேஜில் போதக ஆசிரியராக இருந்தார். இடைவிடாது அவரைத் தொடர்ந்த அந்த வேலைக்கிடையே உண்மை ஒலி மதுரமாய் எழுந்து அவரை அழைக்க ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து எல்லாவற்றையும் துறந்து அது திரிகிற வழியெல்லாம் சென்று அமைதி அடைந்தார்.

ராமதீர்த்தரை நினைக்கிறபொழுது அவருக்கு முற்றும் மாறான வேறோர் ஆசிரியர் என் கண்முன் நிற்கிறார். அவர் நா ஒன்று பேசுகிறது; சிந்தை யொன்று நினைக்கிறது; கை யொன்று நாடுகிறது. அவர் ஒரு நாள் உபந்நியாசம் செய்து கொண்டிருந்தார். மண்டபத்தில் உபாத்தியாயர்கள் ஒரு பக்கம்; மாணவர்கள் ஒரு பக்கம்; ஒரு பெருங்கூட்டம். முதலில் எங்கும் ஓர் அமைதிதான்.

"யார் முனி தெரியுமா? ஆசையை விட்டவன், பயத்தை விட்டவன், கோபத்தை விட்டவன், நிச்சய புத்தியுடையவன் எவனே அவன்தான் முனி. அவனைப்போல நாமும் ஆகவேண்டும்" என்று ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

वीतरागभयक्रोधः स्थिरधीर्मुनिरुच्यते ।

இந்த வேதாந்தத்தின் மர்மத்தை இளமை முறுக்குள்ள மாணவர்கள் அறிவார்களா? சொன்னவற்றைத் திருப்பிச் சொல்லுவதனால் வந்த அயர்வினாலோ, வீட்டிற்குப் போகவேண்டுமென்ற ஆத்திரத்தினாலோ பெஞ்சிகளை ஆட்டினார்கள்; கிளி போல் கத்துகிறது, பூனை போல் கத்துகிறது இவ் விஷமங்களில் ஈடுபட்டார்கள்.

உபந்நியாசகருக்குக் கோபம் வந்தது; அவர்களைத் தீயெழ நோக்கினார்; "கழுதைகளே! உங்களுக்கு ஞானமில்லையா? இப்படிச் செய்தீர்களேயானால் உங்களைப் பள்ளிக்கூடத்தை விட்டு அடித்துத் துரத்திவிடுவேன்" என்று கடுமையாய்ப் பேசினார்.

சிறிது நேரம் அமைதி ஏற்பட்டது; மறுபடியும் சுலோகத்தைச் சொல்லி வியாக்கியானம் செய்ய ஆரம்பித்தார்:

वीतरागभयक्रोधः स्थिरधीर्मुनिरुच्यते ।

மறுபடியும் அதே சத்தந்தான்; அந்தக் கடுமையான வார்த்தைகளே.

இதைப் பார்த்த உபாத்தியாயர்கள் தங்களை அறியாமலேயே களுக் கென்று சிரித்துவிட்டார்கள். அவர்கள் சிரித்த மர்மம் உபந்நியாசகருக்கு விளங்கவில்லை. 'இன்னும் விளங்கியிருக்குமா?' என்பது சந்தேகந்தான்.

உண்மையான நகைச்சுவை உள்ளவனுக்கு இது புலனுகாமற் போகாது. நம்மைப் பார்த்து நாமே நகையாடுகிற தன்மையை நம் உள்ளத் திலே விருத்தி செய்துகொள்ளவேண்டும்.

இம்மாதிரியான போதக ஆசிரியர்களை வாழ்விலே ராமதீர்த்தர் கண் டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. அவர்களை மனத்தில் வைத்துக் கொண்டுதான் யுதிஷ்டிரர் மாணுக்கராயிருந்தபோது நிகழ்ந்த ஒரு விருத் தாந்தத்தை நமக்கு அவர் தருகிறார் போலும்:

யுதிஷ்டிரர் மற்றப் பிள்ளைகளோடு பள்ளிக்கூடத்தில் பாடம் வாசித்துக் கொண்டிருந்தார். தலைமை உபாத்தியாயர் வகுப்பிற்கு வந்து பையன்களைப் பாடங் கேட்டார். அவர்கள் அவைகளைக் கடகடவென்று ஒப்பித்து விட்டார்கள். யுதிஷ்டிரர் முறை வந்தது. "என்ன படித்திருக்கிறாய்?" என்று வினவினர் உபாத்தியாயர்.

"அரிச்சுவடி படித்திருக்கிறேன்; முதல் பாடம் படித்திருக்கிறேன்."

"இவ்வளவுதானு? இதற்குமேல் படிக்கவில்லையா?" என்று கேட் டார் உபாத்தியாயர்.

"இல்லை; இரண்டாவது வரிகூடப் படித்திருக்கிறேன்" என்று சற்றுத் தயங்கிப் பதில் சொன்னர் யுதிஷ்டிரர். ஆனல் அரசிளங்குமாரர் முகத்தில் அமைதி தோய்ந்த நகை விளையாடிற்று.

உபாத்தியாயருக்குக் கோபம் பிறந்துவிட்டது; "இவ்வளவு மெது வாகப் போனல் என்றைக்குப் பாடம் முடியப்போகிறது?" என்று சினந்து யுதிஷ்டிரரை அடித்தார். அடித்தென்ன? முகத்தில் கோபக்குறியைக் காணவே இல்லை.

'இதென்ன! மற்றவர்கள் எதிர்த்துப் பேசுவார்கள்; இவன் வாயைத் திறக்கவில்லையே' என்று சற்று நிதானிக்கலானர். யுதிஷ்டிரர் பொறுமைச் சிலையாய் நின்றார். முன்போன்ற அமைதிதான்; சிரித்த முகந்தான். உபாத்தி யாயர் பாடத்தைக் கவனித்தார். 'ஆறுவது சினம்' என்று எழுதப்பட் டிருந்தது. ஒரு கண் பையன்மீது விழ, மற்றொரு கண் பாடத்தின் மீது விழப் பாடத்தைக் கவனித்தார். உண்மை மின்னலடித்தது அவர் உள்ளத் தில். ஆறுவது சினம்; கோபங் கொள்ளாதே; உண்மை உரை: இம் மூன்று தத்துவங்களையும் சிஷ்யனிடமிருந்து குரு கற்றுக்கொண்டார்.

யுதிஷ்டிரர் கோபத்தை அடக்கிக்கொண்டு முகமலர்ச்சியோடு இருந் தார். ஆனல் கோபம் மனத்தில் எழாமல் இல்லை. அதனல்தான் இரண் டாந் தத்துவத்தை முழுவதும் கற்கவில்லை என்று தாமதித்துப் பதில் சொன்னர். அப்படித் தாமதித்துப் பதில் சொன்னவுடன் அவர் உண்மை உரைத்தார் என்று விளங்கிவிட்டது. அனுபவபூர்வமாக உண்மைகள்

கனிந்தால்தான் நாம் உண்மைகளை அறிந்தவராவோம். உண்மை நிலையை உடனே அடைந்துவிட முடிகிறதா? அனுபவம் சுலபமாகக் கிடைத்து விடுவதா? தெம்மாங்கு பாடி அடைந்துவிட முடியுமா? ஞானம் தெருக்கூத்தினால் வந்துவிடுமா? வராது; மனிதன் தன்னுடையவை எல்லாவற்றையும் தியாகம் செய்யவேண்டியிருக்கிறது. வீடு, வாசல், மனைவி, மக்கள் எல்லாவற்றையும் விடவேண்டியிருக்கிறது* என்று பிளேக் (Blake) கூறுகிறார்.

எல்லாவற்றையும் துறந்து இவ்வனுபவத்தை அடைந்தவர் ராமதீர்த்தர் என்பதை அவரது தூய சன்னியாசி வாழ்வு உலகங்கேட்க முரசடிக்கிறது. அவர் ஆத்ம விசாரணை அரணியத்திலிருந்து 171 உபதேசக் கதைகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆசைகள், சிரத்தை, பகவதனுபவம், கர்மம், மாயை, அன்பு இவைகளைப் பற்றிய கதைகளைத் தந்திருக்கிறார்; புராணக்கதைகளில் வேதாந்த அர்த்தத்தைப் புகுத்துகிறார். உதாரணமாக:—ஒரு மடுவிலுள்ள பாம்பின்மேல் கண்ணன் ஆடின விருத்தாந்தத்திற்கு வேதாந்த பரமாகப் பொருள் கூறுகிறார். மடுவே மனம். கிருஷ்ணன் போல நாம் ஆவதற்கு மனமாகிற மடுவிலே இருக்கிற ஆசாபாசங்களாகிற பாம்பின்மீது குதித்தாடவேண்டும். ஒரு தரத்தில் ஆகிற காரியம் அல்ல இது. மனத்தை அப்படியே அழித்துவிடவேண்டும், அப்பொழுதுதான் ஆத்மாவுக்கு வெற்றி என்கிறார். புராண விருத்தாந்தங்கள், ஏசுநாதர் உபதேசங்கள் இவைகளை உருவகப்படுத்திக் கதைகள் சொல்கிறார். உருவக இலக்கியமாகக் (Symbolic) கதைகள் இவர் கையில் மாறுகின்றன.

ஆசைகளை வென்றவன் எப்படி நன்மையை உலகத்திற்குச் செய்கிறான் என்றதை விஷயமாய் வைத்து மிக அழகாய் ஒரு கதை சொல்லுகிறார்:

வெகுகாலத்துக்குமுன் ஒரு மஹான் இருந்தார். தேவர்கள் அம் மஹானைப் பார்க்க ஆசை கொண்டார்கள். தன்னந் தனியே யாவரும் அறியாதபடி அவர் தம் தினசரி வாழ்க்கையை நடத்திவந்தார். வானிலுள்ள நக்ஷத்திர ஒளிபோலவும், மல்லின் மணம்போலவும் அவர் அன்பு எங்கும் பரவியது. அவர் உலகத்தில் செய்த காரியங்கள் இரண்டு:—ஈதல், மன்னித்தல். இவ்விரண்டு சத்காரியங்கள் அவருடைய முறுவலிலும் அன்பிலும் பொறுமையிலும் விளங்கின.

ஒருநாள் தேவர்கள் பகவானிடஞ் சென்று, "பிரபுவே, அம்மஹானுக்கு வேண்டிய சித்திகளைக் கொடுக்கவேண்டும்" என்று பிரார்த்தனை செய்தனர்.

"எனக்குச் சம்மதந்தான். ஆனால் என் பக்தனுடைய ஆசையை நீங்கள் தெரிந்துகொண்டு செய்யுங்கள்" என்று விடையளித்தார் பகவான்.

---

*'What is the price of Experience? Do men buy it for a song?
Or Wisdom for a dance in the street? No! it is bought with the price
Of all that a man hath—his house, his wit, his children.'—Blake

தேவர்கள் பூமியில் இறங்கி மஹானைச் சந்தித்து, "வியாதியஸ்தர்களைத் தொட்டவுடன் தெளியவைக்கிற சக்தி உங்களுக்கு வேண்டாமோ?" என்றார்கள்.

"வேண்டாம்; அது பகவான் வேலை" என்றார் மஹான்.

"கெட்டவர்களை நல்வழிப்படுத்த வேண்டாமா?"

"அது தேவர்களின் வேலை. பிரார்த்தனை என் அலுவல்; அவர்களைத் திருப்புவது என் காரியம் அல்ல."

"பொறுமைக்கு ஒரு லட்சியமாக நீங்கள் ஆகவேண்டாமா? அதன் மூலமாக ஆண்டவன் பெருமையை உலகத்திற்கு அறிவிக்கலாமே?"

"அப்போது ஜனங்கள் என்னைத் தொழ ஆரம்பிப்பார்கள். பகவானை மறந்துவிடுவார்கள்."

"உமக்கு என்ன ஆசை?"

"நான் விரும்பும் பொருள் என்ன இருக்கிறது? அவன் அருளொன்றே போதும்" என்று அமைதியாய்ப் பதிலளித்தார்.

ஆசையற்றுச் சும்மா இருந்தால் வெறும் சோம்பேறிகள் என்று கருதுவதற்கில்லை. மலையின் ஏகாந்தத்தில் எதோ மறைவில் மலர்கின்ற மலரின் மணம் எங்கும் பரவுகிறதில்லையா? 'பெருங்காரியங்களைச் சாதித்துவிடலாம்; ஆனால் சும்மா இருக்கின்ற திறம் அரிது' என்கிறார் ஒரு மஹான். ராமதீர்த்தருடைய கதைகள் உருவகக்கதைகள் என்று முன்பு குறிப்பிட்டேன். அவற்றில் பின்வரும் கதை நோக்கத்தகுந்தது:

ஓர் இருட்டறை; ஒரு ஸ்திரீ ஊசியைத் தொலைத்து விடுகிறாள். உள்ளே தேடுவதற்குப் பயமாயிருந்தது. வெளியிலே வந்து வெளிச்சத்தில் தேடுகிறாளாம். இக்கதைபோல இருக்கிறது நம்முடைய நிலையும்.

மனக்குகையிலுள்ள அழிவில்லாத சுடரைத் தேடி ஆராய நமக்குச் சக்தியில்லை. ஆனால் புறத்தில் வேண்டிய ஆராய்ச்சிகளைச் செய்கிறோம். மாகடலின் ஆழத்தை அளக்கிறோம்; மலைச்சிகரங்களின் ரகசியங்களைத் தெரிய விரைகிறோம். பூமியைப் பிளக்கிறோம்; விண்ணிலே பறக்கிறோம்; நக்ஷத்திரங்களை எண்ணுகிறோம்; ஒளியின் வேகத்தைக் கணக்கிடுகிறோம்.

ஆனால் நாம் வந்தவழி அறியோம்; போகிறவழி அறியோம். நம்மையே அறிந்திலோம். முன்னும் இருட்டுத்தான்; பின்னும் இருட்டுத்தான். நடுவில் ஏதோ ஒரு மின்மினி வெளிச்சம். யாரோ ஒரு வீரன் உலகத்தை மறந்து உள்ளத்தின் பாதையிலே தனிவழியே செல்லுகிறான்; சென்றுகொண்டே இருக்கிறான். அவனுக்குத்தான் சோதனை; ஏமாற்றம்; அவனுக்குத்தான் திகைப்பு; ஆனால் அவனுக்குத்தான் வெற்றி.

இக்கதையை நினைக்கிறபொழுது நம் சிந்தை உபநிஷத்தில் காணப்படுகிற *உண்மைக்குப் பறந்து செல்லுகிறது.

---

*पराञ्चि खानि व्यतृणत्स्वयंभूस्तस्मात्पराङ्पश्यति नान्तरात्मन् ।
कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षदावृत्तचक्षुरमृतत्वमिच्छन् ॥

களவியல்

'வாஸிஷ்டன்'

(ஒரு பழைய ஜப்பானியக் கதை)

ஜப்பானில், காதலரிடையே பிரேமை முதிரும்போது அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருப்பதற்கு அறிகுறியாக ரகஸியத்தில் கையுறை வழங்கிக்கொள்வது வழக்கம்; சிலர் கணையாழி, சிலர் கண்ணாடி, மற்றும் சிலர் விசித்திர வேலைப்பாடுடைய சின்னஞ்சிறிய ஜப்பானியப் பேழை முதலிய அநேகவிதமான வஸ்துக்களை அளித்துத் தம் நட்பைச் சிறப்பிப்பார்கள். அவர்கள் பரஸ்பரம் கையுறையைப் பெற்றுக் கொள்ளும் செய்தி யாருக்குமே தெரியாது; தெரியப்படுத்தவும் மாட்டார்கள். வெளிப்பட்டுவிட்டால் மானம் போனமாதிரி அவர்களுக்கு!

டோகியோ நகரில் ஸாமுராய் (க்ஷத்திரிய) குலத்தில் பிறந்த செல்வர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரே பிள்ளை. அவனைப் போல் படிப்பில் ஊக்கம் செலுத்தியவர்கள் இவ்வுலகில் எவரும் இல்லை யென்றே கூறலாம். அவன் எப்போதும் புஸ்தகமும் கையுமாகத்தான் இருப்பான்.

திடீரென ஒருநாள் அவனுடைய தந்தைக்கு ஒரு மொட்டைக் கடிதம் வந்தது. "உம்முடைய பிள்ளை அடுத்த வீதியிலிருக்கும் இன்ன ருடைய பெண்மீது மோகம் கொண்டுவிட்டான். காதல் மிகவும் ரகஸியத்தில் நடக்கிறது. காதலர் இருவரும் ஓடிவிட உத்தேசித்திருக் கிறார்கள். ஜாக்கிரதை! உம்முடைய குலத்தின் கௌரவம் போய்விடாமல் காத்துக்கொள்ளும்" என்று ஊர்பேரில்லாத அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

லிகிதத்தைப் படித்துப் பார்த்தார் பையனுடைய தந்தை. ஒன் றும் தோன்றாமல் விழித்தார். படிப்பே இலக்காக இருக்கும் தம் மகனு ஒரு பெண்ணிடம் மையல் கொண்டிருப்பான்? புஸ்தகத்தை விட்டு அரைக் கணமும் முகத்தை எடுக்காதவன் ஒரு யுவதியின் முகத்தையா ஏறெடுத் துப் பார்த்திருப்பான்? சே! நம்பத்தக்க விஷயமாக இல்லை! எப்படி அவன் அவளைக் காதலிக்கக்கூடும்? அதிசயத்திலும் அதிசயம் இது!..... எப்படியிருந்தால் என்ன, பேச்சு வந்துவிட்டது. இனிமேல் விஷயத்தை ஓட்டுவது உசிதமன்று—அவர் நேரே தம் மனைவியோடு கலந்து யோசிக்க அந்தப்புரத்தினுள் சென்றார்.

சமாசாரத்தை வாங்கிக்கொண்டு பிள்ளையின் தாய், "இதில் என்ன தவறு? காதல் எப்போதும் அந்தரங்கமாகச் செல்லும் நதியைப்போன்றது

தான். ஆதியில் நீங்கள் இருந்ததை நினைத்துக்கொள்ளுங்கள். என் விவாகத்திற்குமுன் நீங்கள் என்மீது ஆசைகொண்டது யாருக்குத் தெரியும்?" என்றாள்.

தலையைத் தடவிக்கொண்டே யஜமானர், "ஆமாம்....." என்று வார்த்தையை மழுப்பினர்.

"இன்னுமா சந்தேகம் உங்களுக்கு? பையனுக்கும் கல்யாணம் பண்ணுகிற வயசாகிறது. சமயம் வாய்த்திருக்கும்போது காரியத்தை முடித்துவிடுங்கள்" என்று முதிர்ந்த உலக அனுபவத்துடன் கூறினாள் யஜமானி.

பிள்ளையின் தந்தை பெண் வீட்டாரைக் கண்டு இதைப் பிரஸ்தாபித்தார். பெண்ணின் தகப்பனார் எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டார். அவர் அடைந்த வியப்பிற்கு அளவே இல்லை. தம் மகளைப்போல் நாணமுடையவள் எங்குமே இல்லையென்பது அவரது எண்ணம். விவாகமென்றால் வெட்கிச் சாகும் அந்தப் பெண்ணை காதல் வசமாவாள்? அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. எதற்கும் விஷயம் இவ்வளவுதூரம் வந்தபிறகு, அதிலும் நல்ல வரன் வந்திருக்கும்போது, உதறித் தள்ளுவது பெண்களைப் பெற்றவர்களுக்கு அழகல்ல; தம் மகளை அவருடைய பிள்ளைக்குக் கொடுப்பதாக உறுதி கூறினார்.

இதையெல்லாம் கேட்டதும் பெண்ணின் அன்னை பூரிப்பினால், "நமக்கு நல்ல இடம் கிடைத்தது நம் அதிருஷ்டந்தான்" என்றாள்.

விவாகத்திற்கான ஏற்பாடுகள் மறைவில் நடந்துகொண்டிருந்தன. பையனுக்கு எந்த விதமாகவோ இந்தச் சமாசாரம் எட்டியது. தான் ஒரு பெண்ணிடத்தில் காதல் கொண்டிருப்பதாக ஊரில் வதந்தி உலாவுவதைக் கண்டுகொண்டான். அவன் பிரமித்துப் போய், "எந்தப் பெண் அவள்? நான் ஒரு பாவத்தையும் அறியேனே!" என்றான். அவன் எவ்வளவு சொன்னாலும் அவன் பேச்சைக் கேட்பவர் யார்?

நண்பர்கள் அவனை அந்தப் பெண்ணிடம் இழுத்துச் சென்று, "இப்போதாவது தெரிகிறதா இவள் யாரென்று? கண்ணைத் திறந்து பார்" என்று கேலி செய்தனர்.

"நான் இவளை இதுவரையில் பார்த்ததே இல்லை" என்று சொல்லிய படியே ஸாமுராயின் மகன் அந்தப் பெண்ணை ஒருதரம் நன்றாகக் கவனித்துக்கொண்டான். அவளைப் பார்க்கப் பார்க்கப் புஸ்தகங்களைவிட மனத்தைக் கவரக்கூடியவள் அந்த யுவதி என்ற உண்மை அவனுக்கு வெளிச்சமாகியது.

பெண்ணை அதற்குமுன் எந்த ஆடவன் முகத்தையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை. தலைமகன் யாரென்று அறிய அவளுக்கு ஆவல் மூண்டெழுந்தது. சற்றே முகம் நிமிர்ந்து கடைக்கண்ணால் பார்த்து ஸாமுராய் குலத்தவனை மனத்துள் வரித்தாள். மறுகணமே வெட்கித் தலைகுனிந்

தாள். இரண்டுபேரையும் பிணைக்க இது யார் செய்த சூழ்ச்சியாயிருந்தாலும் இதன் விளைவு நன்மையே! "இனிமேல் ஒப்புக்கொள்ளடா, திருடா!" என்று அவன் கூட்டாளிகள் வற்புறுத்தினர். அவனுக்கு அவமானம் தலை நிமிரமுடியாமல் இருந்தது.

"உண்மையில் நடவாததை எவ்வாறு ஒப்புக்கொள்வது? ஸத்தியமாக இவளை நான் இதற்குமுன் பார்த்ததுமில்லை, நேசித்ததுமில்லை" என்றான்.

பாவம்! அவனுடைய வார்த்தை அம்பலத்தில் ஏறவில்லை. அந்தப் பெண்ணை அவன் காதலிக்கிறான் என்ற வதந்திமட்டும் பரவிக்கொண்டிருந்தது. அதே சமயம் அந்தப் பெண்ணை யுவனுக்கு விவாகம் செய்துதர நிச்சயமும் ஆகிவிட்டது. ஊராருடைய பேச்சு உண்மையாக முடியுமே என்ற வருத்தத்தினால் அவன் வீறுப்புக்காக, "எனக்கு ஸம்மதம் இல்லை. நான் அவளை ரகஸியத்தில் காதலிப்பது சுத்தப் பொய். நான் அவளை மணந்துகொள்ளப் போவதில்லை" என்றான்.

இதைக் கேட்டதும் அக்கம் பக்கத்தவர்கள் நகைத்தார்களே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. "நிச்சயமாக இதில் ஏதோ மர்மம் இருக்கிறது" என்று பேசிக்கொண்டனர்.

இதென்ன உபத்திரவம்? இந்தத் தொல்லையிலிருந்து நீங்க அவன் மனம் ஏகாந்தத்தை நாடும்போது அந்த இடத்திலும் ஏமாற்றமே அடைந்தான். தன் மனத்துள்ளும் அவனுக்குத் தனிமை கிடைக்கவில்லை. அங்கு ஒருத்தி நிரம்பியிருந்தாள்.

ஊர்வம்பு பலமாகிக்கொண்டே வரும்போது சட்டென ஒருநாள் அவர்களுடைய காதல் யாரோ திரித்த விடுகதையென்பது வெளிச்சமாகிவிட்டது. ஊர் வம்பளப்பும் ஓய்ந்தது.

அப்போதுதான் ஸாமுராய் மகனுக்குப் போன உயிர் வந்தது. ஆனாலும் சிலருக்குமட்டும் ஸந்தேகம் இருந்துகொண்டுதான் இருந்தது; "நெருப்பில்லாமல் புகையுமா?" என்றார்கள்.

பையன் பிடிவாதமாக இருக்கவே நடக்கவிருந்த கல்யாணம் நின்றுவிட்டது. அதோடு ஊராருக்கு இருந்த ஸந்தேகங்களும் தொலைந்தன. இதுவே சமயமென்று ஸாமுராயின் மகன் தன் விரலில் அணிந்திருந்த அழகிய மோதிரத்தை யாருக்கும் தெரியாமல் யுவதிக்கு அனுப்பிவிட்டு அவளிடமிருந்து பிரதியாக வரும் கையுறைக்காக இதயம் பரபரப்புடன் அடித்துக்கொள்ளக் காத்துக்கொண்டிருந்தான். சில நாழிகைக்கெல்லாம் நாணமே உருவெடுத்தாற்போன்ற அந்த யுவதியினிடமிருந்து ஏழு மடிப்புகளையுடைய துல்லிய மகமல்லில் சுருட்டப்பட்டு ஓர் அழகிய பொற் சிமிழுள் காதலியின் கணையாழி வந்து சேர்ந்தது.

நாடோடிப் பாட்டுக்கள்

பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல்.

1

நமது பாரதநாட்டின் உயிர் நாடியானது மக்களிற் பெரும்பாலோர் வதியும் பட்டிக்காடுகளிலேதான் உளது. அங்கேதான் பாமரமக்களின் உண்மையான அந்தரங்க வரலாற்றையும், அவர்களது உள்ளத்தில் இயற்கையாகப் பொங்கி வழியும் உணர்ச்சிகளையும் கண்கூடாகக் காண்கிறோம். காடுமேடுகளைத் திருத்தி நிலங்களை உழுதல், பரம்படித்தல், விதைத்தல், ஏற்றம் இறைத்தல், நாற்று நடுதல், களை பறித்தல், ஆடு மாடுகளை மேய்த்தல், பஞ்சு கொட்டுதல், ராட்டை சுற்றுதல், நெய்தல், டானை வனைதல், கம்மம் கொத்து சிற்பம் முதலிய வேலைகளைச் செய்தல், செக்காடுதல், தோணி ஓட்டுதல், மீன் பிடித்தல் ஆகிய கிராம வாழ்க்கைக்குரிய தொழில்களைப் புரிவோரின் இன்ப துன்பங்கள், விருப்பு, வெறுப்பு, அச்சம், ஐயம், ஆர்வம், ஆசை, நம்பிக்கை, லட்சியம், வீரம், காதல் முதலிய யாவும் பளிங்குபோன்ற உள்ளத்தினின்று பொய்யும் பகட்டுமின்றி இயற்கையாக வெளிப்பட்டு ஆடல் பாடல்களாகப் பரிணமிப்பதை அங்கேதான் காண்கிறோம்.

நிலத்தோடு பிறந்து நிலத்திலே வாழும் குடிமக்கள் எத்தொழில் செய்யப் புகினும், உணர்ச்சியின் மேலீட்டால் பாடுவது பண்டுதொட்டு இயற்கையாக இருந்து வருகின்றது. குடியானவன் வண்டிமாடு ஏற்றக்காலைகள் முதலியவற்றை இயக்கும்போது உல்லாசமாகப் பாடுவான். அவன் அறுவடைக்காலத்தில் அரிவி1 வெட்டும்போதும், உப்பட்டி2 கட்டும்போதும், சூட்டடிக்கும்3 போதும், பொலிகாவும்4போதும் பாட்டுத்தான். மகளிர், பயிர் சேதமாகாதபடி கிளி குருவிகள் ஓட்டும் போதும், நாற்று நடும்போதும், நெல் குத்தும்போதும், கட்டிட வேலைக்காகச் சாந்து குத்தும்போதும் பாடுவர்; பூத்தொடுக்கும்போதும் பாடுவர்; பண்டங்கள் விற்கும் போதும் பாடுவர். இளங்கையர் உந்தி, கழங்கு, அம்மானை முதலிய விளையாட்டுக்களை ஆடும்போதும் பாடுவர். பிச்சைக்காரனும் தெருத்தெருவாகப் பிச்சை யெடுக்கும்போது பாடுவான்.

இப்பாட்டுக்களிற் சில பாடுவதற்குமட்டுமன்றி ஆடுவதற்கும் உரியன. பண்டைத் தமிழ்நாட்டில், ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை5, குறவஞ்சி6,

---

1. கதிர்ப்பிடி. 2. அரிக்கட்டு. 3. கதிரைக் கடாவிட்டு உழக்குதல். 4. நெற் குவியலைத் தூக்கிச் செல்லல். 5. முல்லை அல்லது குறிஞ்சிநில மகளிர் தம்முட் கை கோத்து ஆடும் கூத்துவகை. 6. குரவைக்கூத்துடன் அவிநயம் கலந்த நாடகம்; வீரமும் இன்பமும் கலந்தது. தற்காலம் தஞ்சைப் பிருகதீசுவரர் கோயிலில் விழாக்காலங்களில் ஒரு குறவஞ்சி நாடகம் ஆடப்படுகிறது. அது 'சாபேந்திர பூபால குறவஞ்சி' எனச் சிவக்கொழுந்து தேசிகர் எழுதிய நாடகத்தை அடிப்படையாகக் கொண்டது. மராத்திய அரசனை சரபோஜி தஞ்சாவூரில் அரசாண்டபோது, அவன்மேல் மோகங்கொண்ட மோகினியின் மோகத்தையும், குறமகள் மன்னனுடைய

உழத்தியர் பாட்டு, உலக்கைப்பாட்டு, வெறியாட்டு[1], வென்றிக்கூத்து[2], வள்ளிக்கூத்து, கழைக்கூத்து, நோக்கு[3], தோற்பாவைக்கூத்து முதலிய கூத்துக்களும், கொற்றி, சித்து, சிந்து, நொண்டிச்சிந்து[4], சாழல், காமன், முதலிய வரிக்கூத்துக்களும், புராண சம்பவங்களே ஆதாரமாகக் கொண்டு எழுந்த அல்லியம்[5], மற்கூத்து[6], குடக்கூத்து[7], கொடுகொட்டி[8], பாண்டரங்கம்[9], குடை[10], துடி[11], கடையம்[12], மரக்கால்[13], பாவை[14], பேடு[15] என்னும் தெய்வக்கூத்துக்களும், அவற்றிற்குரிய பாடல்களும் பழக்கத்தில் இருந்தன என்பது சிலப்பதிகாரம் அடியார்க்குநல்லார் உரையாலும் வேறு சங்கநூல் உரைகளாலும் காணக்கிடக்கின்றன. மலையாளத்தில் பல கிராமங்களில், ஐவர்களி, பரிசைக்களி, ஓட்டந்துள்ளல் முதலிய ஆடற்கதைகளும் இலங்கையில் கண்டிநாட்டியமும் இன்னும் வழங்குகின்றன. இவ்வாடல் பாடல்களே நாட்டுக்கூத்து (folk dance) எனவும், நாட்டுப் பாட்டு அல்லது கிராமகீதம் (folk song) எனவும் வழங்குகின்றன. இவ்வாடல் பாடல்களின் மூலமாகப் பாரதத்தாய் தன் இதய மாண்புகளையும் சுயவாலாற்றையும் அழகுற வெளிப்படுத்தி வருகின்றாள்.

இந்நாட்டுப் பாட்டுக்கள், சாதாரணமாக, மக்களின் அனுபவத்தையோ, அவர்கள் காணும் காட்சியையோ, அல்லது அவர்கள் உள்ளத்தில் எழும் கருத்தையோ, அச்சம், அவலம், வியப்பு, வெகுளி, வீரம், நகை, காதல் முதலிய ஏதேனும் ஓர் உணர்ச்சியையோ மெய்ப்பட வெளிப்படுத்தும், இரண்டடிகளோ அல்லது பல அடிகளோ கொண்ட தனிப்பாடல்களாக விளங்குவன. இவற்றில், இளஞாயிறு, செக்கர்வானம், வெண்ணிலா, விண்மீன்கள், வசந்தகாலத்துப் புது மலர்கள், பயிர்களின் முதற்கதிர்கள், இன்னிசை பாடும் புள்ளினங்கள் முதலிய இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கும் பாடல்கள் சில காணலாம். பிறந்த நாட்டின்மீது பாடும் பாட்டுக்களும், தாய் தன் குழந்தையின்மீது அன்பொழுகப்

குணதிசயங்களைப் போற்றுவதையும் விவரிப்பது. 1. பூசாரி கள்ளுண்டு தெய்வமேறி ஆடுவது. 2. பகைவன் ஒடுக்கமும் மன்னன் உயர்ச்சியும் காட்டும் கூத்து. 3. ஒரு விநோதக்கூத்து. 4. கள்வன் படையிலுள்ள குதிரையைத் திருட முயன்றபோது கால் தறியுண்டு, பின் நல்வழி பெற்ற செய்தியைப் பாட்டால் புனைந்து கூறும் நாடகம். 5. அல்லியம், மற்கூத்து, குடக்கூத்து - இவை திருமாலின் கூத்துவகைகள். அல்லியம் என்பது கண்ணன் கம்சன் ஏவிய யானையின் தந்தத்தை முறித்து நடனம் ஆடியது. 6. மற்கூத்து, கண்ணன் மல்லனுகிப் பகாசுரனை வென்று ஆடிய கூத்து. 7. குடக்கூத்து, தன் போலுகிய அரிருத்தனைப் பாணன் சிறைப்படுத்த, அவனது நகரவீதியில் சென்று கண்ணன் குடமெடுத்து ஆடிய கூத்து. 8. கொடுகொட்டியும் பாண்டரங்கமும் சிவபெருமானுடைல்கள். கொடுகொட்டி, திரிபுரம் எரித்தகாலை ஆடியது. 9. பாண்டரங்கம், திரிபுரம் அழித்தபோது ஆடியது. 10. குடைக்கூத்து, கந்த நடனங்களில் ஒன்று. 11. துடி, பகைவனை வென்றபின் கந்தனும் சத்தமாதரும் துடி கொட்டி ஆடியது. 12. கடையம், இந்திராணியின் கூத்து. 13. மரக்கால் என்பது துர்க்கை அவுணரை எதிர்க்க மரத்தால் செய்த காலைக்கொண்டு ஆடியது. 14. பாவை என்பது அவுணர் மோகித்து விழும்படி கொல்லிப்பாவை வடிவங்கொண்டு திருமகள் ஆடியது. 15. பேடு என்பது, வாணனுல் சிறையிடப்பட்ட தன் மகன் அரிருத்தனைச் சிறைமீட்டுப் பிரத்யும்னன் ஆடியது.

பாடும் பாட்டுக்களும், தாலாட்டுக்களும், காதலர் பிரியும்போதும் மணமகள் பிறந்த அகத்தைவிட்டுப் புக்ககம் செல்லும்போதும் வழங்கும் பாட்டுக்களும், திருமண விழாவின்போது பாடப்படும் ஊஞ்சல் பாட்டு, நலங்குப்பாட்டு முதலிய பாட்டுக்களும், இழவின்போது பாடப்படும் ஒப்பாரியும் பல காணப்படுகின்றன. ஜாதிக் கொடுமைகள், ஏழைமையின் துன்பங்கள், பண்ணையாட்களின் துயரங்கள், வாழ்க்கையின் சோகங்கள் முதலியவற்றை வெளிப்படுத்தும் பாட்டுக்களும் உண்டு. இவற்றைப் பல நாட்டிலுள்ள மக்கள் பலவிதமாகப் பாடினும், இவ்வெல்லாவற்றிலும் ஒரேவிதமான மானிட உணர்ச்சியைக் காண்கிறோம். இத்தனிப்பாடல்களின் உதாரணங்கள் சிலவற்றைக் கூறுவோம்:

"ழங்கிலிலே மேலே
தூங்துபனி நீரே
தூங்துபனி நீரை
வாங்துகதி ரோனே."

இது தமிழ்நாட்டில் வெகுகாலமாக வழங்கிவரும் எற்றப்பாட்டுக்களில் ஒன்று. ஒரு சமயம் கம்பர் விடியற்காலையில் ஒரு தோட்டத்தில் தங்கியிருந்தார். அப்போது சிலர் ஏற்றம் இறைத்துத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்க, தண்ணீர்ச் சாலைப் பிடித்தவன் இயற்கையழகில் ஈடுபட்டு உணர்ச்சி ததும்பும் இப்பாட்டைப் பாடினான். இதைக் கேட்ட கம்பர் 'ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை' என்றாராம்.

"சிலலேன்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டிலே
நிலலேன்று சொல்லி நிறுத்திவழி போனீரே."

இது ஒப்பாரிப்பாட்டின் ஒரு பகுதியாகும்.

"ஊரான் ஊரான் தோட்டத்திலே—யாரோ
ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்—அதைக்
காசுக்கு நாலாக விற்கச்சொல்லி—நல்ல
காயிதம் போட்டானும் வெள்ளைக்காரன்."

இது கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்நாட்டுக்கு வந்தபிறகு ஏற்பட்ட பாட்டு. கும்பினி உத்தியோகஸ்தர்களுக்கென்று குறைந்த விலைக்குக் கறிகாய் விற்கும்படி குடியானவர்களை நிர்ப்பந்தப்படுத்தியதன்மேல் அத்திரங்கொண்டு பாடியது.

"கோடை யாலே மழையும் இருளுது
கூட்டுங் கோகதி ரானவை யெல்லாம்
வாடை யாலே மழையு மிருளுது
வாருங் கோமள்ளர் உப்பட்டி கட்ட."

"சூட்டைத் தள்ளடா மாட்டை ஏத்தடா
சோம்பல் தனத்தைத் துடையடா
பாட்டைப் பாடடா மாட்டைச் சாயடா
பள்ள ரானவர் அனவரும்."

இவ்விரண்டு பாட்டுக்களும் இலங்கையில் மட்டக்களப்புப் பகுதியில் வேளாளர் பாடும் பாட்டுக்கள் (வசந்தன் கவிதைகள்.)

"நீடுவாழ் கண்மணியே
நீடுவாழ் என்தழதாய்

தேடுந் தவப்பயனே
தெய்வந் தருவானே.''

இது கூர்ஜராநாட்டுத் தாயின் பாட்டுக்களில் ஒன்று.

''இல்விளக்குப் போலென்
இருகண் மணிவிளக்கே
நீடுவாழ் கண்மணியே
நீடுவாழ் பொன்மணியே.''

இது ஆந்திரநாட்டுத் தாயின் பாட்டுக்களில் ஒன்று.

''பிறர்மனையைப் போலியவைக்கப்
பிரியமுடன் வளர்த்தாள் என்தாய்
பேணி என்னை வளர்த்தாள்.''

இது அஸ்ஸாம் நாட்டு மணமகள் பிறந்தகத்தை விட்டுப் புக்ககம் செல்லும் போது பாடும் பாட்டின் ஒரு பகுதி.

''காசிநாடே—இனிய காசிநாடே
காதலிக்கி றேன்உன்னைக் காசிநாடே
எந்தையரைத் தோட்டிலிட்டு
முந்து வளர்த்தாய்
சிந்தையினில் என்றுமவர்
சீவித் திருப்பார்,
சாவின் கணைவரினும் காசிநாடே—எம்
சான்றேரை மறப்போமோ—காசிநாடே
காசிநாடே—இன்பக் காசிநாடே
காதலிக்கி றேம்உன்னைக் காசிநாடே.''

இது அஸ்ஸாம் நாட்டில் காசிக்குன்றுகளில் வசிக்கும் மக்களின் நாட்டுப்பாட்டு.

''உழவனுக்காதே—கடவுளே
உழவனுக்காதே—இனி என்னை
உழவனுக்காதே—ஏழ் பிறவியும்
உழவனுக்காதே.

பாடுபட்டும் ஒரு பலனுமில்லை
பயிரும் விளைவும் படுமோசம் பார்
மாடும் ஏரும் மறித்துக் கொண்டார்
மனைவி மக்கள் பிழைப்ப தெப்படி?

விதைக்கு நெல்லும் வீட்டு நெல்லும்
வெய்யர் வரிக்குப் பறித்துக் கொண்டார்
குதிப்ப தெப்படி கோப்பி தட்டிக்
கொடுமை கொடுமை கொடுமை கொடுமை!

உழவனுக்காதே—கடவுளே
உழவனுக்காதே—என்னையினி
உழவனுக்காதே.''

இது பாஞ்சாலநாட்டுக் குடியானவனின் பாட்டு.[1]

மேற்சொன்ன தனிப்பாடல்கள் நாட்டுப்பாட்டுக்களில் ஒரு வகையைச் சேர்ந்தவை. ஆங்கிலத்தில் பாலத்து (ballad) என வழங்கும் மற்றொரு வகையும் உண்டு. இதை வங்கமொழியில் கீத காதா எனவும், தெலுங்கில் கிராமகீதம் அல்லது பதம் எனவும் வழங்குவர். நம் மொழியில் இது நாடோடிப் பாட்டுக் கதை என வழங்குதற்குரியது. இது காதல், வீரம், நாட்டு வரலாறு முதலிய நிகழ்ச்சிகளையும் அருஞ் செயல்களையும் கதைபோலக் கூறும் சிறு பிரபந்தமாக இருக்கும். இப்பாட்டுவகைகள், ஆதியில் பலவகையான தெய்வ வழிபாடுகளுடனும் போர்த்தொழிலுடனும் தொடர் புடையனவாகி, திருவிழாக்காலங்களில் ஊர்ப்பொட்டலிலும் போர்க்காலத்தில் போர்க் களத்திலும் பாடப்பட்டவையாக இருந்தன. இவை நாளடைவில் மக்களின் நினைவில் பேணப்பட்டுக் கர்ணபரம்பரையாக வழங்கிவரும் அருஞ்செயல்கள், வரலாறுகள், காதலும் வீரமும் கலந்த பெருநிகழ்ச்சிகள், பெருந்துன்பங்கள் முதலியனவற்றைப் பற்றியனவாக விளங்கின. உதாரணமாக: ஆந்திரநாட்டில் 'பொப்பிலிப் போர்' என்னும் பாட்டு, சமீபகாலம்வரையில் பாமரமக்களிடையே வெகு சிறப்பாகப் பாடப் பட்டு வந்ததாகத் தெரிகிறது. நமது நாட்டில் அல்லி அரசாணிக் கதை, தேசிங்கு ராஜன் கதை, பாஞ்சாலங்குறிச்சி சட்டபொம்மு ஊமைத்துரையின் வீரவாழ்க்கை, இவையும் இவை போன்றவையும் பாமரமக்களால் பெரிதும் போற்றப்பட்டு இன்றும் வாய்ப்பாட்டாகப் பாடப்பட்டும் தெருகூத்தாக ஆடப்பட்டும் வருகின்றன.

இவ்விருவிதமான பாட்டுக்களும், எழுத்தறிவோ இலக்கியப்பயிற்சியோ அற்ற பாமரமக்கள் தாங்களாகவே தங்களுக்குரிய நுண்ணறிவினாலும் இயற்கையாகவுள்ள கலையுணர்ச்சியினாலும் எளிமையும் இயற்கையழகும் திகழப் பாடப்படுவனவாகும். இவ்விதமாக மக்களின் வாயினின்றே அவ்வப்போது உதிக்கும் பாட்டுக்களாக இருப் பதுமன்றி மக்களில் ஒருவனையும், மக்களின் உள்ளத்து உணர்ச்சிகளையும் இன்ப துன்பங்களையும் நன்கறிந்து அவற்றை அப்படியே பிரதிபலிக்கக்கூடியவனையும், மற்றெல்லோரையும்விட நன்றாக இசைத்துப் பாடக்கூடியவனையுமுள்ள கிராமக் கவி ராயன் அல்லது பாணன் பாடும் பாட்டுக்களாக இருப்பதும் உண்டு. அநேக மாக எல்லாக் கிராமங்களிலும் இத்தகைய கவிராயன் அல்லது பாணன் இருப்பான். இல்லையேல், சுமார் பத்துமைல் சுற்றுவட்டாரத்திற்கு ஒருவனேனும் இருப்பான், இவன் யாழ், தம்புரா அல்லது இவைபோன்றதோர் நரம்புக்கருவியையோ, உடுக்கை, மத்தளம்போன்றதோர் தோற்கருவியையோ, ஜால்ராவைப்போன்றதோர் கஞ்சக் கருவியையோ கையிலேந்தி வீடு வீடாகவும் தெருத் தெருவாகவும் கிராமப்பொது விடங்களிலும், ஊர் ஊராகவும் செல்வான்; தன் உள்ளத்துணர்ச்சிகளையோ, தான் கண்ட காட்சிகளையோ, கர்ணபரம்பரையாக வழங்கும் ஊர் வரலாறுகள், வீரப் பிரதாபங்கள், காதல் நிகழ்ச்சிகள், அபூர்வ சம்பவங்கள் முதலியவற்றையோ, கேட்போர் உள்ளம் நெகிழவும், மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியவும் திரும்பத் திரும்பத் தொண்டை கிழியப் பாடுவான். அந்த அந்தத் தொழில்களுக்குரிய பாட்டுக் களையும், வேதாந்தம், புராணம், இதிகாசம் ஆகியவற்றின் கருத்துக்களுக்கு இயைந்த

---

1. தாய்ப்பாட்டு, மணமகள் பாட்டு, நாட்டுப்பாட்டு, உழவன் பாட்டு ஆகிய மேற் கண்ட பாட்டுக்கள் ஐந்தும் ஸ்ரீ தேவேந்திர சத்தியார்த்தி சேகரித்துள்ள பாட்டுக் களினின்றும் எடுக்கப்பட்டவை; சுவாமி சத்தானந்த பாரதியார் எமக்காக மொழி பெயர்த்து உதவியவை.

பாடல்களையும் புனைந்து பாடி மக்களுக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் அளிப்பான். இவன் குறுநில மன்னர் செல்வர் ஆகியவர்களின் அவைகளிலும் அந்தப்புரங்களிலும் சென்று பாடிப் பரிசுபெறுவதும் உண்டு. கிராமமக்கள் இப்பாட்டுக்களை மனனஞ் செய்து தாங்களும் பாடுவர். இப்பாட்டுக்களை வர்க்களத்திலேனும் பொதுப்பொட்டல்களிலேனும் போர்க்களத்திலேனும் பாடி ஆடும் கூத்தர்களும் நாளடைவில் ஏற்பட்டனர். இப்பாணர்களும் பொருநர்களும் தங்களது கலையை நன்கு பயின்று அதனாலேயே ஜீவித்து வந்தனர்.

இவ்விரு வகையாலும் புனையப்படும் பாட்டுக்கள் ஊரெங்கும் நாடெங்கும் பரவி, மக்களின் நினைவிலே தலைமுறை தலைமுறையாகப் போற்றப்பெற்றுப் பல்லாண்டுகளாக மக்கள் வாயில் வழங்கும் பரம்பரைச் செல்வங்களாகவும், வாழ்க்கைக்கு இன்பமும் ஆறுதலும் அளிக்கும் ஊற்றுக்களாகவும் திகழ்கின்றன. இவைகளிற் பல சமீபகாலத்தில் தோன்றியனவாக இருக்கின்றன. இவையெல்லாமே பெரும் பாலும் எழுத்தறிவற்ற பொதுமக்களின் அறிவு ஆற்றலிலிருந்தே உதிப்பன வாதலால், இவற்றில் புலமையோ, கலைத்திறனோ, யாப்பிலக்கணப் பொருத்தமோ காணமுடியாது. இவற்றின் இசையிலும் சரியான மெட்டுக்கள் இரா. இவை பல்காலமாக மக்களிடையே உதித்தும் உருப்பெற்றும் வருவனவாதலாலும், ஆதியில் தனிப்புலவன் இவற்றிற்குக் கொடுத்த உருக் குலைந்து எல்லோருக்கும் பொதுவாய்விடுவதாலும், இவை எக்காலத்தில் எவரால் இயற்றப்பட்டன என நிர்ணயிப்பது இயலாத காரியமாகும். ஆயினும், இவற்றில் வாக்குவளமும், வடிவமும், வனப்பும், ஓசையின்பமும், கவிதைச்சுவையும், இயற்கை மணமும், இதய பாவமும், துடிக்கும் ஜீவனும் நிரம்பக் காணலாம்.

2

ஒவ்வொரு நாட்டிலும், அந்த அந்த நாட்டின் இயற்கை நிலைமை, மக்களின் இயற்கை யறிவு, குணாதிசயங்கள், பழக்க வழக்கங்கள், சரித்திரம், கலை, நாகரிகம் முதலிய பண்புகளுக்கும், மொழியின் இயல்புகளுக்கும் இயைய இத்தகைய நாட்டுப்பாட்டுக்கள் எவ்வளவோ மலிந்துகிடக்கின்றன. மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத இப்பாட்டுக்களும், இவற்றிற்குரிய ஆடல்களும் காணப்படாத பட்டிக்காடோ, கிராமமோ, ஊரோ இல்லையெனத் துணிந்து கூறலாம். ஆனால், துரதிருஷ்டவசமாக அன்னியராட்சி, அன்னியக்கலை ஆகியவற்றின் படையெழுச்சியினது பயனாகவும் சமூகப்பொருளாதார வாழ்க்கையில் ஏற்பட்ட பெரு மாறுதல்களினாலும், நம் கிராமங்களும் பட்டிக்காடுகளும் சீர்குலைந்து எல்லா விஷயங்களுக்கும் பட்டணங்களைச் சார்ந்திருக்கவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டன. இதனால் நாட்டுப்பாட்டுக்களும் நாட்டுக்கூத்துக்களும் கேட்போரும் பேணுவோரும் இன்றி நாளுக்குநாள் உருக்குலைந்தும் மறைந்தும் வருகின்றன. நூதனக் கல்விமுறைகளினால், கிராமங்களில் இயற்கையாக இருந்துவந்த, வாழ்க்கைக்குச் சுவையும் நிம்மதியும் தூய்மையும் இனிமையும் அளித்துக் கவிதை யுணர்ச்சியைத் தூண்டிவந்த வனதேவதைகள், யட்சிணிகள், நாகம், பூதம், பிசாசு முதலிய குட்டித் தெய்வங்களின் வழிபாடுகளும் அருகி வருகின்றன. பண்டிதர்கள் புனைந்த இதிகாச புராணப் பாட்டுக்களும், நாட்டுப்பாட்டுக்களின் பாணியில் அமைந்த பள்ளு, சிந்து, குறவஞ்சிபோன்ற பிரபந்தங்களும், நகரத்துப்பாட்டுக்களும் (இவற்றில் சொல் அலங்காரம், எதுகை மோனை நிரம்பிய சொல்லடுக்குகள் முதலியன காணப்படினும்

நாட்டுப்பாடல்களிலுள்ள இயற்கையும், எளிமையும், சக்தியும், ஜீவனும் இல்லை) பட்டிக்காடுகளில் படையெடுத்துவந்தனவாதலால், பாமரமக்கள் தாங்களாகவே தங்களது தேவையைப் பூர்த்திசெய்யப் புதுப்பாட்டுக்களைப் புனைவதற்கும் பழம் பாட்டுக்களைப் போஷித்து வருவதற்கும் வேண்டிய தூண்டுதலை இழந்தனர். செல்வர்கள், பிரபுக்கள், குறுநிலமன்னர்களின் ஆதரவுபெற்று ஜீவித்துவந்த பாணர்களும் பொருநர்களும் அவ்வாதரவு இழந்தும் இழிநிலையடைந்தும் தங்களது தொழிலை அடியோடு விடலாயினர். இலக்கிய ஆசிரியர்கள், இன்னும் கொஞ்ச நஞ்சம் உயிருடன் இருக்கும் இப்பாடல்கள் இலக்கியத்தில் சேர்த்துக்கொள்ளத் தகுதியுடையனவல்ல என இவற்றை அடியோடு புறக்கணிக்கலாயினர். இவ்வண்ணமாகப் பாரத அன்னை நெடுங்காலமாக ஈன்றுவந்த பெருஞ்செல்வங்கள் மெய்யப் பைய மறைந்து வருகின்றன.

சமீபகாலத்தில்தான் உலகெங்கும் நாட்டுப்பாடல்களுக்கும் ஆடல்களுக்கும் ஒரு புது மதிப்பு ஏற்பட்டு வருகின்றது. கலைஞர்கள் இயற்கையழகு, வீரகாம், இதய பாவம், உணர்ச்சிப்பெருக்கு ஆகியவை அபரிமிதமாகக் காணப்பெறும் இந்நாட்டுப் பாடல்களைக் கண்டெடுத்துப் போற்றி இலக்கிய மறுமலர்ச்சிக்கு ஆதாரமாகப் பயன் படுத்தி வருகின்றனர். மக்களின் இனஒற்றுமையையும், இனப்பற்றையும், நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும் தூண்டும் ஆற்றல் இந்நாட்டுப்பாட்டுக்களுக்கு உண்டு எனத் தேர்ந்த தேசீயத்தலைவர்கள் இவற்றைப் பொன்னேபோற் போற்றிப் பாதுகாக்க முயன்று வருகின்றனர். சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும், சமூகசாஸ்திர அறிஞர்களும், மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஆன்மவாழ்க்கை முதலியவற்றை உணர்ந்து இப்பாடல்களிலிருந்து சமூகவாழ்க்கையின் சரிதையையும் தனி மனிதனுடைய சரிதையையும் அறிய இயலுமெனக் கருதி, இவற்றைத் தேடிக் கண்டுபிடித்துச் சேகரித்து ஆராய்ந்து தொகுத்து வருகின்றனர். மெய்யுணர்வு நூலாசிரியர்கள், பண்டைக்கால மக்களின் மெய்யுணர்வு, கடவுள் வழிபாட்டுமுறை முதலியவற்றை ஆராய்வதற்கு இவை ஏற்ற கருவியெனக் கருதுகின்றனர். மொழியறிஞர்கள், பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்தே பல சொற்கள் ஏற்பட்டு வழங்கலாயின என்பதை உணர்ந்து இவற்றின் மூலமாக ஆதியில் மக்கள் பல சொற்களால் குறித்து வந்த பொருளை ஆராய்வதில் ஈடுபடுகின்றனர். இம்முயற்சிகளின் பயனாகப் பழைய நாட்டுக்கலைகள் (folklore), நாடோடிப்பாட்டுக்கள் (folksongs), நாட்டுப்பாட்டுக் கதைகள் (ballads), ஆகியவற்றைக் கண்டுபிடித்துப் பாதுகாக்கவும் புத்துயிரளிக்கவும் ஆங்காங்கே கழகங்கள் நிறுவப்பட்டு வருவதைக் காண்கிறோம். தொன்று தொட்டு உயிருடன் இருந்துவரும் ஸ்காட்டிஷ் பாலத்துகள் ஸ்காட்லாந்தில் வாழும் மக்களுக்கு இன்பம் பயப்பதுடன், உலகெங்கும் பரவியுள்ள ஸ்காட்டிஷ் மக்களுக்கு நாட்டுப்பற்றையும் இனஒற்றுமையையும் தூண்டும் ஒரு பெருஞ்சக்தியாக இருந்து வருவதையும், கெல்டிக் இனத்தைச் சேர்ந்த ஐரிஷ் மக்களுக்கு அவர்களுடைய நாட்டுப்பாட்டுக்கள் பேருக்கம் அளித்து அவர்களை ஒரினமாக்கி ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலையடையும் ஆற்றலை அளித்திருப்பதையும் கண்கூடாகக் காண்கிறோம்.

நமது பாரதநாட்டிலும், 1872-ல் வி. இ. கவர் என்னும் ரஷிகர் 'தென்னிந்திய நாடோடிப் பாட்டுக்கள்' என்னும் தலைப்பின்கீழ்ச் சில நாடோடிப்பாட்டுக்களை வெளியிட்டது முதல் இந்த இயக்கம் சென்ற 68 வருடங்களாக நடைபெற்று வருகின்றது. ஸர் ஆர். வி. டெம்பில், ஸர் ஜார்ஜ் கிரியர்சன் என்னும் அறிஞர்கள் இவ்விஷயமாகப்

பல ஆராய்ச்சிகள் செய்திருக்கின்றனர். ஸ்ரீ ஜபர்சந்து மேகான் என்பவர் கூர்ஜர நாட்டுப் பாட்டுக்களைச் சேகரித்துக் 'கவிதா கௌமுதி' என்னும் நூலை வெளியிட்டிருக்கிறார். வங்காளத்தில் ஸ்ரீ சந்திரகுமார தே, ஸ்ரீ தினேஷ்சந்திர சேனர் இவர்களின் பெருமுயற்சியினால் திரட்டப்பட்ட கீழ்வங்காள நாடோடிப்பாட்டுக் கதைகள் (ballads) கல்கத்தா பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. சென்ற வருடந்தான் இப்பாட்டுக்கதைகளில் ஒன்பதைப் பிரெஞ்சுப் போறிஞர் ரொமேய்ன் ரோலாந்தின் சகோதரியான மதலேன் ரோலாந்து பிரெஞ்சில் மொழிபெயர்த்து அந்நாட்டு ரஸிகர்களிடையே ஒரு பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறார். பீஹாரில் ஓரான், முண்டர் என்னும் பழங்குடிகளிடையே வழங்கும் நாட்டுப்பாட்டுக்களை ஜனத்தொகைக் கணக்கு அதிகாரியான ஆர்ச்சர் என்பவர் சேகரித்துள்ளார். அவற்றைப் பீஹார்ப் பொதுஜன எழுத்தறிவுக் கழகத்தார் நாகரி எழுத்தில் சிறு நூல்களாக அச்சிட்டு வருகின்றனர். கர்நாடகத்திலும் இவ்விஷயமாகச் சில முயற்சிகள் நடந்து வருகின்றன. மத்திய மாகாணத்தில் கோந்து என்னும் பழங்குடிகளிடையே வழங்கும் ஆடல் பாடல்களுக்கு வெர்ரியர் எல்வின் தூரை புத்துயிரும் புது ஊக்கமும் அளித்து வருகிறார். இலங்கையில் மட்டக்களப்புப் பகுதியில் கிடைக்கக்கூடிய பழந்தமிழ்ப்பாட்டுக்களை, திரு மா. பீதாம்பரன் சேகரித்துவருகிறார். சமீபத்தில் ஸ்ரீ தி. சதாசிவ ஐயர் "மட்டக்களப்பு வசந்தன் கவிதைத் திரட்டு" என்னும் பெயருடன் அப்பகுதியில் வழங்கும் சில நாடோடிப்பாட்டுக்களைத் தொகுத்து வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. பாஞ்சாலத்தில் பாட்டியாலா ஸம்ஸ்தானத்தில் பிறந்த ஸ்ரீ தேவேந்திர ஸத்தியார்த்தி என்பவர் சென்ற பதின்மூன்று வருடங்களாக ஊர் ஊராகவும் மாகாணம் மாகாணமாகவும் சுற்றியலைந்து பல மொழிகள் பேசும் பல ஜாதிமக்களிடையே வழங்கும் நாட்டுப்பாட்டுக்களைச் சேகரித்து வருகின்றார். இவர் சமீபத்தில் தமிழ்நாட்டிற்கும் விஜயம் செய்து சுமார் ஐம்பது பாடல்களைச் சேகரித்துச் சென்றிருப்பதாகத் தெரிகிறது.

இவ்வண்ணம் நம் நாட்டிலுள்ள பல பகுதியினரும் பாமரமக்களின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துள்ள செல்வங்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தங்கள் தங்களது மொழியிலுள்ள கலைகளை வளப்படுத்தி வருகையில், தமிழ் மக்களாகிய நாம்மட்டும் சுவை மிக்க இப்பணியில் ஈடுபடாமல் இச்செல்வங்கள் பையப் பைய மறைந்துவருவதைக் கண்ணுற்றும், ஏனோ தானேவென்றிருப்பது அழகாமோ? ஒவ்வொரு ஜில்லாவிலும் இவ்வாடல் பாடல்கள் குற்றயிருடனாவது இருந்துவருகின்றன. சில வருடங்களுக்குமுன் இக்கட்டுரையின் ஆசிரியர் இராமநாதபுரம் சீமையில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது, மண்டபத்தில் ஒரு பாமரரிடமிருந்து சேதுபதிகள், 'முதலாளிகள்' இவர்களின் அந்தரங்கவாழ்க்கை, காதல் லீலைகளைப்பற்றிய பழம்பாடல்கள் சிலவற்றைக் கேட்டார். அக்காலத்தில் அவற்றின் அருமையை அவர் தெரிந்துகொள்ளவில்லை. அவையும் அவை போன்று ஆங்காங்கு வழங்கும் பாடல்களும் இன்னும் உயிருடன் இருக்கின்றன என எண்ண இடமுண்டாயினும், அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து வெளியிடாவிடில், மக்களின் உள்ளத்தையும் பழைய சமூக அரசியல் நிலைமைகளையும் விளக்கக்கூடிய பல பாட்டுக்களும் பாட்டுக்கதைகளும் அடியோடு மறைந்து போகும் காலம் வந்துவிடுமென்றே அஞ்சவேண்டியதாக இருக்கின்றது. கல்கத்தா பல்கலைக்கழகம் செய்ததைப்போலவே நமது பல்கலைக்கழகமும் இவ்வேலையை மேற்கொண்டு இத்துறையில் தனித்திறமை பெற்றவர்களின் உதவியை நாடவேண்டுமென ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஒரு சமயம்

கூறினர். ஆனால் இதுவரையில் இவ்விஷயமாகப் பல்கலைக்கழகத்தாரேனும் பிறரேனும் முயன்றதாகத் தெரியவில்லை. சில வருடங்களுக்குமுன் தமிழன்பர் மகாநாடு நாட்டுப்பாட்டுக்களைப்பற்றிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இசைக்கலைக் கழகத்தாரும் இந்நாட்டுப்பாட்டுக்களைச் சேகரிக்கவேண்டுமெனச் சொல்லிவருகின்றனர். ஆனால் உருப்படியான நடவடிக்கை யாதொன்றும் இதுகாறும் எவரும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அந்தோ! தமிழ் நாட்டவரின் அசிரத்தைதான் என்னே!

[நாடோடிப் பாட்டுக்களைச் சேகரித்து வெளியிடுவதில் 'கலைமகள்' ஓரளவு தொண்டு செய்திருக்கிறதென்பதை அன்பர்கள் மறந்திருக்கமாட்டார்களென்று எண்ணுகிறோம். ஸ்ரீ தேவேந்திர ஸத்தியார்த்தி இங்கே வந்திருந்தபோது கலைமகளிற் கண்ட அப்பாடல்கள் முழுவதையும் கேட்டுக் குறிப்பெடுத்துக்கொண்டார். சில தமிழ் அன்பர்கள் வேறு சில பாட்டுக்களையும் தொகுத்து அளித்தனர். அவற்றை அறிந்த ஸ்ரீ ஸத்தியார்த்தியவர்கள் மீண்டும் தமிழ்நாட்டுக்கு வந்து அல்லியரசாணி மாலை, தேசிங்குராஜன் கதை முதலியவற்றைப்பற்றித் தெரிந்துகொண்டு போவதாக வாக்களித்திருக்கின்றனர். —ப - ர். 'கலைமகள்']



லௌகந்தர்ய நர்த்தனம்

டாக்டர் வே. ராகவன், எம். ஏ., பிஎச். டி.

[உசேனி வாத்ய ஆலாபனை. தாரிதாகுகு ஜம்தரி ரீரீரீ என்ற உசேனி ஸ்வரஜதியின் இரண்டு ஸந்தர்ப்பங்கள் வாய்ப்பாட்டிலும் வீணையிலும். மிருதங்கத்தில் மாத்திரம் ஒருதரம். கால் அடைவுகளில் ஒருதரம்.]

உருவத்தின் திவலைகள் லயசுத்தமாய்ச் சேருவதே அழகு என்பது. லயப்பிசகினால் இத்திவலைகள் தாறுமாறாய்ச் சேர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றன. விகாரமென்ற துர்நிலையிலிருந்து அழகு என்ற சுய நிலையை எல்லோரும் அடையமுடியும்; அடையவேண்டும். அதற்கு ஸாதனமும் லயத்தின் உபாஸனையே. சிறான லயவிந்யாஸங்களின் விளைவும் விந்தையுமே நிருத்தம் என்பது.

இந்தத் தத்துவத்தைக் காளிகா புராணத்திலிருந்து தோன்றிய சில பாவங்களைக் கொண்டு கற்பனை செய்யப்பட்ட 'லௌகந்தர்ய நர்த்தனம்' என்ற இந்த நாடகம் விளக்குகின்றது.

[கரவீரபுரத்தின் ராஜவீதியில், ஜனங்கள் எளனஞ் செய்ய, வேதாளன் பைரவன் என்ற இருவர் போய்க்கொண்டிருக்கின்றனர்.]

வேதாளன்: ஏ, பைரவா, வேகமாய் வாயேன்.

பைரவன்: நான்தான் நொண்டியென்று உனக்குத் தெரியுமே. மெள்ள நடந்து போயேன்.

வேதாளன்: என்ன சொல்லுகிறாய்? (ஜனங்கள் சிரிப்பு.)

ஒருவன்: நல்ல ஜோடி, இவன் கால் ஊனம். இவன் காது மந்தம்.

மற்றொருவன்: மூஞ்சிதான் என்ன அழகு இருவருக்கும்!

ஒருவன்: பேர்களையும் நன்றாய்ப் பார்த்துத்தான் வைத்திருக்கின்றனர்: வேதாளன், பைரவன்.

மற்றொருவன்: பிசாசம் என்றால் இந்த வேதாளனைப்போல்தான் இருக்கும்போல் இருக்கிறது. (சிரிப்பு.)

ஒருவன்: நண்பா, எனக்கு இதில் சிரிப்பொன்றும் தோன்றவில்லை. பைரவன் என்ற பெயரையொட்டி இவனைக் கண்டால் பயமாக இருக்கிறது. என்ன விகாரமான தோற்றம்! வா, நகர்ந்து செல்வோம்.

மற்றொருவன்: ஆம். நீ சொல்வதுபோல் விகாரம் என்பதுதான் உண்மையில் பயங்கரமானது. விகாரமே அபாயம்.

பைரவன்: வேதாளா, உன் காது மந்தமாயிருப்பது உன் பாக்கியம். ஜனங்கள் நம்மைச் செய்யும் ஏளனம் பொறுக்கமுடியவில்லையே. ஏளனத்தையாவது பொறுக்கலாம். இவர் நம்மைக் கண் எடுத்துப் பார்ப்பதையும் வெறுக்கின்றனரே, அந்த வெறுப்புத் தாங்கவில்லை. இதோ இருவர் நம் கோரவிகாரத்தைக் கண்டு பயந்து ஓடுகின்றனரே! இவ்வளவு கேவலமாகவா கடவுள் நம்மைப் படைக்கவேண்டும்?

வேதாளன்: பைரவா, தயங்கித் தயங்கி நிற்கிறாயே, வா. இந்த ராஜ வீதியைக் கடந்துவிட்டோமானால் நம்மைப் பழிக்க ஜனம் அதிகம் இருக்காது. வா, விரைந்து வா.

பைரவன்: அந்தோ, எங்கே சென்றால் என்ன? இந்த ஆபாஸத் தோற்றம் நம்மை விட்டுப் போகுமா? இதை எப்படி விலக்குவது? 'கரவீரபுரத்தில் கபோதர் என்ற மஹரிஷி தென்படுவார். அவரை நீர் அண்டினால் தேறலாம்' என்று நாம் சென்ற க்ஷேத்திரங்களில் சொன்னார்களே.

வேதாளன்: பைரவா, இதோ கூட்டத்தை விலக்கிக்கொண்டு நம்மைக் குறித்து யாரோ மஹாத்மா ஒருவர் வருகிறார், பார். ஏதோ நமக்கு நன்மை செய்ய வருகிறவர்போல் தோன்றுகிறார்.

பைரவன்: மஹரிஷே, வேதாள பைரவர் நாங்கள் இருவரும் வணங்குகிறோம். தாங்கள்தானே கபோதமஹரிஷி? இதுகாறும் அலைந்து அலைந்து கரவீரபுரம் முழுதும் ஏளனம் செய்யும் ஜனங்களைக் கண்டோமேயல்லாது, உதவியருளப் போகும் தங்களைக் காண முடியவில்லை.

மஹரிஷி: மைந்தர்களே, கிட்டே வாருங்கள்.

பைரவன்: பிரபோ, எல்லோரும் எங்களைக் கண்டு ஓடுகின்றனர். நீங்களும் விலகியிருங்கள். எங்கள் விகாரம் ஒட்டிக்கொண்டுவிடும்.

மஹரிஷி: பயப்படவேண்டாம். நான்தான் அந்தக் கபோதரிஷி. உங்களுக்கு வழிகாட்டவே வந்திருக்கிறேன். உங்கள் தாய் தந்தையர் யார்? எங்கே இருக்கின்றனர்?

பைரவன்: ஸ்வாமி, இதோ இவ்வேதாளனின் தாயைப்பற்றி ஒன்றுமே தெரியாது. என்னுடைய தந்தையைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவன் காது மந்தம். என் கால் ஊனம். எங்களுக்கு இந்த விகார உருவங்களை அளித்த தீவினையைப் போக்கிக்கொள்ள க்ஷேத்திரம் க்ஷேத்திரமாக அலைந்து தொழுதுவருகிறோம்.

வேதாளன்: சரகர் என்ற மகரிஷியொருவர் தாமாக எங்கள் இருவரையும் அழைத்து என் காதையும் பைரவனின் காலையும் சரியாய்ச் செய்துவிடுகிறேன் என்று சொன்னார். அவரால் ஒன்றும் முடியவில்லை.

மஹரிஷி: மைந்தரே, வருந்தாதீர்கள். சரகர் கொடுப்பது ரஸமல்ல. அவருடைய சப்பைக்கட்டும் நிலைக்காது. கடவுளின் அருளல்லாது வேறொன்றும் உதவாது. இங்கிருந்து காசி க்ஷேத்திரம் சென்று விசுவேசுவரனை வழிபடுங்கள். நம் வினைகளும் சிறுமைகளும் துன்பங்

களும் விகாரங்களும் அவ்விடம் சென்றதும் சாம்பலாய் எரிந்துபோவதால் அதற்கு மஹா ச்மசானம் என்று பெயர். பேரானந்தம் அவ்விடம் போனதும் பெருகுவதால் அதற்கு ஆனந்த கானனம் என்று பெயர். ஜ்யோதிர்மயமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருப்பதால் காசி என்று பெயர். முதல் முதலில் துயரத்தை விடுங்கள். ஆனந்தமடையுங்கள். அழகு அதன் மேல் வரும். காசியில் உபாஸிப்பதற்காக, இதோ ஸம்மதம், ஸந்தோஹம், நாதம், கௌரவம், பிரஸாதம் என்ற ஐந்து மந்திரங்களையும் உங்களுக்கு வழங்கினேன். ஸம்மதம் களிப்பு; ஸந்தோஹம் மனப்பூர்த்தி; அதன்மேல் எழுவது நாதம்; கௌரவம், பெருமை; பிரஸாதம் என்பது தெளிவு.

(கோச்சகக்கலிப்பா—சங்கராபரணம்)

ஞானமென்னும் அன்னமிங்கு நம்மன்னை வழங்குகின்றாள்
மானவர் வினைகளிந்த மயானத்திற் சாம்பலாம்
ஆனந்த வெள்ளமிதோ கங்கையென அடர்வதுபார்
தானன்றி வேறில்லாத் தலமாகும் காசியிதே.

[சங்கத்தின் நீண்ட மெதுவான நாதம்—ஸ்வரமாய்ச் சுருதியுடன் சேர்ந்த மணி—ஓம் என்று சுருதியுடன் சேர்ந்த ஒலி. பாட்டு—'நாத தநுமனிசம் சங்கரம் - நமாமிமே மனஸா சிரஸா நாததநுமனிசம்.']

பைரவன்: வேதாளா, நீயா பாடுகிறாய்? ஆகா எங்கிருந்து உனக்கு இந்த இசை லபித்தித்தது?

வேதாளன்: பைரவா, கபோத மஹரிஷியின் மந்திரங்களின் மஹிமை. இந்த விசுவேசுவரன் சந்நிதானத்தில் சங்க நாதம் ஏற்பட்டதும் அது என் காதை அடைத்துக்கொண்டிருக்கும் அழுக்கைக் கழுவிற்று. அதன்மேல் காதுவழியே ஓம் என்ற பிரணவநாதம் நுழைந்து உடம்பில் ஒரு மின் னொளிபோல் பாய்ந்தது. இதோ என்னை அறியாமலேயே அப்பிரணவ நாதமே இன்னிசையாய் வெளியே வழிந்து வருகிறது. (பாடுகிறான்.)

மோதகர நிகமோத்தம ஸாமவேத ஸாரம்
வாரம் வாரம்..... (நாத.)
ஸத்யோ ஜாதாதி பஞ்சவக்த்ரஜ
ஸ ரி க ம ப த நி வர ஸப்தஸ்வர
வித்யா லோலம் விதளித காலம்
விமல ஹ்ருதய நியாகராஜ பாலம் (நாத.)

பைரவன்: வேதாளா, நீ புண்ணியசாலி, உன் குறை தீர்ந்தது. என் காலோ இன்னும் ஊனமாய்த்தான் இருக்கிறது.

வேதாளன்: காது மந்தமும் கால் ஊனமும் மட்டும் போனால் போதுமா, பைரவா? நமக்கு ஏற்பட்ட இவ்விகாரத் தோற்றத்தை அழகு படுத்திக்கொள்ள அல்லவா நாம் வழி தேடிக்கொண்டிருக்கிறோம்?

பைரவன்: வேதாளா, இதோ இந்த நாதானுபவம் உனக்கு ஏற்பட்ட துமே உன் முகத்தில் ஓர் ஒளியும் கலையும் ஏற்பட்டுவிட்டன. எனக்குத் தான் இவ்வானந்தமூர்த்தி இன்னும் அருளவில்லை.

வேதாளன்: பைரவா, ஏதோ மறுபடியும் சங்கம் முதலிய நாதங்கள் கேட்கின்றனவே!

பைரவன்: ஒன்றும் கேட்கவில்லையே.

வேதாளன்: என் காதில் ஸூக்ஷ்மமாயும் தெளிவாயும் கேட்கின்றன. சற்று இரு; ஏதோ எனக்குச் செய்தியொன்று சொல்லப்படுகிறது.

பைரவன்: வேதாளா, என்ன, கண்ணை மூடிக்கொண்டுவிட்டாயே? வேதாளா, என்ன இது? நிஷ்டையில் நின்றுவிட்டானே.—ஆஹா, என்ன பாக்கியம் செய்தனையோ வேதாளா? உன்னுடன் கடவுள் கலக்கிறார். ஏகாந்தத்தில் உன்னுடன் என்ன பேசுகிறார் என்று எனக்குச் சொல்லக்கூடாதா? ஆஹா, இதோ தோழன் கண்ணைத் திறந்தான். வேதாளா, வேதாளா, என்ன இது?

வேதாளன்: பைரவா, வா. பிரதோஷவேளை வந்துவிட்டது. பகவான் பரமேசுவரர் இங்கிருந்து ஸகல கணங்களுடன் நாடகசாலை மென்ற இடத்திலிருந்து நர்த்தனம் செய்து தம் எதிரில் ஸந்தியாசலத்தில் வீற்றிருக்கும் வஷிஷ்டருக்குக் காட்சியளிக்கப் போகிறார். வா, அங்கே செல்வோம். வஷிஷ்டரிடம் போவென்று கடவுளின் உத்தரவு ஏற்பட்டிருக்கிறது.

பைரவன்: இதோ கரவீரபுரத்தில் நம்முன் தோன்றிய கபோத மஹரிஷி வருகிறார். இவரை வழி கேட்டுக்கொண்டு போவோம்.—மஹரிஷே, எங்கள் நல்வினையேபோல் தாங்கள் வேண்டும்போதெல்லாம் தோன்றி உதவுகின்றீர்கள்.

மஹரிஷி: வேதாள பைரவர்களே, வஷிஷ்டரிடம் போவென்று வேதாளனுக்கு ஆக்ஞை ஏற்பட்டிருக்கிறதென்று அறிந்து உங்களுக்கு வழி சொல்லவே நான் இங்கே தோன்றினேன்.

பைரவன்: பிரபோ, வஷிஷ்டரென்றால் யார்?

மஹரிஷி: பேசிக்கொண்டே போகலாம். வஷிஷ்டர் என்று நாம் மஹரிஷியாய்க் கருதும் பெயர் ஒரு தத்துவத்தைக் குறிக்கிறது. மானிடர் கோடிக்கு கோடி மடிந்து போய்க்கொண்டிருந்தும் தாங்கள் வஷித்து வருவதாய்க் கருதுகின்றனரே, அதைவிட ஆச்சரியம் என்ன வேண்டியிருக்கிறது? மடியாமல் தன் சுய நிலையிலேயே எப்போதும் இருந்து வருவதே இருப்பு, வாழ்வு, வாஸம். உண்மையில் வஷிப்பவரே வஷிஷ்டர்.

வேதாளன்: இப்படி அவர் உண்மையாய் வஷித்துவரும் இடம் என்ன தத்துவமோ?

கபோதர்: அழிந்துபோவதை ஒருவன் விரும்ப முடியுமோ? ஆகையால் விரும்பப்படுவதில் சிறந்தது அழிவின்றி நிலைத்து நிற்கும் தன்மையே. அதுவே உயர்ந்த காமம். ஆகையால் வஷிஷ்டர் காமரூபம் என்ற பிரதேசத்தில் இருக்கிறார். அழிந்துபோவது நன்றாக இருக்குமா? அழிவே

விகாரம். அழிவற்றதே அழகு. ஆகையால் அழகு என்பதே காந்தா என்ற நதியாய் அக்காமரூபத்தில் ஓடுகிறது. இவ்வழகிலும் அழிவற்றிருக்கும் தன்மையிலும் மனம் பாய்ந்தால், அதில் ஆழ்ந்திருப்பதை விட்டு வெளிக்கிளம்புமா? அழகிலும் அழிவின்மையிலும் ஆழ்ந்திருப்பதே உண்மையானதும் சிறந்ததுமான தியானம், ஸந்தியானம், ஸந்தியா. ஆகையால் காமரூபத்தில், அந்தக் காந்தா நதிக்கரையில் ஸந்தியாசலம் என்ற குன்று உயர்ந்து நிற்கிறது. அதில் வீற்றிருக்கிறார் வஸிஷ்டர், உமக்கு ஏற்பட்ட பரம குரு. ஆஹா, இதோ வானமெல்லாம் செம்மையாய்த் தெரிய ஆரம்பித்து விட்டது, பாருங்கள். நாம் ஸந்தியாசலப் பிரதேசத்திற்கு வந்துவிட்டோம்.

வேதாளன்: மஹரிஷே, இதோ ஸுகஷ்மமாய் என் காதினுள் காந்தா நதியின் பிரவாகம் செய்யும் இனிய ஓசை கேட்கிறதே.

கபோதர்: இனி நீங்களே வஸிஷ்டரிடம் செல்லுங்கள். நான் வருகிறேன்.

பைரவன்: வேதாளா, ஆஹா! என்ன ஸுந்தரமான இடத்திற்கு நாம் வந்திருக்கிறோம்! இங்கு வீசும் காற்றைப் பார்த்தாயா?

வேதாளன்: இக்காற்று வீசும்போது ஏற்படும் சப்தத்தைக் கவனி. ஹம்.....ஸ.....ஹம்.....ஸ.....ஹம்.....ஸ என்று வீசுகிறது.

பைரவன்: இதோ வஸிஷ்டபகவான் ஸந்தியாசலத்தின் உச்சியில் தமக்குள்ளேயே ஆழ்ந்தவராய் வீற்றிருக்கிறார். நமஸ்கரிப்போம். பிரபோ, வேதாள பைரவர் வணங்குகிறோம்.

வஸிஷ்டர்: சிவகணேத்தமரே, வாருங்கள்.

பைரவன்: பிரபோ, நாங்கள் வேதாள பைரவர். கேவலமான மானிடரிலும் கேவலமான உருவங்களெடுத்து உலகம் பழிக்க அலையும் பாபிகள். சிவகணேத்தமர் அல்ல.

வஸிஷ்டர்: நீங்கள் சிவகணேத்தமரே. நாம் சிவனைச் சார்ந்தவர் என்ற அறிவை இழந்தீர். அதை இழந்ததும் இழிவான பிறப்பை எடுத்தீர். மறந்ததை நினைவூட்டிக்கொள்ளுங்கள். தன்னைத் தான் மறப்பதே அஞ்ஞானம்.

வேதாளன்: மஹரிஷே, விளங்கச் சொல்லவேண்டும்.

வஸிஷ்டர்: நீங்கள் இருவரும் முன் இதோ எதிரில் இருக்கும் நாடக சாலத்தில் நர்த்தனஞ் செய்துகொண்டிருக்கும் சிவபெருமானுடைய கோஷ்டியிலிருந்த கணச்ரேஷ்டர்கள். சிவபிரானுடைய நர்த்தனத்தில் ராகத்தைத் தாங்கிவரும் கோஷ்டியில் இருந்த ஒருவனும், லயத்தைத் தாங்கிவரும் கோஷ்டியிலிருந்த ஒருவனுமாக இருந்தீர்கள். பக்கத்திலிருந்த அப்ஸரஸ்திரீ ஒருத்தியிடம் கவனம் பாய்ந்து ஒருவன் சுருதி தவறினான்; மற்றவன் லயந் தவறினான். சுருதி தவறியவனே காது மந்தமாயும், லயந் தவறியவனே கால் ஊனமாயும் பிறந்தனர்.

வேதாளன்: அப்படியா! அதுதானே நான் பிறந்ததும் தாய் தவறி விட்டாள்? பைரவனுக்குத் தகப்பன் தவறிவிட்டான்?

பைரவன்: பிரபோ, அது போகட்டும். எங்களை இவ்வளவு விகார மாக ஏன் படைக்கவேண்டும்? வேதாளன், பைரவன் என்றல்லவோ எங்களுக்குப் பெயர்கள் வந்துவிட்டன?

வஸிஷ்டர்: ஸௌந்தர்யமே கண்குளிரத் தமக்கெதிரில் இருந்தாட, அதில் மனம் செல்லாத உங்களுக்கு நீங்கள் நாடிய பொருள் எப்படியிருக் கும் என்பதைக் காண்பிக்க விகாரத்தைக் கடவுள் கொடுத்தார்.

வேதாளன்: இனி நாங்கள் எங்கள் சுய நிலைமையையும் ஸௌந்தர் யத்தையும் அடையும்பொருட்டுத் தாங்களே வழி அருளவேண்டும்.

வஸிஷ்டர்: வேதாளா, உனக்கு ஏற்பட்ட சுருதியின் குறைவு காசி க்ஷேத்திரத்திலேயே திருத்தப்பட்டது. பைரவா, உனக்கு லயானுபவம் ஏற்பட்டால் இந்தக் கால் ஊனம் திருந்திவிடும். லயானுபவமே அழகை யும் கொடுக்கும். உருவம் என்பது பல திவலைகளால் ஆனது. திவலை கள் தாறுமாறுய்ச் சேர்ந்தால் விகாரம் ஏற்படுகிறது. அவை லய சுத்த மாக இருந்தால் அழகு ஏற்படுகிறது. அவ்வழகை அடைவதற்கு லயத் தையே உபாஸிக்கவேண்டும். லயத்தின் விளைவும் விந்தையுமே நிருத்தம் என்பது. இந்த ஸௌந்தர்ய நிருத்தத்தை இதோ எதிரில் நாடக சைலத்தில் சிவபெருமான் ஆடிக்கொண்டிருக்கிறார். நானும் எனக்குள் ளேயே இந்த நிருத்தத்தின் வைபவத்தை எப்பொழுதும் கண்டு களித்துக் கொண்டிருக்கிறேன். நாதவித்தையிலும் சிறந்தது அஜபா என்றும் ஹம்ஸம் என்றும் சொல்லப்படும் லயவித்தை. நம் வாழ்க்கையே ஒரு பெரிய நிருத்தம். அதற்கு அஜபா நடனம் என்றும் ஹம்ஸ நடனம் என்றும் பெயர். நாம் உள்ளிழுத்து வைத்துக்கொள்ளும் பிராணவாயு 'ஹம்' என்ற நிறைந்த நாதத்தை உண்டுபண்ணுகிறது. நாம் விடும்போது அது 'ஸ' என்ற நிறைந்த நாதத்தை உண்டுபண்ணுகிறது. இவ்விரண்டு பிராண வாயுக்களின் லயத்தில் நம் ஆத்மா எப்பொழுதும் நர்த்தனஞ் செய்துகொண்டிருக்கிறது. இந்த அஜபா ஹம்ஸ நடனத்தையே நான் அனுபவித்துக்கொண்டு நிறைகுடம்போல் வீற்றிருக்கிறேன்.

வேதாளன்: பிரபோ, எங்களுக்கு அருளவேண்டும். நாங்களும் சிவ பெருமானுடைய ஸௌந்தர்ய நடனத்தை வழிபட்டு, விகாரம் ஒழிந்து அழகு பெறவேண்டும்.

வஸிஷ்டர்: இதோ நேராகச் செல்லுங்கள். போகும்போதே நர்த் தனத்தின் இன்னொலிகள் உங்களை வழிகாட்டி இழுத்துச் செல்லும். நீங் களும் அந்த நிர்த்தப்ரவாஹத்தில் கலந்துவிடுவீர்கள். போங்கள்,

[ஒரு ஜதி.]

வேதாளன்: பைரவா, வா. என் காதிற்கு நாடகசைலத்திலிருந்து எழும் நிருத்த ஒலிகள் நன்கு அனுபவமாகின்றன, வா. போகப் போக உனக்கும் அனுபவமாகும்.

பைரவன்: வேதாளா, இதோ ஒரு மயில் தன் தோகையை விரித்தாடி நிற்பதைப் பார்.

வேதாளன்: அது ஷண்முகனுடைய மயில்.

[மலைக் கற்பாறையின்மீது மாட்டுக்குளம்பு போடும் சப்தம். தாளபத்த மாய்க் குளம்பு சப்திக்கின்றது.]

பைரவன்: வேதாளா, அதோ பார். பரமேசுவரரின் ரிஷபம் தன் குளம்புகளால் நாடகசைலத்தின் பாறைகளில் அடைவு போடுகிறது. ஆஹா, என்ன முடிக்கான தீர்மானம். இதோ இப்படி அல்லவோ ரிஷபம் அடிகளைப் போடுகிறது!

[காலால் பைரவன் அடைவு தட்டும் சப்தம்.]

வேதாளன்: ஆஹா, பைரவா, என்ன ஆச்சரியம்! நீயும் கால் திருத்தப் பட்டு உயர்ந்த நர்த்தகனாய்விட்டாயே!

பைரவன்: வேதாளா, நீ பாடு; நான் ஆடிக்கொண்டுவருகிறேன். நர்த்தனமூர்த்தியைக் காணச் செல்லும் நாம் வெற்றுட்களாய் வெறும் கையுடன் செல்லக்கூடாது. நம் நர்த்தனத்தையே காணிக்கையாக்கி, நம் ஆடும் உடலையே கடவுளுக்கு அர்ப்பணஞ் செய்துகொண்டு போவோம்.

[வேதாளன் வஸந்த ராகத்தில் 'நடனமாடினார்' என்ற பாட்டின் இறுதியிலுள்ள சொற்கட்டை மாத்திரம் பாடுகிறான். இதற்குச் சரியாய்ப் பைரவன் போட்டு ஆடும் அடைவு சப்தங்கள்.]

வேதாளன்: பைரவா, என்ன, முகத்தில் ஒரு பிரகாசம் ஏற்படுகிறது உனக்கு?

பைரவன்: உன்னுடைய முகத்தின் கோணல்களெல்லாம் நேர்மை அடைந்துவிட்டனவே.

இருவரும்: நர்த்தனஞ் செய்வோம், நர்த்தனஞ் செய்வோம்;
விகாரம் ஒழிய நர்த்தனஞ் செய்வோம்.
நர்த்தனஞ் செய்வோம், நர்த்தனஞ் செய்வோம்;
அழகை யடைய நர்த்தனஞ் செய்வோம்.

[இரண்டையும் ஒரு தாளத்தில் அமைத்து ஆட்டத்துடன் பாடுக.]

கேதாரம்—'ஆனந்த நடனப்ரகாசம்'

வேதாளன்: பைரவா, நாம் நிருத்தேச்வரனின் ஸந்நிதானத்தை நெருங்கிவிட்டோம், நெருங்கிவிட்டோம். இதோ ஸுப்ரஹ்மண்யர் நிருத்தமூர்த்தியைப் பாடும் பாட்டுக் கேட்கிறது பார்? வா,

'ஆனந்த நடன ப்ரகாசம்'

பைரவன்: நிருத்தமூர்த்தியின் நர்த்தனமே என் கண்முன் தோன்றி விட்டதே. இதோ லயஸௌந்தர்யமே எனக்கு ஸாக்ஷாத்காரமாய் விட்டதடா!

[பைரவன் பாடிக்கொண்டு ஆடுகிறான். இந்த இடத்தில் ஆனந்த நடனப்ரகாசத்தின் ஜதிகள் வரவேண்டும். ஜதிகள் வாத்தியத்தில் ஒரு முறை. வாயால் ஒரு முறை. மத்தளத்தில் ஒரு முறை. காலடைவுகளில் ஒரு முறை. எல்லாம் சேர்ந்து ஒரு முறை.]



* 12-1-41 ஆர்ட்ரா தரிசனத்தன்று சென்னை ரேடியோ நிலயத்தில் நடிக்கப் பட்டது.

எதிர்பாராதது

கௌரி

"வழக்கமாம் வழக்கம்! வழக்கத்தின் தலையில் இடிவிழ!" என்று முணுமுணுத்துக்கொண்டே அறையிலிருந்து வெளிக்கிளம்பினான் தியாகு, காமிராவும் கையுமாக.

*　　*　　*　　*

தியாகு இவ்வளவு காலமாக ரூ. 3/15-க்கு வாங்கிய மட்ட ரகப் பெட்டிக் காமிராவைத்தான் வைத்துக்கொண்டு திண்டாடியவண்ணம் இருந்தான். இப்பொழுது கையில் இருப்பதோ சென்ற வருஷம் சத்யாக்கிரஹம் செய்து மாமனரிடமிருந்து பறித்த தீபாவளிப் பரிசு. விலை ரூ. 315-தான். காமிரா கிடைத்த பெருமையால் இப்பொழுது ஓர் அங்குலம் உயரமாகவே அவன் காணப்பட்டான்.

காலேஜ் மூடி விடுமுறைக்காகக் கிராமத்திற்கு வந்திருந்தான் அவன். ஊரில் ஓர் இடம் பாக்கி இல்லை. குளத்தங்கரை முதற்கொண்டு கோபுர வாசல் வரையிலும் காத்திருந்து பலரகப் படங்களைப் பிடித்துக் குவித்தான். அநேகமாய் எல்லாவற்றையும் பத்திரிகைகளுக்கு அனுப்பினான். தியாகுவின் அதிருஷ்டம் அப்படங்களில் ஒன்று மாத்திரம் பிரசுரமாகி அதற்கு ஒரு பேனாவும் பரிசாகக் கிடைத்தது. அதனால் அவனுக்குக் குஷி பிறந்துவிட்டது. பத்திரிகைகளுக்குப் படமெடுத்து அனுப்பும் நிபுணனாகிவிடுவது என்று அன்றே தீர்மானித்துக்கொண்டான். ஆகையால் ஏராளமாகப் பிலிம் சுருள்களை வாங்கிச் சென்றவிடமெல்லாம் படம் பிடித்துக்கொண்டே இருந்தான்.

ஊரிலே ஒருவர் பாக்கி இல்லை. கோடியகத்துக் கோபுரவிலிருந்து முதலகத்து மொட்டைவரையிலும் ஒவ்வொருவரையும் படம் பிடித்தாகி விட்டது. அவனுக்கு அந்தப் பேனாப் பரிசுக்குப் பிறகு வேறு ஒன்றும் கிடைக்கவில்லை. எவ்வளவோ பத்திரிகைகளுக்குப் படங்களை அனுப்பினான்.

மானிடவர்க்கத்தவரைப் படம் பிடிப்பதில் தியாகுவுக்கு ஒரு தனித் திறமை. முதலில் முகத்தை நன்றாகக் கவனிப்பான். ரூபவிரூபங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பான். எப்படி எடுத்தால் படம் நன்றாக இருக்கும் என்று நிதானமாக யோசிப்பான். கடைசியில் தீர்மானம் செய்து படம் எடுப்பான்.

அவனுக்குத்தான் எவ்வளவு பொறுமை! குனிந்து நிமிர்ந்து குரங்கைப்போல் மரம், மதில்சுவர், மொட்டைக் கோபுரம் இவைகளின் மேல்

தாவிப் பாய்ந்து வேர்க்க விறுவிறுக்க, வெயில் பசி தாகம் இவற்றைப் பாராமல் காத்திருந்து ஸமயோசிதமாய்ப் படம் பிடிப்பதில் அவன் நிபுணன். வீட்டில் படம் பிடிக்க ஆரம்பித்தாலோ அவன் தாயும் ஸஹோதரியும் வந்துவிடுவார்கள் ஒத்தாசைக்கு; கடை பரப்பிவிடுவார்கள். வீட்டிலுள்ள உரல், குந்தாணி, பீப்பாய், தகரப்பெட்டி எல்லாம் முற்றத்தில் பரப்பியாய் விடும். "அப்படி இருந்தால் நன்றாக இருக்குமா? இப்படி இருந்தால் நன்றாக இருக்குமா?" என்று வாய் ஓயாமல் கேட்கும் தங்கையின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல எவ்வளவு பொறுமை வேண்டும்! தங்கை எந்நேரத்திலும் குழந்தைகளைச் சிங்காரிக்கக் கிளம்பிவிடுவாள். தலை மயிரைக் கண்ணாடிபோல் புருவம் வரையிலும் படியும்படி வாரி முகத்தில் பவுடரை அப்பிக் கொண்டுவந்து நிறுத்திவிடுவாள். என்ன செய்வான் தியாகு?

தன் கலைத்திறமையையும் ஒதுக்கி வைத்துவிட்டு வரிசையாய் ஆட்டு மந்தையைப் படம் பிடிப்பதுபோல் பிடித்துத் தள்ளுவான். இதே மாதிரி இரண்டு மாதமாய் நாள் தவறினாலும் தவறும்; போட்டோ எடுப்பது தவறவில்லை. அலுப்பில்லாமல் எடுத்துத் தள்ளிவந்தான்.

ஆனால் தியாகுவுக்கு மட்டும் ஒரு விஷயத்தில் மிகவும் குறை. இரண்டு மாதமாக ஒவ்வொரு நாளுந்தான் எதிர்பார்க்கிறான், வீட்டில் யாராவது தன் மனைவி காமுவைப் படம் எடுக்கச் சொல்லுகிறார்களோ வென்று. அதைப்பற்றிப் பேச்சு மூச்சே இல்லை. ஜாடை மாடையாய், "வீட்டில் வேறு யாராவது இருக்காளா படம் எடுத்துக்க?" என்று கேட்டுப் பார்த்தான். ஏதாவது பதில் வந்தால்தானே!

காமு புக்ககம் வந்து சில மாதங்கள் ஆகியிருந்தன. வீட்டில் மற்றெல்லாரையும்விடக் காமுதான் அழகு. எலுமிச்சம் பழம்போல் நிறமும், படிப்படியாய்த் தலைமயிரும், முகத்தில் எப்பொழுதும் புன்சிரிப்பும் கொண்ட காமுவை வீணையும் கையுமாக ஒரு படமாகிலும் பிடிக்க முடியவில்லை என்றால் எவ்வளவு வருத்தமாக இராது தியாகுவுக்கு? சென்னையிலிருந்து கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு வரும்பொழுது அவன் கட்டிய மனக்கோட்டை என்ன? இப்பொழுது நடப்பது என்ன? 'காமுவை எவ்வளவு விதமாகப் படம்பிடிக்கலாம்? எந்த நிலை நன்றாய் இருக்கும்?' என்று எண்ணி எண்ணி மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். ஒரு தனி 'ஆல்பம்' காமு படங்களாலேயே நிரப்பத் திட்டம் போட்டிருந்தான். இத்தனைவிதம் யோசனை செய்து ஒன்றுகூட எடுக்க இயலவில்லை. வீட்டிலோ வாய்தவறி, "காமு எங்கே? உங்களுடன் அவளும் வந்து உட்காரக்கூடாதா?" என்று கேட்டுவிட்டால் அவ்வளவுதான்; வேறு வினையே வேண்டாம். ஒரு பெரிய பிரசங்கம் நடந்துவிடும். "நன்னாத்தான் இருக்கு! நாட்டுப்புறத்திலே பொண்டாட்டியை வச்சுப் படம் எடுத்தா எல்லாரும் சிரிக்க மாட்டாளோ?" என்று ஆரம்பித்துவிடுவாள் தாய். ஆத்திரம் பொங்கிவரும் தியாகுவுக்கு. இவ்வளவு கால

மாய்த் தாயை எதிர்த்துப் பேசாத சாதுத் தியாகுவுக்கு இன்று திடீரென்று அசட்டுத் துணிச்சல் எப்படி வரும்? அம்மாவுக்குத் தெரியாமல் படம் பிடிக்கலாமென்றால் எங்கே போய் எடுப்பது? காமுவை எப்படி அழைத்துக்கொண்டு போவது? அவள்தான் சமையல் அறையிலேயே சமாதி ஆகிவிடுகிறாளே? தியாகுவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பீறிக் கொண்டு வந்தது ஆவேசம்.

இன்றைத்தினம் மாலை ஆறுமணி வண்டியில் சென்னைக்குக் கிளம்பியாகவேண்டும். நாளைக்குக் காலேஜில் ஆஜராகவேண்டும். காமுவை ஒரு படமாவது பிடித்துத் தன் மேஜைமேல் சட்டமிட்டு வைத்துக் கொண்டாலொழியத் தனக்கு மனநிம்மதி இராதெனத் தோன்றியது தியாகுவுக்கு. அவனுடைய நண்பர்கள் வந்து படம் யாருடையது என்று கேட்டால், இவ்வளவு அழகாய் இருப்பது தன் மனைவியுடையதுதான் என்று சொல்லிக்கொள்ளும்பொழுது தியாகுவுக்கு இருக்கப்போகும் பெருமையை யாரால் வர்ணிக்கமுடியும்? இந்த ஆசையை எவ்வளவு நாள்தான் தியாகு அடக்கி வைத்துக்கொண்டிருப்பான்?

இந்த விஷயத்தில் தாயின் கண்டிப்பு, தியாகுவுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. ஊருக்குப் போவதற்குள் எப்படியாவது காமுவை ஒரு படம் பிடித்தாகவேண்டும் என்ற தீர்மானத்துடன் வெளிக்கிளம்பினான். அறையை விட்டு வெளியே வந்து தாழ்வாரத்தில் இரண்டடி வைத்தானோ இல்லையோ, மருமகள் மொட்டு, "மாமா" என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடிவந்து அவன் காலை ஆசையாகக் கட்டிக்கொண்டாள். தியாகுவின் பாடு சற்றுத் திண்டாட்டமாய் முடிந்தது. கையிலோ காமிரா. அவள் பார்த்துவிட்டால் அனர்த்தந்தான்; உடனே தன்னைப் படம் பிடிக்கவேண்டுமென்று சங்கிலி ஸ்வரம் பிடிக்கக் கிளம்பிவிடுவாள். "கொழந்தே ஆசைப்படறதேடா; அதை எடுக்கப்படாதா?" என்று பாட்டி வந்துவிடுவாள், பேத்திக்குப் பரிந்துகொண்டு. பேத்தியையும் பாட்டியையும் எவ்வளவு தடவை படம் பிடிக்கிறது! சப்பை மூக்கு, சாடிவாய்.

ஒரு கையால் மொட்டுவின் முதுகில் தட்டிக்கொடுத்து, "மொட்டு, ரெயிலுக்கு நாழியாய்விட்டது; வழி விடு" என்று அவளை வாசலுக்கு அனுப்பிவிட்டு, "உஸ் அப்பாடா!" என்று பெருமூச்சுடன் சமையல் அறையை நோக்கி வேகமாய் நடந்தான் தியாகு.

ஒருவேளை காமு வெளியிலேயே எங்கேயாவது இருப்பாளோ என்ற சபலத்தால் இரண்டாங்கட்டு, கொல்லை, ரேழி எல்லாம் ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்தான். ஒரு சந்தடியையும் காணவில்லை. காமுவின்மேல் இன்று சற்றுக் கோபந்தான் வந்தது தியாகுவுக்கு. 'நான்தான் இன்னிக்கி ஊருக்குப் போறேன்னு தெரியுமே; இன்னிக்கிக்கூட என்ன வேலை? நாசமாய்ப்போற வேலை!' என்று உருத்துக் கொட்டிக்கொண்டே மொண்டிக் கைமாதிரி ஒரு கையைத் துண்டிற்குள் மறைத்துக்கொண்டு சமையலறை

வாசற்படியில் போய் நின்றவண்ணம் உள்ளே எட்டிப் பார்த்தான். அவனுக்கு இருந்த ஆவல், "காமு, இங்கே வா" என்று கூப்பிட்டுவிட வேண்டும் போலத்தான் தோன்றியது. ஆனல் அப்படிக் கூப்பிட்டுவிட்டு அந்த வீட்டில் இருக்கமுடியுமா?

தியாகுவின் ஜாடை தெரிந்து காமுதான் வெளியில் வந்து விடுவாளா! அவள் ஓர் அசடு. ஸமயம் பார்த்து மாமியார் பின்னல் புகுந்துகொள்ளத் தான் அவளுக்குத் தெரியும். தியாகு தவிக்கிற தவிப்பு அவளுக்குத் தெரியுமா? அப்பொழுதுதான் அதிக வேலை செய்கிறவள்போல் விளக்குமாற்றைக் கையில் எடுத்துக்கொண்டு வெண்சாமரம் போடக் கிளம்பிவிடுவாள் காமு! இந்த வைபவத்தில் தியாகுவுக்கு ஏன் கோபம் வராது?

தியாகுவின் தாய் சுவரோரமாய்க் கையில் விசிறியைப் பிடித்த வண்ணம் படுத்துக்கொண்டிருந்தாள். காமு கட்டைமணையின்மேல் உட்கார்ந்துகொண்டு, 'சொய், சொய்' என்று தோசையை வார்த்துத் தட்டில் எடுத்துப் போட்டுக்கொண்டிருந்தாள். இதைப் பார்த்ததும் தியாகுவுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. வாசற்படியின் அருகிலேயே நின்றபடி அதிகாரத்துடன் காமுவைப் பார்த்துக்கொண்டே, "தீர்த்தம்" என்றான். உள்ளே சென்றால், "கையில் என்னடா?" என்று அம்மா கேட்டுவிடுவாளோ என்ற பயம். தியாகுவின் குரலைக் கேட்ட காமு குதித்து எழுந்தாள். தியாகு தன் யுக்தி பலித்துவிட்டதென்று காமுவையே நோக்கினான். அடுத்த க்ஷணம் அவன் முகத்தில் அசடு வழிந்தது. காமு கையை அலம்பிக்கொண்டு தீர்த்தபாத்திரத்தை எடுப்பதற்குள் தியாகுவின் தாய் எழுந்து பக்கத்தில் தோண்டியிலிருந்த தீர்த்தத்தைச் சரித்து, "இந்தாடா, தியாகு. அதுக்குள்ளே ரெயிலுக்கு நாழியாயிடுத்தா என்ன?" என்று கேட்டுக்கொண்டே அதை அவனிடம் நீட்டினாள். வெளியிலேயே நின்றுகொண்டிருந்த அவன் உள்ளே வரும்படியாகிவிட்டது. கையில் என்னவென்று அம்மா கேட்கப்போகிறாளே என்ற பயம். பதில் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் தத்தளித்தான். அவன் எண்ணமே வேறு. தீர்த்தம் சாப்பிடத் தாகமும் இல்லை. தீர்த்தம் கேட்டால் காமு எடுத்துக்கொடுப்பாள், வெளியிலிருந்தபடியே அவளைத் தன்னுடன் வரும்படி ஜாடைகாட்டலாம் என்று எண்ணினான் அவன். இப்பொழுது நடந்ததோ நேர்விரோதம். காமு திரும்பிப் பார்த்தால் தானே? தோசையிலேயே முழுகியிருந்தாள். ஒருவாய்த் தீர்த்தங்கூடச் சாப்பிடாமல் டம்ளரை 'டங்' என்று வைத்துவிட்டு வெளியே வந்தான் தியாகு.

சென்னையில் நாகரிகமான பெண்கள் புருஷர்களுடன் சந்தோஷமாகவும் தாராளமாகவும் பழகுவதைப் பார்த்த அவனுக்கு இந்த நிலை வெறுப்பைத்தான் உண்டுபண்ணியது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஓரே சீறலாய்ச் சீறிக்கொண்டு கிணற்றங்கரையை அடைந்தான். அடுத்த நிமிஷம், "சொம்பு எங்கே போயிடுத்து? எழவு! ஒண்ணும் இருக்கறதில்லே"

என்று கர்ஜித்தான். உடனே சமையலறையிலிருந்து யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. தியாகுவின் மார்பு படபடவென்று அடிக்க ஆரம்பித்தது. எங்கே இதற்கும் அம்மா வந்து நிற்பாளோ என்று நடுங்கினான் அவன். புடைவையின் மஞ்சள் கரை கண்ணில் தென்பட்டதோ இல்லையோ தியாகுவுக்கு மயிர்க்கூச்செறிந்தது. அடுத்த நிமிஷம் காமு அவன் எதிரில் பிரசன்னமானாள்.

சிவந்த மேனியில் வேர்வைத்துளிகள் தோன்றச் சிரித்தவண்ணம் அங்கேயே கீழே வைத்திருந்த செம்பை எடுத்துத் தியாகுவின் கையில் கொடுத்தாள். ஆனால் தியாகுவுக்கு நிஜமாய்ச் செம்பா வேண்டும்? செம்பும் வேண்டாம்; தீர்த்தமும் வேண்டாம்; எல்லாம் காமுவை அழைப்பதற்காக அவன் செய்த சூழ்ச்சிகள். இப்பொழுதுதான் அவனுக்கு உயிர் வந்தது. ஸமாசாரத்தைக் காமுவிடம் சொல்லலாமென்றாலோ ஸந்தோஷத்தால் வாய் குழறியது. உடம்பெல்லாம் வேர்த்தது. ஜாடையாய் அவளை அழைத்துக்கொண்டு அளவில்லா மகிழ்ச்சியுடன் புறக்கடைப் பக்கம் புறப்பட்டான். வேறு எங்கே போகமுடியும்?

காமுவோ வருவதற்குச் சற்றுத் தயங்கினாள். மாமியாரின் கண்டிப்பு அவளைக் கொஞ்சம் பயத்திற்குள்ளாக்கியது. தியாகுவோ காமுவை இன்று படம் பிடிக்காமல் விடுபவனாக இல்லை.

கொல்லைப்புறத்தில் ஒவ்வோர் இடமாக நிறுத்திப் 'போஸ்' செய்து பார்த்தான். ஒரு பக்கம் போனால் குட்டிச்சுவர், ஒரு பக்கம் வைக்கோல் போர், ஒரு புறம் மாட்டுக்கொட்டகை; போதாக்குறைக்கு எங்கே போனாலும் தென்னைமரம். இன்னும் சிறிது தூரம் சென்று பார்க்கலாமென்றாலோ சகதி, எருக்குழி. எவ்வளவோ பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்தான். சரியான இடம் ஒன்றும் அமையவில்லை. மணியோ ஆகிவிட்டது. காமுவோ உள்ளே போகப் பறக்கிறாள். எந்த நிமிஷம் அவளைத் தேடிக் கொண்டு அம்மா வந்து விடுவாளோ என்ற பயம் ஒரு புறம். இவ்வளவு கலக்கத்துடன் படம் பிடித்தால் எப்படித்தான் வரும்? இருந்தாலும் ஏதாவது ஓர் இடத்தைப் பார்த்து முதல் படத்தைப் பிடித்துவிடுவது; பிறகு படத்தைச் சுற்றி இருக்கும் விவரங்களை வெள்ளையாய் அடித்து விடுவது என்ற தீர்மானத்திற்கு வந்தான் தியாகு.

குட்டிச்சுவரின் அருகில் காமுவை நிறுத்தினான். அவளை ஒவ்வொரு புறமாகத் திருப்பித் திருப்பி நிற்கவைத்து எந்தப் 'போஸ்' நன்றாய் இருக்கிறதென்று யோசித்து யோசித்துப் பார்த்தான். அடிக்கடி பின்புறம் வீட்டுக் கொல்லைக் கதவையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஒருவிதமாய்க் காமுவைக் கையில் நாலு பூவரசம் பூவுடன் நிறுத்திவிட்டுத் தானும் காமிராவுடன் ஐந்தாறு அடி பின்வந்து நின்றான்.

அப்பாடா! கடைசியில் தான் நினைத்ததை நிறைவேற்றத் தொடங்கினான் தியாகு! ஒரு பக்கம் ஸந்தோஷத்தால் வாய் குழறுகிறது. திண்டாடித்

திக்குமுக்காடிக்கொண்டு அவன் படம் பிடிக்க ஆரம்பித்த வைபவத்தை நாம் ஒரு படம் பிடிக்காமற் போனோமே!

"ரெடியா?" என்றான் தியாகு. ஒரு கண்ணை மூடிக்கொண்டு மறு கண்ணால் காக்காய்மாதிரி பார்த்துக்கொண்டிருந்தான் காமுவை. காமி ராவின் பித்தான்மேலும் விரலை வைத்தாய்விட்டது. 'கிளிக்' என்பது ஒன்றுதான் பாக்கி. கம்பீரமாய், "ஸ்டெடி! ஒன், டூ, த்ரீ" என்றான். குட்டிச்சுவரிலிருந்து "மியாவ்" என்று கத்திக்கொண்டு ஒரு கடுவன் பூனை காமுவின் அருகில் குதித்தது. "ஐயையோ!" என்றாள் காமு. தியாகுவுக்கோ அடங்காத கோபம் வந்தது. இவ்வளவு சிரமப்பட்டு நிறுத்திவைத்த 'போஸை' அவள் கலைத்துவிட்டாளே! "கிளிக்"—அவன் கை தானாகவே பித்தானை அமிழ்த்திவிட்டது. "முட்டாள்! பூனைக்கா இவ்வளவு பயம்?" என்று அவன் ஆத்திரத்தோடு கூவினான். "பூனை இல்லை; திரும்பிப் பாருங்கோ" என்பதைக் கேட்டவுடன் திரும்பிப் பார்த்தான். கொல்லைப்புறக் கதவண்டை அவனுடைய அம்மா நின்று கொண்டிருந்தாள். "நன்னா இருக்கு நீங்க கொட்டமடிக்கிறது! நான் நாலு நாழியா உன்னைத் தேடிண்டு இருக்கேனே; இங்கே ஆம்படையா னோடே குதிச்சுக் கூத்தாடறயோ?.....ஏண்டா! ரெயிலுக்கு நாழியாச்சு இன்னியே"—மேலே அவள் சொல்வதைக் கேட்கத் தியாகுவுக்குத் தைரியமில்லை. பேசாமல் எல்லாவற்றையும் சுருட்டி மடக்கிக்கொண்டு வேறு வழியாக வாசலை அடைந்தான்.

தியாகு மாலை ஆறுமணிவண்டியில் ஏறிச் சென்னைக்குப் போய்ச் சேர்ந் தான். அந்த வண்டி அவனுக்குப் பெரிய உதவி செய்தது. இன்னும் இரண்டுநாள் ஊரில் இருந்தால் அம்மாவின் வாய்க்குத் தப்ப முடியுமா?

பட்டணம் போனவுடன் முதல் வேலையாகத் தான் எடுத்த படத்தை 'டெவலப்' பண்ணிப் பார்த்தான். அவன் ஆச்சரியத்திலே மூழ்கிவிட் டான். அவன் குட்டிச்சுவரையோ, பூனையையோ, ஒரே குழப்பமான காமு வின் தோற்றத்தையோ எதிர்பார்த்தான். அதில் காமு ஒரு தெய்வப் பெண்ணைப்போல ஒரு தனிக்கோலத்தில் இருந்தாள். கலைத்திறமை யெல்லாம் கலந்து அமைத்தாலும் அப்படி ஒரு பிரதிமையைத் தீட்டுவது அசாத்தியம். என்ன அழகு! புடைவைத் தலைப்பை ஒரு கையால் பிடித்துக் கொண்டு மருண்ட மான்போல் உருண்ட விழிகளுடன் ஒரு பக்கமாகச் சாய்ந்துகொண்டு கன்னத்தில் ஒரு விரலை வைத்தபடி நின்ற அந்தக் கோலம், யாரோ கைதேர்ந்த நடனசிங்காரியாகிய அணங்கொருத்தி பலநாள் பழகிய கலைத்திறமையினால் ஓர் அபூர்வ அபிநயத்தோடு நிற்பதுபோல இருந்தது. விஷயத்தைச் சொல்லாமல் யாரிடமாவது அதைக் காட்டினால், "இது யார் ஐயா புதிய நட்சத்திரம்?" என்றுதான் கேட்பார்.

தியாகு அதிலிருந்து பல பிரதிகள் எடுத்தான். ஒரு படத்திற்கு வர்ணம் தீட்டிச் சட்டமிட்டுத் தன் அறையில் மாட்டினான். அந்தப் படம் வந்தவர்கள் கண்களைக் கவர்ந்தது.

ஒரு சித்திரகார நண்பர் அந்தப் படத்தை அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு அனுப்பச் சொன்னார். அவனுக்கு அந்தப் படத்தைப் பிடித்ததே பெரிய வெகுமானம் கிடைத்ததுபோலிருந்தது. இந்த நாட்டில் சில பத்திரிகைகளுக்கு அந்தப் படத்தை அனுப்பியதோடு அமெரிக்காவுக்கும் அனுப்பினன். அவனுக்கு அதிருஷ்டம் அடித்தது. அந்தப் பத்திரிகைக் காரர் 'ஓர் அழகிய இந்தியக் கலாவதி—இணையற்ற நடனக்கோலம்' என்றெல்லாம் தலைப்புக் கொடுத்து அதை வெளியிட்டார். அந்தப் படத்தைப் பார்த்தது முதல் இந்திய நடனக் கலையில் மோகம் கொண்டு அந்தத் துறையில் சில அமெரிக்கர் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். பத்திரிகையிலிருந்து இரண்டாவது பரிசாக இருநூறு டாலர் தியாகுவுக்கு வந்தது. அதுமுதல் அவனுக்கு அமெரிக்கப் பத்திரிகையில் ஓர் இடம் கிடைத்தது. அப்புறம் இந்தியாவில் கேட்கவா வேண்டும்? 'படங்கள் எனக்கு உனக்கு' என்று அவனைப் பிய்த்துப் பிடுங்கினர்கள்.

* * * *

இப்போது தியாகு ஒரு பெரிய 'ஸ்டிடியோ'வுக்குத் தலைவனாக விளங்குகிறான். அவனுடைய போட்டோ படங்களுக்குக் கிராக்கி அதிகம். அவன் தாய் அவனது புகழ் இவ்வளவு பரவியிருப்பதைப் பாராமலே காலமாகிவிட்டாள். இப்போதெல்லாம் யாராவது அதிகமாகப் பழகுகிறவர்கள் தியாகுவை ஸ்தோத்திரம் செய்தால் அவன் அவ்வளவு புகழையும் வேறு பக்கம் திருப்புபவனைப்போல, "எல்லாம் இந்தத் தேவியின் கடாக்ஷ வீக்ஷண்யம்" என்று தன் தர்மபத்தினி ஸ்ரீமதி காமாட்சி அம்மாளை இரண்டு கையாலும் காட்டுவான். அந்தத் தர்மபத்தினியின் படங்களை அவன் நூற்றுக்கணக்காக எடுத்து அழகழகாக வர்ணம் கொடுத்து மாட்டியிருக்கிறான். படம் பிடிக்கும் திறமையில் அவன் எவ்வளவோ அபிவிருத்தியும் அடைந்திருக்கிறான். ஆனாலும் அந்தக் குட்டிச்சுவருக்கருகில் அமைந்த நடனக்கோலத்தின் தனியழகு வேறு எதிலும் இல்லை. "காமு கலாபவனம்" என்று ஒரு பெரிய சித்திரசாலையை ஸ்தாபிப்பதற்கு அவன் இப்போது முயன்றுகொண்டிருக்கிறான்.






சிறுவர் பகுதி

குரங்கு சொன்ன யுக்தி

'ஸேனு'

விந்தியமலை அடிவாரத்திலுள்ள ஒரு காட்டில் சிறிய குளம் ஒன்று இருந்தது. அதன் கரை ஓரத்திலே ஓங்கி வளர்ந்திருந்த ஓர் ஆலமரத்தின் பொந்தில் தவளை ஒன்று தன் குடும்பத்துடன் வசித்துவந்தது. அது அடிக்கடி மிகவும் சிரமப்பட்டு அந்தப் பொந்தின் அருகில் உள்ள ஒரு சிறிய இடத்தை உழுது, அதில் நாய்க்குடைச்செடி பயிரிடும். அந்த நாய்க்குடையை அண்டிப் புழு பூச்சிகள் அநேகம் வரும். அவற்றைப் பிடித்துத் தின்று அது தன் குடும்பத்துடன் சுகமாக ஜீவித்து வந்தது.

ஒருநாள் ஒரு யானைக்குட்டி அந்தப் பக்கமாக வந்தது. நாய்க்குடைச் செடிகள் செழிப்பாக வளர்ந்திருந்தன.



அவற்றைப் பார்த்ததும் அதற்கு உண்டான ஆனந்தம் சொல்லி முடியாது. பெரியதாக இருந்த குடையொன்றைப் பிய்த்து எடுத்துத் தன் தலைமேல் வைத்துக்கொண்டு கூத்தாடத் தொடங்கியது.

தவளை அப்போது தன் குடும்பத்துடன் குளத்திற்குக் குளிக்கச் சென்றிருந்தது. அது சற்றுநேரங் கழித்துத் திரும்பி வந்தது. தன் பயிரை யானைக்குட்டி அழித்து ஆர்ப்பாட்டம் செய்வதைக் கண்டது. மண்டு

கத்தின் வயிறு பகீரென்றது. "கொட்ர கொட்ர" என்று தன் பாஷையில் அது பேச ஆரம்பித்தது; "ஐயா, ஏன் என் பயிரைப் பாழாக்குகிறீர்? உம்மை வேண்டிக்கொள்கிறேன்: தயைசெய்து விலகிப்போம்" என்றது.

யானைக்குட்டியின் காதில் இது விழ்ந்தது. ஆனாலும் அது தவளையை மதிக்கவில்லை. பின்னும் இரண்டு பெரிய நாய்க்குடைகளாகப் பார்த்துப் பிய்த்தது. பிறகு பல வற்றை மிதித்துவிட்டுக் குளத்தில் குதித்து உல்லாஸமாக விளையாட ஆரம்பித்தது.

இம்மாதிரி அது தினமும் மண்டூகத்திற்குத் தொந் தரவு கொடுத்துவந்தது. மண்டூகம் இதே கவலையினால் இளைத்துப் போய்விட்டது. ஒருநாள் அதற்கு நட்பான குரங்கு ஒன்று அந்தப் பக்கம் வந்தது. மர்க்கடம் வைத் தியம் செய்வதில் தேர்ச்சி பெற்றது. மண்டூகத்தைப் பார்த்ததும் அது திடுக் குற்று, "நண்பா! ஏன் இப்படி இளைத்துப் போய்விட்டாய்?" என்று கேட்டது.



மண்டூகம் சோர்ந்த முகத்துடன் நடந்தவற் றைக் கூறியது. மர்க் கடம் இதைக் கேட்டு விட்டுச் சற்று நேரம் யோசித்தது; பின்னர் அதன் முகத்தில் ஓர் ஒளி உண்டாயிற்று. அது மண்டூகத்தின் காதருகில் வந்து ஏதோ ரகசியமாகச் சொல்லியது. அதைக் கேட்டதும் மண்டூகம் சந்தோஷத்தினால் பருத்துப் போய் ஒரு துள்ளுத் துள்ளியது; "அண்ணா, உன் யுக்தியே யுக்தி. நான் மண்டு என்பது உண்மையே. எனக்கு இந்தச் சிறிய விஷயம் தோன்றவில்லையே!" என்று ஆச்சரியப் பட்டது.

மறுநாள் யானைக்குட்டி மண்டுகத்தின் வயலை அடைந்து நாய்க்குடை ஏதாவது அகப்படுமா என்று தேடிப் பார்த்தது. எல்லாம் பாழாகி விட்டபடியால் சற்று நேரம் அந்த இடத்தைக் காலால் மிதித்துவிட்டுக் குளத்தில் குளிக்கப் போயிற்று. தண்ணீரில் மூழ்கி மூழ்கி விளையாடிக்கொண்டே இருக்கையில் திடீரென்று அதன் காது ஒன்றனுள் ஏதோ கோளாறு ஏற்பட்டது. பலதடவை யானைக்குட்டி காதைப் படபடவென்று அடித்துப் பார்த்தது. ஆயினும் உள்ளே ஏதோ குடைவதுபோல் இருந்தது. ஒன்றும் தோன்றுமல் அது குளத்தை விட்டு ஓட்டம் பிடித்தது.


மறுநாள் யானைக்குட்டி அங்கே வரவில்லை. ஆனல் மர்க்கடத்தைத் தேடிக்கொண்டு யானைக்குட்டியின் தாய் வந்து, "ஐயா, வைத்தியரே, என் மகனுக்குக் காதிலே ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது. நேற்று இரவெல்லாம் அவன் தூங்கவே இல்லை. சற்று அவனை வந்து பாருங்கள்" என்று கெஞ்சியது.

மர்க்கடம் மருந்துப்பெட்டியை எடுத்துக்கொண்டு அதனுடன் புறப்பட்டுப் போயிற்று. யானைக்குட்டி ஒரே நாளில் இளைத்துத் துரும்பாகிவிட்டது. குரங்கு மிகவும் ஊக்கமாக அதன் காதைப் பரிசோதித்தது. "கண்ட இடங்களுக்கெல்லாம் போய் விளையாடுகிறாயா?" என்று கேட்டது.

அதற்குள் யானைக்குட்டியின் தாய், "நான் சொல்வதை அவன் கேட்டால்தானே? தினமும் கண்ட குட்டைக்கும் சதுப்பு நிலத்துக்கும் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டு வருகிறான்" என்று கடிந்து கூறியது.

குரங்கு, "அதுதான் நானும் எண்ணினேன். அங்கே ஏதோ பூச்சியோ புழுவோ சமயம் பார்த்துக் காதினுள் புகுந்துகொண்டிருக்கவேண்டும். இந்தத் தடவை எப்படியோ காதைக் குணமாக்கிவிடுகிறேன். ஆனல் மறுபடியும் அங்கெல்லாம் போய் ஏதாவது நேர்ந்தால் என்னல் ஒன்றும் செய்ய இயலாது; பெரிய ஆபத்தாய்விடும். என்ன?" என்று யானைக்குட்டியை நோக்கிக் கூறியது.

யானைக்குட்டி, "ஐயோ! வலி பொறுக்க முடியவில்லையே! இனிமேல் நான் அந்தப் பக்கமே போகமாட்டேன். சத்தியம் பண்ணுகிறேன். என் காதுவலியைத் தீர்த்தால் உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு" என்று கதறியது.



குரங்கு, "சரி" என்று சொல்லித் தன் கையில் இருந்த பெட்டியிலிருந்து ஓர் ஊது குழலை எடுத்து யானையின் காதுக்குள் ஊதியது. உடனே அக்காதுக்குள்ளிருந்து மண்டுகம் வெகு வேகமாகத் துள்ளிக் குதித்துத் தத்தித் தத்தித் தன் இருப்பிடத்தை நோக்கி ஓட்டம் பிடித்தது.

அதோடு யானைக்குட்டியின் காது வலியும் தீர்ந்தது; மண்டுகத்தின் கவலையும் நீங்கியது.



ஏஜெண்டுகள் தேவை

கலைமகள் பிரதிகளை விற்பனை செய்யவும் சந்தாதார்கள் சேர்க்கவும் கீழ்க்கண்ட இடங்களில் ஏஜெண்டுகள் தேவை. நிபந்தனைகளுக்கு எழுதுக.

தஞ்சாவூர்	செங்கற்பட்டு
பழநி	கடலூர்
ராசீபுரம்	ரங்கூன்
திருப்பூர்	பெங்களூர்
கரூர்	லாஹூர்
வேலூர்	புனா

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

காலஞ்சென்ற ராவ்சாஹிப் பி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள்
('தர்மாலயம்', மயிலாப்பூர்)

ஸம்ஸ்கிருத மூலத்துடன் வசனநூபத்தில் இயற்றிய
மூலத்திற்கு நேரான அழகிய தமிழ் மொழிபெயர்ப்பு

ஆரண்யகாண்டம்:
விலை ரூ. 5-0-0

சுந்தரகாண்டம்:
விலை ரூ. 6-8-0

பாலகாண்டமும் கிஷ்கிந்தாகாண்டமும்
தயாராகிவிட்டன.

சுந்தரகாண்ட மாஹாத்ம்யமும் பாராயணம்
செய்வதற்கு மூலமும்:
விலை ரூ. 1-4-0

*

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்

கபால குண்டலா

பங்கிம் சந்த்ரர் நாவல்—நெ. 11

வங்காளி மூலத்திலிருந்து

ஸ்ரீமான்

த. நா. குமாரசுவாமி, பி.ஏ.

அழகாய் மொழிபெயர்த்தது.

படங்கள் கொண்டது

விலை ரூ. 1-8-0

(எங்கள் புதுப்புத்தக ஜாப்தாவுக்கு எழுதுக.)

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

THE SANATANA DHARMA

OR

THE HINDU VIEW OF LIFE

BY

SRI SANKARACHARYA

OF

SRI KANCHI KAMAKOTI PITHAM

Translated from the original in Tamil

BY

V. R. SUNDARARAMAN, M.A.

With a Foreword by

Sir MANMATHNATH MUKERJEE, Kt.

Ex-Chief Justice, High Court, Calcutta.

Price Rs. 1-8-0... Postage extra.

r Kalaimagal Subscribers ... Price Rs. 1-4-0. Postage extra.

THE MANAGER, KALAIMAGAL,

MYLAPORE, MADRAS.

கலைமகள் காரியாலய வெளியீடுகள்

		ரூ.	அ.
1.	முருகன் ஓர் உழவன்—ஸ்ரீமான் வேங்கட ரமணி அவர்கள் எழுதிய அரிய நாவல் ...	1	8
2.	குமுதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதிய நாவல் - வங்காளியிலிருந்து ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்த்தது ...	1	8
3.	மாயாவிநோதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதியது - ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது	1	8
4.	பைரவி—சரத்சந்த்ர சட்டர்ஜி எழுதியது- ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்த்தது...	1	8
5.	விதியின் செயல் முதலிய கதைகள்— ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், ஐ.வி.எஸ். எழுதியது ...	0	6
6.	ரிஷப விஜயம்—ஓர் இனிய நாடகம் - ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது ...	0	12
7.	அற்புத உலகம்—ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ. பி.எல் எழுதியது. ஸர் வி. வி. ராமன் முதலிய பேரறிஞர்கள் புகழ்ந்து பாராட்டும் அரிய புஸ்தகம் ...	1	0
8.	ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாஸங்கள்— 50 உபந்யாஸங்கள் கொண்ட புஸ்தகம் ...	1	8
9.	ஸ்ரீ சங்கர விஜயம்— ஸ்ரீ காமகோடி பீடாதி பதியவர்கள் திருவாய்மலர்ந்தருளியது ...	0	10
10.	சியாமளா தண்டகம்— வடமொழி மூல மும் தமிழுரையும் - ஸ்ரீ அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள், எம்.ஏ., எல்.டி. மொழி பெயர்த்தது ...	0	1
11.	கலைமகள் சித்திரப் படங்கள்—10 படங்க ளடங்கிய ஸெட் ஒன்றுக்கு ...	0	6
12.	த்வாதசோபநிஷத்—தமிழில் ஸ்ரீ என்.எஸ். ராஜாராமையர் மொழிபெயர்த்தது ...	2	0
13.	மூப்பெரு வீரர்—ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாப கேசையர் எழுதிய அரிய நவீனம் ...	2	0
14.	நிர்மலா—ஸ்ரீ பிரேம்சந்த் (ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஹிந்தியிலிருந்து மொழி பெயர்த்த நாவல்) ...	1	8

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

புதிய வசன புஸ்தகம்

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

எழுதியது

நினைவு மஞ்சரி

292-பக்கங்கள்—24 வரலாறுகள்—9 படங்கள்

—:o:—


இதில் அடங்கிய விஷயங்கள்

1. கடல் கடந்து வந்த தமிழ்
2. மணிமேகலையும் மும்மணியும்
3. செண்டலங்காரர்
4. இடையன் எறிந்த மரம்
5. மாவிந்த புராணம்
6. உத்தம சம்பாவனை
7. அந்தத் தொடிசு
8. அடுத்த குறள்
9. மணி ஐயர்
10. வி. கிருஷ்ணசாமி ஐயர்
11. பெற்ற மனம்
12. மல்லரை வென்ற மாங்குடியார்
13. மன்னர்சாமி
14. ஆவலும் அதிர்ஷ்டமும்
15. பெரிய திருக்குன்றம் சுப்பராமையர்
16. கிர்ர்ரனி
17. அன்னமும் சொன்னமும்
18. பூசைத்தாயார்
19. நாயகர் மீட்சி
20. பொன்னம்பலம் பிள்ளையின் திருப்பணி
21. எங்கள் பாவம்
22. ஒருவன்தானா?
23. உயிர்மீட்சி
24. தாய் நாடு

விலை ரூபா ஒன்று * தபாற் கூலி வேறு.

மானேஜர் - தியாகராஜ விலாஸம் - திருவல்லிக்கேணி

மைபரவி



சரத் சந்த்ர சட்டர்ஜி

விலை ரூ. 1-8-0. கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை



மயிலாப்பூர், மெட்ராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு,
ராராயணசாமி ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது.